
முஸ்லிம்

# வீரப் பெருமக்கள்



22
122/3.65
OFFICE MADRAS
... OFFICER
25 JUL 1965
... AND PUBLICITY DEPARTMENT
Q7WX
N59
110919

...தி பதிப்பகம்

...r, திருச்சிராப்பள்ளி.

## முஸ்லிம்
# வீரப் பெருமக்கள்

ஆசிரியர்
**ஸையித் இப்ராஹீம், எம். ஏ., எல். டி.,**
ஜமால் முஹம்மத் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

**வளர்மதி பதிப்பகம்**
தென்னூர்
திருச்சிராப்பள்ளி

முதற்பதிப்பு-9 பிப்ரவரி 1959. 30, ரஜப் 1378.
இரண்டாம் பதிப்பு-ஏப்ரல் 1965. துல்ஹஜ் 1384.

Q7Wx
N59-2

## உட்பொருள்.

1. ஹஸ்ரத் அலீ (ரலி)
2. இமாம் ஹுஸைன் (ரலி)
3. ஸஅத் பின் அபீ வக்காஸ் (ரலி)
4. காலித் பின் வலீத் (ரலி)
5. அபூ உபைதா (ரலி)
6. அம்ரு பின் ஆஸ் (ரலி)
7. உக்பா பின் நாபீ
8. முஹம்மத் பின் காஸிம்
9. தாரிக் பின் ஜியாத்
10. ஸலாஹுத்தீன் அய்யூபி
11. அலப் அர்ஸலான்
12. ருக்னுத்தீன் பய்பர்ஸ்
13. இரண்டாம் முஹம்மத்
14. கமால் அதா துர்க்
15. முடிவுரை

உரிமை பதிவு

110919

விலை ரூபாய் ஒன்று

ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சி-2, (போன்: 2416)

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

# முன்னுரை

இஸ்லாமிய வரலாற்று வெளியில் மிகச் சிறப்புடன் வீரமுக்கள் காட்சியளிக்கின்றார்கள். இவர்கள் குர்ஆனையும், பெருமானாரின் திரு வாழ்க்கையையும் பின்பற்றி நடக்க முயன்றார்கள். இவர்களது மேலான செயல்களை எதிரிகளும் போற்றும்படியான பெருமை பெற்றார்கள்.

ஹானிபால், அலக்ஸாந்தர், செங்கேஸ்கான், ஹலாகு கான் என்போர் வெற்றி வீரர்களாக இருக்கலாம். ஆனால், அவர்களது வாழ்க்கை நமக்குத் தூய்மையான வழிகாட்டியாகுமா என்பது சந்தேகம். மேல் நாட்டாரோ, கிளைவ் டியூப்லே, போன்ற ஒழுங்கீனரையும் போற்றிப் புகழ ஆரம்பித்துவிட்டார்கள்.

பழங்கால முஸ்லிம் பெருமக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் இறையச்சத்துடன் செயலாற்றினார்கள். தங்களது பொறுப்பை உணர்ந்தார்கள். குர்ஆனையும் நபி பெருமானாரின் நல் வாழ்க்கைநெறியையும் பின்பற்றி எழுச்சி பெற்றார்கள். பிற்கால மக்கள் இவ்விரண்டு வழிகாட்டிகளையும் மறந்தபொழுதுதான் இஸ்லாமிய அரசியலும், கலாச்சாரமும் வீழ்ந்தன என்று ராதா கிருஷ்ணன் போன்ற அறிஞர்கள் இன்று கூறுகின்றார்கள்.

பழங்கால முஸ்லிம்களுக்கு பெரு வியப்பிற்குரிய வெற்றிகள் கிடைத்ததைக் கண்டு சரித்திராசிரியர்கள் வியப்பும், அதிர்ச்சியும் அடைகின்றார்கள். இதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. அதிர்ஷ்டத்தால், மந்திர சக்தியால், தற்செயலால், அற்புதங்களால், அவர்கள் வெற்றி காணவில்லை. ஆனால், ராணுவத் திறமை, கூட்டுறவு, ஒற்றுமை, பொறுமை, தெளிவாக ஆராய்ந்து திட்டமிடல், திட்டப்படியே

செயலாற்றி முடிவுகாணல், பிற நாட்டாரின் நவீன ராணுவ முறைகளைத் தழுவும் நடைமுறையில் செயலாற்றல், வீரம், போர்க்களத்தில் மனம் தளராமை, இறையச்சம், இறையருள், இவை அனைத்துமே அவர்களது வெற்றிக்குக் காரணமாக அமைந்திருந்தன.

வாலிப உலகமே! இந்நூலில் உள்ள வீர வரலாறுகளை வாசித்து, இறைநெறியில் வாழ்க்கை நடத்தி, மக்களது சேவையில் ஈடுபடுவாயாக! உன் முன்னோர்களிடமிருந்த கட்டுப்பாடு, நம்பிக்கை, ஒற்றுமை, தன்னடக்கம், தியாகம், அகமியத்தின் அந்தரங்கத்தை அறிதல், வீரம், அபாயத்திற்கு அஞ்சாமை முதலான உயர்ந்த பண்புகளை நீ போற்றினால் மட்டும் போதாது. அவற்றைப் பின்பற்றுவாயாக! அறநெறி தழுவிய வளமான வாழ்க்கையைச் செயலாற்றுவதற்கான ஆயத்தம் செய்வாயாக! ஆமீன்!

ஜமால் முஹம்மத் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.
9—2—59. 30 ரஜப் 1378.

ஸையித் இப்ராஹீம்

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா நிர்ரஹீம்
நஹ்மதுஹூ வ நுஸல்லி அலா ரஸூலில் கரீம்

# முஸ்லிம் வீரப் பெருமக்கள்

## 1. ஹஸ்ரத் அலீ (ரலி)

ஹஸ்ரத் அலீயின் பெயரை அறியாதார் இருக்கமாட்டார்கள். "வீரத்திற்கு அலீ" என்பது பழமொழியாகி விட்டது. அவருக்கு "அஸதுல்லாஹ் — இறைவனுடைய சிங்கம்" என்று பெயர். வீரத்திலும் ஞானத்திலும் சிறந்தவர் அலீ. முஸ்லிம் மெஞ்ஞானிகளான ஸூஃபிகளெல்லாம் ஹஸ்ரத் அலீயையே தங்கள் ஞானகுருவாகக் கொண்டாடுகிறார்கள்.

நபி பெருமானாரை வளர்த்து வாலிபராக்கிய அபூ தாலிப் உடைய மைந்தரே ஹஸ்ரத் அலீ. அபூ தாலிப் என்பவர் நபி பெருமானாரின் பெரிய தந்தை. அபூ தாலிபுடைய குடும்பம் மிகப் பெரிது. குடும்பக் கஷ்டம் ஏற்பட்டதால், ஹஸ்ரத் அலீயை நபிபெருமானாரே வளர்த்தார்கள்.

பெருமானாருக்கு நபிப் பட்டம் வந்தவுடன், சிறுவரில் ஹஸ்ரத் அலீயே முதலாவதாக முஸ்லிமானார். அவர் இருபத்து மூன்று வயதுள்ளவராக இருக்கையில், பெருமானார் மக்கா நகரிலிருந்து இடம்பெயர்ந்து, ஹிஜ்ரத் செய்து, மதீனாவுக்குச் சென்றார்கள். அப்பொழுது மக்காவிலே கடும்பகைவர்கள் பெருமானாரின் வீட்டைச் சூழ்ந்து பெருமானாரைக் கொலைசெய்யத் தயாராகி நின்றபொழுது, ஹஸ்ரத் அலீயே இரவில் பெருமானாரின் படுக்கையில் படுத்து, எதிரிகளின் வாளுக்கு அஞ்சாமல் தூங்கினார்.

மதினாவுக்குச் சென்ற பிறகு, இவர் பெருமானாரின் அருமைப் புதல்வி பீபீ பாத்திமாவை மணஞ்செய்து கொண்டார். பீபீ பாத்திமாவின் புதல்வர்களான இமாம் ஹஸன் (ரலி), இமாம் ஹுஸைன் (ரலி) இவ்விருவருடைய சந்ததிகளே 'ஸையித்' என்று அழைக்கப்படுகின்றார்கள்.

ஹஸ்ரத் அலீயின் வாளுக்கு "துல் பிகார்" (Dul-Fiqar) என்று பெயர். பல இஸ்லாமிய தற்காப்புப் போர்களில் எதிரிகளைத் தோற்கடித்து அவர் வெற்றிபெற்றார். குறிப்பாக மதீனாவுக்கு வடக்கிலுள்ள கைபர் என்னுமிடத்தில் ஹஸ்ரத் அலீ காட்டிய வீரச்செயல்கள் சரித்திரப் புகழ் பெற்றவையாகும். அன்றுவரை தோல்வி என்பதை அறியாத எதிரியை ஹஸ்ரத் அலீ ஒரே வாள் வீச்சில் முடிவுசெய்தார். கைபர் கோட்டைக் கதவை உத்வேக வீர உணர்ச்சியில், இறைவன் இஸ்லாத்திற்குத் துணை செய்கின்றான் என்ற முழு நம்பிக்கையில் பெயர்த்து எறிந்தார். பிறகு, அந்தக் கதவை இருபது பேர் கூடித் தூக்க முயன்றார்கள். ஆனால், அவர்களால் அதைத் தூக்க முடியவில்லை.

பெருமானார் மக்கா நகரை வென்ற பொழுது ஹஸ்ரத் அலீயே இஸ்லாமியக் கொடியை ஏந்திச்சென்றார். பிறகு, ஹுனைன் போரில் எல்லோரும் எதிரிகளின் அம்புகளுக்கு அஞ்சியோடிய நேரத்திலே, ஹஸ்ரத் அலீ பெருமானாரின் அருகில் நின்று, இறுதியில் வெற்றி கண்டார். அவர் எல்லாப் போர்களிலும் — தபூக் போர் தவிர — பெருமானாருடன் இருந்தார்.

நான்காம் கலீபாவாக அவர் நியமனம் பெற்ற பிறகு, வெகு திறமையுடன் ஆட்சிசெய்தார். ஆனால், அச்சமயம் இஸ்லாமிய உலகம் இரண்டு பிரிவுகளாகப் பிளவுபட்டிருந்தது. ஸிரியா நாட்டு கவர்னர் அமீர் முஆவியா, ஹஸ்ரத் அலீக்கு விசுவாசப் பிரமாணம் செய்ய மறுத்தார். ஆதலால், இருவருக்கிடையில் தப்பெண்ணங்கள் தோன்றி, முஸ்லிம்கள் இரு பிரிவுகளாகி, ஸிப்பின் (Siffin) என்னுமிடத்தில் போர் நடந்தது. அதற்குப் பிறகு, இருவருக்கிடையில் மத்தியஸ்தம் பேசப்பட்டுப் பேச்சுகள் முறிந்துவிட்டன. பிறகு, அமீர் முஆவியா ஸிரியாவில் டமஸ்கஸ் நகரிலும், ஹஸ்ரத் அலீ இராக் நாட்டில் கூபா நகரிலும் கலீபாக்களாக இருந்தார்கள்.



ஹஸ்ரத் அலீ வெகு சாதாரண வாழ்க்கை நடத்தி, இறையச்சத்துடன் காலங்கழித்தார். அவரிடம் மெய்க்காப்பாளர்களும் இரகசியப் போலீஸும் கிடையாது. ஒரு நாள் காலைத் தொழுகைக்காக வீட்டிலிருந்து நன்றாய் விடியு முன் பள்ளிவாயிலுக்கு வரும்பொழுது, அவர் குத்திக் கொல்லப்பட்டார். இரக்கம் நிறைந்த அந்த மகான் தம்மைக் கொல்ல வந்தவனைச் சித்திரவதை செய்யக் கூடாதென்று கட்டளையிட்டுவிட்டு இறந்தார்.

இஸ்லாமிய அறிவிலும், இறை வணக்கத்திலும், சொற்பொழிவிலும், ஹஸ்ரத் அலீ சிறந்தவர். அவரது வீரத்திற்காக அவரை, "அஸதுல்லாஹ்—அல்லாஹ்வின் சிங்கம்" என்கின்றோம். இதைப்போன்றே, அவரது அறிவுக்காக, அவரை "பாபுல் இல்ம் — அறிவின் நுழை வாயில்" என்கிறோம். தாம் உண்பதைப் பிறருக்குக் கொடுத்துவிட்டுப் பட்டினியாக இருந்துவிடுவார். ஈகை, அன்பு, எளிய வாழ்க்கை, பெருமையின்மை, தியாக வாழ்க்கை இவற்றைப் பின்பற்றும்படி அவர் தமது மரணப் படுக்கையில் தமது புத்திரர்களுக்கு உபதேசித்தார். ஹஸ்ரத் அலீ தமது பெரும் பண்புநலன்களால் அக்காலத்திலும், இக்காலத்திலும், எக்காலத்திலும் உயர்ந்த சிறப்புள்ளவராகத் தோன்றுகின்றார். அவருடன் இஸ்லாமியக் குடியரசும் முடிவடைந்தது. நேர்வழி நடந்த, குலபாயே ராஷிதீன் ஆட்சியும் முடிவடைந்தது.

### தியாக மன்னர்

# 2. இமாம் ஹுஸைன் (ரலி)

இமாம் ஹுஸைன் என்பவர் நபி பெருமானாரின் பௌத்திரர். இவரது தந்தை ஹஸ்ரத் அலீ (ரலி). இவரது தாயார் பெருமானாரின் அருமைப் புதல்வி பீபீ பாத்திமா என்பவர். ஈகையிலும், இரக்கத்திலும், நேர்மையிலும், இறை நேசத்திலும், வணக்கத்திலும் ஹஸ்ரத் ஹுஸைன் சிறந்தவர்.

இவர் காலத்தில் ஸிரியா நாட்டில் திமஷ்க் (டமஸ்கஸ்) நகரில் எஜீத் என்ற ஓர் அரசர் ஹி. 61 (கி. பி. 680)ல் பட்டத்திற்கு வந்தார். அவர் தம்மை முஸ்லிம்களுக்கெல்லாம் கலீபா (பெருமானாரின் பிரதிநிதி-முஸ்லிம்களது அரசியல் ஆத்மீகத் தலைவர்) என்று மக்கள் ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்தினார். அவர் கெட்டகுணமுள்ளவர். இறையச்சமில்லாதவர். மக்களுக்குப் பணிசெய்தலே அரசனுடைய கடமை என்பதை அறியாதவர். மக்களாட்சியின் உயர்வை மறந்தவர். தனியாட்சியை விரும்பியவர். தன்னலமுள்ளவர். அவரது வாழ்க்கை பிரஜைகளுக்கு முன்மாதிரியான வாழ்க்கையாக அமையவில்லை. முதல் நான்கு கலீபாக்களின் நேர்வழியைப் பின்பற்றாதவர்.

உலகிலே, இறைவனுடைய ஆட்சியை (ஹுகூமதுல் இலாஹி) நிறுவுதலே இஸ்லாத்தின் குறிக்கோள். முதல் நான்கு கலீபாக்களின் ஆட்சியை, இஸ்லாமிய சரித்திரத்திலே நேர்வழி நடந்த-இறையச்சம் நிறைந்த ராஷிதீன்-கலீபாக்களின் ஆட்சி என்கின்றோம். முதல் கலீபா, ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) தமது மரணப்படுக்கையிலே, தாம் கலீபாவாக இருக்கும்பொழுது அரசாங்கப் பொதுநிதியிலிருந்து பெற்ற உபகாரச் சம்பளத்தை-தமது சொந்த நிலங்களை விற்று-மறுபடியும் கொடுத்துவிடும்படி ஏற்பாடு செய்தார். ஏன்? வாங்கிய சம்பளத்திற்குத் தகுந்தபடி பணி



ஆற்றினோமோ, இல்லையோ, என்னும் அச்சம்! அதற்காக இறைவனிடம் கணக்குக் கொடுக்கவேண்டுமே என்னும் பயம்!

இரண்டாம் கலீபா உமர் (ரலி) மற்ற நாயகத் தோழர்களின் புத்திரருக்கு எவ்வளவு பணம் உபகாரச் சம்பளமாகக் கொடுத்தாரோ, அதே அளவு தமது மகனுக்குக் கொடுக்காமல் குறைத்துக் கொடுத்ததார்! தமது குடும்பத்தார் ஏதாவது பிழை செய்தால், "இருமடங்கு தண்டனை கொடுப்பேன்" என்று அவர்களுக்கு எச்சரிக்கை செய்வார்.

நான்காம் கலீபா அலீ ஒரு காய்ந்த வாற்கோதுமை ரொட்டித் துண்டைத் தண்ணீரில் நனைத்து அதை ஆகாரமாக உட்கொண்டு ஆனந்தமடைவார்! ஆனால், தனி அரசை,-தகப்பனுக்குப் பின் மகன் அரசனாகும் ராஜாங்கத்தை-ஸ்தாபித்தலே எஜீதின் குறிக்கோள்.

எனவே, அத்தகைய எஜீதுக்கு இமாம் ஹுஸைன் விசுவாசப் பிரமாணஞ்செய்ய மறுத்தார். அப்பொழுது, இமாம் ஹுஸைன் மதீனா நகரில் இருந்தார். அங்கு அவருக்கு ஆபத்து உண்டாகவே. அங்கிருந்து மக்கா நகருக்கு வந்தார். இதற்கிடையில்,இராக் நாட்டிலே, ஹஸ்ரத் அலீயின் தலைநகராயிருந்த கூபா நகர மக்கள் அவரைத் கலீபாவாக ஏற்றுக்கொண்டதோடு. அங்கு வருமாறுபடி அழைப்பும் விடுத்தார்கள். பல கடிதங்கள் எழுதினார்கள். அவரும் அதற்கு உடன்பட்டுச் செல்லும் வழியில் கூபாவுக்குத் தெற்கில், எஜீதின் கவர்னர் உபைதுல்லாஹ் என்பவருடைய சேனையால் கர்பலா என்னுமிடத்தில் தடுக்கப்பட்டார். எஜீதுக்கு விசுவாசப்பிரமாணம் செய்யவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டார்.

ஆனால், இமாம் ஹுஸைன் அதற்கு உடன்படவில்லை. இறை நெறியில் இருப்போர் மண்ணாளும் மன்னருக்குத் தலை சாய்ப்பார்களா? "தலைபோனாலும் போகட்டும்! ஆனால், நான் இந்த ராஜ விசுவாசப் பிரமாணம் செய்யமாட்டேன்!" என்றார்.

இமாம் ஹுஸைன் போருக்குத் தயாராகி வரவில்லை. தமது குடும்பத்துடனும் சில நண்பர்களுடன் கூபா நகருக்குச் செல்லும் வழியில் தடுக்கப்பட்டார். ஆனால், எதிரிகளின் சேனையோ ஆயிரமாயிரமாக எதிர்த்து நின்றது.

மூன்று நாட்களாக இமாம் ஹுஸைனுடைய கட்சியாருக்கு பராத் (யூப்ரதீஸ்=Euphrates) நதியின் தண்ணீரும் கொடுக்காமல் எதிரிகள் தடுத்துவிட்டார்கள். இமாம் ஹுஸைனுடனிருந்தோரைக் கொன்றார்கள். மூன்றும் நாள் இமாம் ஹுஸைன் புறப்பட்டார். அவர் ஆற்றுக்குச் சென்று தண்ணீரைக் குடிக்க முயற்சிக்கும் பொழுது, அவர்மீது அம்பெய்தார்கள். அந்த நேரத்திலும் அவர் தொழுகை நேரம் வந்தவுடன் தொழுது கொள்வார். அம்பாலும் ஈட்டியாலும் தாக்கப்பட்டார். இறுதியாக, அவர் களைப்படைந்து தரையில் விழுந்த சமயம் அவரைக் கொன்றுவிட்டார்கள் !

இந்த கர்ப்லா நிகழ்ச்சியின் நினைவில் ஒவ்வோர் ஆண்டிலும், முஹர்ரம் மாதத்திலே, அவரது ஞாபகார்த்தத்தை முஸ்லிம்கள் கொண்டாடுகிறார்கள்.

இமாம் ஹுஸைனுடைய வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்வதென்ன ?

(1) சத்திய நெறியிலே எத்தகைய துன்பம் வந்தாலும் அஞ்சலாகாது.

(2) எப்பொழுதும் நற்செயலே செய்தல் வேண்டும்.

(3) எப்பொழுதும் தொழுகையை விடக்கூடாது.

(4) துன்பத்திலே பொறுமையும் விடா முயற்சியும் மேற்கொள்ளவேண்டும்.

(5) தகுதியுள்ளோருக்கே நமது வாக்குரிமை—ஓட்டு கொடுக்கவேண்டும்.

(6) இறைவனல்லாத சக்தியின் முன் தலை சாய்த்தலாகாது. உயிரைக் கொடுத்தேனும் இறைவனுடைய அதிகாரத்தை உலகில் நிறுவவேண்டும்.

ஹஸ்ரத்

# 3. 'ஸஅத் பின் அபீ வக்காஸ்

## SA-AD BIN ABI WAQQAAS

இரண்டாம் கலீபா ஹஸ்ரத் உமர் காலத்திலே, அக்காலத்தில் உலகப் புகழ்பெற்றிருந்த பாரசீக ராஜ்யமும் கீழ ரோம ராஜ்யமும் முஸ்லிம்களோடு மோதி, இறுதியில் தோல்வியடைந்தன. ஹஸ்ரத் அபூ உபைதாவும் ஹஸ்ரத் காலித் பின் வலீதும் ரோமராஜ்யத்தைச் சேர்ந்த ஸிரியா மாகாணத்தை வென்றார்கள். ஹஸ்ரத் அம்ரு-பின் ஆஸ் என்பவர் எகிப்து நாட்டை வென்றார். ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ் என்பவர் பாரசீகரைத் தோற்கடித்தார். பெருமானாரவர்களால் சுவர்க்கவாசி என்று முன்னறிக்கை செய்யப்பட்ட பத்து நாயகத் தோழர்களில் ஒருவரான இவரை ஹஸ்ரத் உமர் (ரலி) ஈரான் நாட்டிற்கு அனுப்பினார். இவரது தகப்பனார் பெயர் மாலிக் பின் உஹைப். இவர் தமது பதினேழாம் வயதிலே முஸ்லிமானார். நபி பெருமானாரவர்களால் மிகவும் நேசிக்கப்பட்டார். பெருமானார் காலத்தில் நடந்த பத்ர், உஹத், முதலிய போர்களில் கலந்துகொண்டார்.

**காதிஸியா** போர்: (ஹி. 6. கி. பி. 636). முதலாம் கலிபா ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) காலத்திலே ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி), முதன்னா இவ்விருவரும் பாரசீகரின் எதிர்ப்பைத் தடுத்து இராக் நாட்டிலே போர் புரிந்துகொண்டிருந்தார்கள்.

அச்சமயம், ஸிரியாவிலே ஒரு பெரிய முஸ்லிம் சேனை ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) என்பவரின் தலைமையிலே நாலைந்து மாதங்களாக ரோமரை எதிர்த்து, ஆனால், வெற்றி பெறாமல் காலங் கழித்துக் கொண்டிருந்தது. எனவே, அங்கு ஹஸ்ரத் காலித் பின் வலீத் அனுப்பப்பட்டார். ஹஸ்ரத் காலித் இராகிலிருந்து சென்றபிறகு, இராக் சேனைக்கு முதன்னா என்பவர் தளபதியாக இருந்தார், ஆனால், அவரால் வெற்றிபெற முடியவில்லை. எனவே, அவர்

மதீனாவுக்கு வந்து உதவி கேட்டார். அச்சமயம் ஹஸ்ரத் அபூ பக்ர் மரணப் படுக்கையில் இருந்து, மரணமடைந்தார். அடுத்த கலீபா ஹஸ்ரத் உமர், ஈரானியரை எதிர்க்க நல்லதொரு சேனையைத் தயாரித்துத் தாமே தளபதியாகச் சென்று முதன்னாவுக்கு உதவிசெய்ய எண்ணினார், ஆனால், நாயகத்தோழர்கள் அவரைச் செல்லவிடாமல் தடுத்துவிட்டார்கள். எனவே, அவர் ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ் என்பவரைத் தளபதியாக்கிப் பெரியதொரு சேனையுடன் அனுப்பினார். அவரது கட்டளைப்படி தளபதி ஸஅத் பின் அபீ வக்காஸ் புறப்பட்டார். ஈரான் ராஜ்யமும் அரபியாவின் வடகிழக்கெல்லையும் சேருமிடத்திற்கு வந்தார். பாரசீக சக்ரவர்த்தியிடம் ஒரு தூதுக்குழுவை அனுப்பி இஸ்லாம் என்றும் ஒரே தெய்வ வணக்கத்தை ஏற்றுக் கொள்ளும்படிப் பாரசீகருக்கும் பாரசீக சக்ரவர்த்திக்கும் அழைப்புவிடுத்தார். ஆனால், கர்வ போதையிலிருந்த அந்த வாலிப மாமன்னர் முஸ்லிம் தூதரை அவமதித்துத் துரத்தி விட்டார்.

எனவே, முஸ்லிம்கள் போருக்குத் தயாரானார்கள். பாரசீகரும் பெரும் படையுடன் ருஸ்தும் என்னும் புகழ்படைத்த சேனாதிபதியின் தலைமையில் வந்தார்கள். இராக் பிரதேசத்திலே காதிஸியா என்னுமிடத்தில் பல நாட்களாகப் போர் நடந்தது. தளபதி ஸஅத் நோய்வாய்ப்பட்டிருந்தமையால் போரில் கலந்துகொள்ள முடியாமல் ஓர் உயரமான இடத்தில் உட்கார்ந்து கொண்டு போரை மேற்பார்வை செய்து கொண்டிருந்தார். போரின் இறுதியில், ருஸ்தும் படுகாயப் பட்டு ஓட்டம்பிடித்தார். ஆனால், பிடிபட்டுக் கொல்லப்பட்டார். அதன் விளைவாக சரித்திரத்திலே பெருந்திருப்பம் ஏற்பட்டது. பாரசீகப்படை முழுதும் ஓட்டம்பிடித்து இராக் நாடு முஸ்லிம் கொடியின்கீழ் வந்தது. இந்தக் காதிஸியா போரானது உலகப் பெரும்போர்களில் ஒன்றாகும்.

**மதாயின் :**—பாரசீக சக்ரவர்த்தியின் பெயர் யஸ்த் கர்த் (Yezdgard). தஜ்லா (Tigris) நதிக்குக் கிழக்கில் மதாயின் என்பதே அவரது தலைநகர். பராத், தஜ்லா நதிகளுக்கிடையிலுள்ளதும் நிலவளத்திலும் நீர்வளத்திலும் சிறந்ததுமான



இராக்நாட்டை இழந்த பாரசீக மன்னருக்கு நிம்மதியே கிடைக்கவில்லை. ஏன்? மதாயின் என்னும் அவரது தலைநகரையும் முஸ்லிம்கள் கைப்பற்றினார்கள். எனவே, அவர் அங்கிருந்து ஓடிப்போனார்.

ஸஅத் பின் அபீ வக்காஸ், மதாயின் அரண்மனையில் நுழைந்தார். எல்லா முஸ்லிம்களும் அரண்மனையில் நின்று இறைவனைத் தொழுது நன்றி செலுத்தினார்கள். இந்த நகரையே தளபதி ஸஅத் தமது தலைநகராக்கிக்கொண்டார்.

நிஹாவந்த் போர்:— தலைநகரிலிருந்து, பாரசீக சக்ரவர்த்தி, முஸ்லிம்களுக்குப் பயந்து வடக்கே சென்று, குராஸான் நாட்டில் வசித்தார். இறுதியாக, முஸ்லிம்களுடன் ஹி. 21 (கி.பி.641)ல் நிஹாவந்த் என்னுமிடத்திலும் ஒரு பெருமுயற்சி செய்தார். ஒரு பங்கு முஸ்லிம்களை ஆறு பங்கு பாரசீகர் எதிர்த்தார்கள். எனினும், இறுதியில் முஸ்லிம்களே வெற்றிபெற்றார்கள். இதன் விளைவாக, ஆயிரத்து இருநூறு ஆண்டுகளாகச் சரித்திரப் புகழ்பெற்ற பாரசீக ராஜ்யம் முடிவடைந்தது.

கூபா (Koofa) :—முஸ்லிம் சேனை மதினாவிலிருந்து வெகுதூரத்திலிருந்தது. எனவே, முஸ்லிம் சேனை நிரந்தரமாகத் தங்கி இருப்பதற்காக இராக் நாட்டில், வசதியும் சுகாதாரமுமுள்ள ஓர் இடத்தில், ஒரு இராணுவத்தளம் அமைக்க வேண்டுமென்று கலீபா உமர் விரும்பினார். அவரது விருப்பப்படி, தளபதி ஸஅத் பின் அபீ வக்காஸ், பராத், (யூப்ரதீஸ் Euphrates) நதிக்கு மேற்கில் ஒரு நல்ல இடத்தைத் தெரிந்தெடுத்து, அதை முஸ்லிம் சேனையின் தளமாக அமைத்தார். அதற்கு கூபா (Koofa) எனப் பெயரிடப்பட்டது. அங்கு புதியதொரு நகரம் நிர்மாணிக்கப்பட்டது. புதிய நகரத்தின் மத்தியிலே. பள்ளிவாயிலும், அரசாங்க அலுவலகமும் அதைச்சுற்றி மைதானமும், மைதானத்தைச் சுற்றித் தெருக்களும் அமைக்கப்பட்டன.

அதன் முதல் கவர்னராக ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ் நியமிக்கப்பட்டார். அந்த நகரில் அவர் தமக்காக ஓர் அழகான அரண்மனை கட்டினார். இதைக் கேள்விப்பட்ட

கலீபா உமர், அதிக கோபமடைந்து அந்த அரண்மனையை அழித்துவிட்டார். ஏனென்றால், பொதுவாக முஸ்லிம்களும், சிறப்பாக முஸ்லிம் தலைவர்களும் எளியவாழ்க்கை நடத்த வேண்டுமென்று கலீபா உமர் விரும்பினார். பாரசீகப் பேரரசைக் கவிழ்க்க ஆரம்பித்து, உலகப் பெரும்போர்களில் ஒன்றான காதிஸியா போரில் வெற்றி பெற்ற தளபதி ஸஅதையும் ஹஸ்ரத் உமர் இஸ்லாமிய தராசில் வைத்து நிறுத்தார். ஸிரியாவிலே யர்மூக் என்னும் இன்னொரு பெரும் போரிலே அக்காலத்தில் உயர்ந்த ரோமராஜ்யச் சேனையைத் தோற்கடித்த ஹஸ்ரத் காலித் பின் வலீத் என்பவர், ஒரு புலவருக்குப் பல்லாயிரம் பொற்காசுகள் இனமாகக் கொடுத்தமையால், அவர்மீது வீண்செலவு செய்த குற்றஞ்சாட்டி, அவரைத் தளபதிப் பதவியிலிருந்து நீக்கியதும் இந்த ஹஸ்ரத் உமர் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

**விலக்கப்படல்:** ஹி. 20. (கி. பி. 640–41), கூபா நகரத்தில் குடியேறியோரில் கிறிஸ்தவர்களும், யூதர்களும், பாரசீகரும், அரபியரும் இருந்தார்கள், பிற்காலத்தில், பொய், நம்பிக்கை மோசம், அராஜகம் போன்ற துர்ச்செயல்களுக்கு இந்த நகரம் உறைவிடமாயிற்று. "வாக்கு மாறுதல் என்றால் கூபா" என்று பழமொழியாகிவிட்டது.

இத்தகைய, கூபா வாசிகள் ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ் மீது குற்றஞ்சாட்டினார்கள். அவர் நியாயம் தவறி நடப்பதாகவும் கொடுமைசெய்வதாகவும் கலீபாவிடம் முறையிட்டார்கள். எனவே, ஜனநாயகத்தை விரும்பிய ஹஸ்ரத் உமர் அவரை அந்த உத்தியோகத்திலிருந்து விலக்கிவிட்டார்.

ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸை நீக்கியதைப் பற்றிப் பிறகு ஹஸ்ரத் உமர் விளக்கம் தந்தார். அதாவது, உத்தியோகத் திறமையின்மைக்காகவோ, அராஜகத்திற்காகவோ, தாம் கவர்னர் ஸஅதை விலக்கவில்லை யெனவும், ஹஸ்ரத் காலிதைப் பற்றிப் பொதுமக்கள் நினைத்ததைப் போன்றே, வெற்றிகளுக்குக் காரணம் தளபதி ஸஅத் பின் அபீ வக்காஸே என்று நினைக்க ஆரம்பித்துவிட்டார்களெனவும்,



அதாவது, வெற்றியும் தோல்வியும் ஆண்டவனே கொடுப்பவன் என்பதை முஸ்லிம் பொதுமக்கள் மறந்தார்கள் எனவும், அதனால்தான் அவரை நீக்கிவிட்டதாகவும் அவர் கூறினார்.

அதாவது, ஹஸ்ரத் காலிதுக்கு ஹஸ்ரத் உமர் நன் மதிப்புக் கொடுத்ததைப்போன்றே, ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ் என்பவருக்கும் கொடுத்தார். இருவரையும் அவர் நேசித்தார். எனவேதான், ஹஸ்ரத் உமர் மரணப் படுக்கையில் இருக்கும்பொழுது, அடுத்த கலீபாவின் நியமனத்திற்காக ஒரு சிறு குழு அமைத்து, அதிலிருந்து ஒருவரைக் கலீபாவாக நியமித்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்தார். அதில் ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ் என்பவரும் ஓர் அங்கத்தினராக அவரால் நியமிக்கப்பட்டார்.

மூன்றாம் கலீபா ஹஸ்ரத் உஸ்மான் காலத்திலே, ஹி. 25 (கி. பி. 645—66)ல் அவர் மறுபடியும் கூபா கவர்னராக நியமிக்கப்பட்டார். ஆயினும், சிறிது காலத்தில் மறுபடியும் நீக்கப்பட்டார்.

நான்காம் கலீபா ஹஸ்ரத் அலீயின் காலத்திலே முஸ்லிம் சமுதாயத்திலே பெரிய குழப்பங்களும், கலகங்களும் உண்டாயின. அதாவது, ஹஸ்ரத் உஸ்மான் கொலை செய்யப்பட்ட பிறகு, பல கட்சிகள் உண்டாயின. ஸிரியா நாட்டில் கவர்னராக இருந்த அமீர் முஆவியா சுவாதீனமாக தனியாட்சிசெய்ய முயன்றார். ஹஸ்ரத் ஆயிஷா அம்மையாருடன் ஒரு கட்சி உண்டாயிற்று. அப்பொழுது கலீபா பதவியிலிருந்த ஹஸ்ரத் அலீ, மதீனா நகரை விட்டுவிட்டு, இராக் நாட்டிலே கூபா நகரைத் தமது தலைநகராக்கிக் கொண்டார்.

மரணம்:—இந்தச் சூழ்நிலையில் ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ், அரசியல் விஷயங்களில் கலந்துகொள்ளாமல் அல் அகீக் என்னுமிடத்தில் நிம்மதியாக வசித்தார். இந்தப் பெருந் தளபதி தமது எழுபதாம் வயதிலே ஹி. 50 (கி. பி. 67–1)ல் மரணமடைந்து மதீனா நகரில் நல்லடக்கம் செய்யப்பட்டார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜியூன், மெய்யாகவே, நாம் இறைவனைச் சேர்ந்தோர் ஆவோம். மேலும், மெய்யாகவே அவனிடம் நாம் திரும்பிச் செல்லுகிறோம்,

# 4. ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி)

## (KHALID BIN VALEED)

நபிபெருமானுர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லமவர்கள் ஹஸ்ரத் அலீக்கு "அஸதுல்லாஹ்—அல்லாஹுவின் சிங்கம்" என்னும் பட்டம் அளித்தார்கள். அதைப்போன்றே காலித் பின் வலீத் என்பவருக்கு "ஸைபுல்லாஹ் (Saifullah)—அல்லாஹ்வின் வாள்" என்னும் பட்டம் அளித்தார்கள். அதற்குத் தகுந்தபடியே, அவரது வாழ்க்கையும் அமைந்திருக்கின்றது.

காலித் என்பவர் மக்கா நகரில் குரைஷ் குலத்தில் பிறந்தவர். ஹஸ்ரத் உமரைப்போன்றே, இவரும் முதலில் இஸ்லாத்தின் பரம விரோதியாக இருந்தார். பிறகு முஸ்லிமாகி, இஸ்லாமியப் பணியிலேயே தமது வாழ் நாட்களை அர்ப்பணித்தார்.

பெருமானுர் காலத்திலே, ஹி. 8 (கி. பி. 630)ல், பலஸ்தீன் பிரதேசத்தில் மூத்தா என்னுமிடத்தில் இவருக்கு முதல் இஸ்லாமிய வெற்றி கிடைத்தது. அந்தப் போரில் மூவாயிரம் முஸ்லிம்கள் ஒன்றரை லட்சம் ரோம சேனையை இவர் தலைமையில் தோற்கடித்தார்கள். அது நமக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லையா?

பிறகு, முதல் கலீபா ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) காலத்திலே, இவர் இராக் நாட்டிற்கு ராணுவத்துடன் அனுப்பப்பட்டார். அந்த நாடு அப்பொழுது பாரசீக ராஜ்யத்தில் இருந்தது. காலித் சென்று பாரசீகரைத் தோற்கடித்தார். ஹி. 12 (கி. பி. 633)-ல் ஹிரா பிரதேசத்தைக் கைப்பற்றினுர்.

அச்சமயம், ஸிரியாவில் ஒரு முஸ்லிம் சேனை ஆபத்தில் இருந்தது. ரோம ராஜ்யச் சேனை அதை எதிர்க்கத் தயாராகி வந்தது. எனவே, முஸ்லிம் சேனைக்கு உதவிசெய்ய இராக் நாட்டிலிருந்து ஸிரியா நாட்டிற்கு மின்னல் வேக



மாகச் செல்லும்படி, காலிதுக்கு ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) உத்தரவிட்டார். உடனே, இராகிலிருந்து வறுந்தர மார்க்கமாக, வெகு இரகசியமாகத் தமது சிறு சேனையை நடத்திக்கொண்டு தளபதி காலித் சென்றுர். எவரும் அதுவரை செல்லாத பாலைவனத்தில் அன்னமும் தண்ணீரும் கிடைக்காத வறுந்தர வெளியில் துணிந்து சென்றுர்.

ஹி. 13 (கி பி. 634)ல் காலித், ஸிரியாவில் நுழைந்தார்! ஓர் இலட்சம்பேர்கொண்ட ரோம சேனையைத் திடுக்கிடச் செய்தார்! இவர் மனிதரா? பூதமா? என்று எதிரிகள் ஆச்சரியப்பட்டார்கள்! அவர்களைத் தமது எண்ணாயிரம் போர்வீரரின் உதவியால் தோற்கடித்தார்! அப்பொழுது ஸிரியாவில் இருந்த முஸ்லிம் சேனைக்குத் தளபதியாயிருந்தவர் அபூ உபைதா என்பவர். பிறகு, கலீபா அபூ பக்ர் உடைய கட்டளைப்படி காலித் பின் வலீதே முஸ்லிம் சேனைக்குத் தலைமை தாங்கி வெற்றிமேல் வெற்றியடைந்தார்.

தளபதி காலித் வெற்றியடையாத போரே கிடையாது. ஒவ்வொரு போர்க்களத்திலும் ஒரு நவீனமான போர் முறையை அவர் அனுசரிப்பார். அதனுல், பழைய முறையை எதிர் பார்க்கும் எதிரிகளெல்லாம் ஏமாற்றமடைந்து தோல்வி அடைவார்கள், "அல்லாஹு அக்பர்!" என்னும் போர் முழக்கமானது தளபதி காலிதின் தொண்டையிலிருந்து புறப்பட்டால், சிங்கக் கர்ச்சனையைப் போலிருக்கும் மண்ணும் விண்ணும் எதிரொலிக்கும். மாற்றுர் மனதைக் கலக்கமுற செய்யும்.

யர்மூக் போர்: ஹி. 13. (கி. பி. 634). யர்மூக் பலஸ்தீன் நாட்டிலுள்ள யர்தன் (Jordon) நதியின் உபநதி. இதன் கரையில் உலக சரித்திரப் புகழ்பெற்ற யர்மூக் போர் நடந்தது. காதிஸியாவில் முஸ்லிம்கள் பாரசீகரைத் தோற்கடித்துப் பாரசீக ராஜ்ய அழிவுக்கு அடிகோலினுர்கள். இதைப்போன்றே, இந்த யர்மூக் போரில் முஸ்லிம்கள் ரோமர்களைத் தோற்கடித்துக் கீழ ரோம ராஜ்யத்தின் வீழ்ச்சியை ஆரம்பித்தார்கள். அந்தப் போரில் காலித் பின் வலீதே தளபதி.

**நீக்கப்படல் :** இதற்கிடையில் ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) இறந்து, ஹஸ்ரத் உமர் (ரலி), இரண்டாம் கலீபாவானார். இந்தப் போர் நடந்துகொண்டிருக்கையில் தளபதி பதவியிலிருந்து காலிதை ஹஸ்ரத் உமர் நீக்கிவிட்டார். தளபதி காலித் மாறுசெய்யாமல், உடனே கீழ்ப்படிந்தார். பதவி மோகம் அவருக்கில்லை. அவர் விரும்பியதெல்லாம் இஸ்லாமியப் பணி. அதுவே அவரது குறிக்கோள்.

தளபதி காலித் தமது சேனையின் செலவு சம்பந்தமான கணக்குகளைச் சரியாக கலீபாவுக்குச் சமர்ப்பிக்காமையாலும், ஒரு சமயம் ஒரு கவிஞருக்கு அவர் பத்தாயிரம் வெள்ளிக் காசுகள் அன்பளிப்பாகக் கொடுத்தமையாலும், ஹஸ்ரத் உமர் அவரை நீக்கிவிட்டதாகத் தெரிகின்றது.

பிறகு, தளபதி காலித் மதீனாவுக்கு வந்து விளக்கம் செய்தபின், ஹஸ்ரத் உமர் திருப்தியடைந்துவிட்டார். எல்லா வெற்றிகளுக்கும் காலிதே காரணம் என்று மக்கள் நினைத்து, இறையருளை மறந்து விடுவதால்தான் அவரை நீக்கியதாகவும் விளம்பரப்படுத்தினார்.

**கவர்னர் காலித் :** ஸிரியா நாடு முழுவதையும் முஸ்லிம்கள் வென்ற பிறகு, கன்ஸரீன் பிரதேசத்தில், ரோம ராஜ்யத்தின் எல்லைப் புறத்திலிருந்த நகரங்களுக்கு ஹஸ்ரத் காலித் கவர்னராக நியமிக்கப்பட்டார். இந்த நியமனம் ஹஸ்ரத் உமரால் செய்யப்பட்டது.

அதற்குப் பிறகு, ஹி. 17 (கி. பி. 641) மறுபடியும் ஹஸ்ரத் உமர் அவரை நீக்கினார். இதற்குக் காரணம் மத சம்பந்தமானது. இஸ்லாமிய வெற்றிகளுக்கெல்லாம் காலிதே காரணம் என்று முஸ்லிம்கள் கருதினார்கள். இது இறைவனை மறந்த செயலாகும். மேலும், வீண்செலவையும் பிறர் தம்மைக் கவிதைகளில் புகழ்வதையும் காலித் விரும்பினார். அதை ஹஸ்ரத் உமர் விரும்பவில்லை. இதைப் பிற்கால முஸ்லிம்கள் ஓர் உதாரணமாக எடுத்துக்கொள்வார்கள் அல்லவா ? காலித் போன்ற பெருந் தளபதியும் இஸ்லாமிய சட்டத்திற்கு அடங்கியே நடக்க வேண்டும். உலக சரித்



திரத்தில் இத்தகைய கால, இடச் சூழ்நிலையில் தளபதிகள் கலகப் புரட்சி செய்ததை நாம் அறிவோம். ஆனால், இஸ்லாமிய சேவையே தமது குறிக்கோளாகக்கொண்ட காலித், உடனே கலீபாவின் ஆணைக்குக் கீழ்ப்படிந்தார். ஹஸ்ரத் உமர், அரசாங்கத்தின் தலைவர் என்ற ரீதியில், இஸ்லாமிய சட்டங்கள் பின்பற்றப்பட வேண்டுமென்று—மக்கள் இறையச்சமுள்ள வாழ்க்கை நடத்த வேண்டுமென்று விரும்பினார் என்பதும் இதிலிருந்து நமக்குத் தெளிவாகின்றது. மேலும், இஸ்லாத்தின் நோக்கம் பிற நாடுகளையும் பிற இனத்தாரையும் வெல்வதல்ல என்பதும், அத்தகைய நோக்கம் இருந்தால், வெற்றிவீரர் காலித் இவ்வாறு நீக்கப்பட்டிருக்கமாட்டார் என்பதும் தெளிவாகத் தெரிகின்றதல்லவா ? இஸ்லாம் வாளால் பரவ வில்லை. இஸ்லாத்திற்கு மண்ணாசை இல்லை என்பதற்கு ஹஸ்ரத் காலிதை கலீபா உமர் நீக்கிய உதாரணம் ஒன்றே போதுமானது.

**மரணம் :** ஹி. 21 (கி. பி, 641)ல், ஹிம்ஸ் நகரில் ஹஸ்ரத் காலித் மரணமடைந்தார்.

**மேன்மைகள் :** இறைவன்மீது நம்பிக்கை, அறநெறி, போர்த்திறமை, அளவுகடந்த அறிவு, புத்தம்புதிய கருத்து, நவீனத் திட்டம் தீட்டல், திடீர் முறையில் பகைவரைத் தாக்குதல், இரவெல்லாம் கண்விழித்து மறுநாளைக் குரிய போர்த்திட்டமிட்டு அதற்கு ஆவன செய்தல், தொலை நோக்கு, துன்பங்களைச் சகித்தல், போன்ற பெரும் பண்புகளால் ஹஸ்ரத் காலிதுடைய வாழ்க்கை வளம்பெறுகின்றது "முடியாது" "கூடாது" என்பதெல்லாம் என் அகராதியில் இல்லை என்பார். வெல்லமுடியாத கோட்டைகளை வெல்வார்.

இந்தப் புனித மனிதரின் கையில் எப்பொழுதும் வாளே இருந்தது. அவரது வாழ்க்கை வரலாற்றிலே வாளும் போருமே மிகுதியாகத் தோற்றம் அளிக்கின்றன. ஆனால் போர்ப்பிரியர் அல்லர். வாள்வீச்சில் விருப்பம் உள்ளோருமல்லர். ஏனென்றால், ஏழைகளையும், நிர்க்கதியில் உள்ளோ

ரையும் தாக்கிய கொடுமையாளர்மீதே தமது வாளை இந்த தயாவீரர் (Chivalrous Knight) ஓச்சினர். நீதிக்காகவும், வாய்மைக்காகவும், ஏழைகளைப் பாதுகாக்கவும் தமது உயிருடன் விளையாடினர். பகலெல்லாம் அவர் வெஞ்சமரில் வாளோச்சுவார். ஆனல், இரவெல்லாம், தமது தலையைப் பூமியின்மீது வைத்து இறை வணக்கம் செய்வார். பகலெல்லாம் போர்செய்து அவரது உடலில் வியர்வை சுரக்கும். ஆனல், இரவெல்லாம் கண்ணீர் விடுவார். அழுது ஆண்டவனைத் தொழுவார். அவரது வாழ்க்கையிலே அன்பு மிகுந்தும் தியாகம் நிறைந்தும், அறம் வளர்ந்தும், அனுதாபம் சிறந்தும் காணப்படுகின்றது. இஸ்லாத்திற்காகவே வாழ்ந்து இஸ்லாத்திற்காகவே வீழ்ந்த பெரியார் ஹஸ்ரத் காலித். கர்வத்தையும், தன்னலத்தையும் அவரது வாழ்க்கையில் காண்பதரிது. ராணுவத் திறமையிலே, உலக வரலாற்றின் அபூர்வத் தளபதிகளின் வரிசையில் இடம் பெற்றவர். இஸ்லாமிய வானிலே இணையற்ற நட்சத்திரமாக விளங்குகிறர். அந்தப் புனிதர் பொய் பேசியதே இல்லை. உண்மை சொல்ல அஞ்சியதுமில்லை. அச்சம் என்பதை அறியாதவர். அநியாயம் செய்வோரை எதிர்ப்பார். உலக சக்திகளுக்குத் தலைசாய்த்தல் என்பதே அவர் அறியமாட்டார்.

மாசற்ற உள்ளத்தாலும், மாட்சிமிக்க குணத்தாலும் மக்களது உள்ளத்திலே, அன்றும் இன்றும் என்றும், அவர் அழியாப் புகழ் பெற்றுவிட்டார்.

மரணம் வருகின்றது! வீட்டில் படுக்கையில் இருக்கின்றர் மாவீரர்! அழுகின்றர்! இறைவனே! நீதியை நிலை நாட்டுவதில் — கொடுமையாளரை உலக மேடையிலிருந்து அகற்றுவதில்—என் ஆவி பிரியக்கூடாதா?'' என்று துக்கப்படுகின்றர்!

அவரது வாழ்க்கை வரலாறு நம்மை அழைக்கின்றது. ''உன்னிடம் இத்தகைய பண்புகளை உண்டாக்கிக்கொள்'' என்று வழிகாட்டுகின்றது.

# 5. ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி)

## (ABOO UBAIDA)

இரண்டாம் கலீபா ஹஸ்ரத் உமர் தமது மரணப் படுக்கையில், ''இன்று அபூ உபைதா உயிருடன் இருந்தால் நான் அவரையே கலீபாவாக நியமனம் செய்திருப்பேன்'' என்றர். அத்தகைய சிறப்புள்ளவருக்குப் பெருமானர், ''சுவர்க்கவாசி'' எனவும், ''அமீனுல் உம்மத்'' (முஸ்லிம்களின் நம்பிக்கையாளர்) எனவும் பட்டம் சூட்டினர்கள்.

அவரது அசல் பெயர் ஆமிர். அவர் ஹஸ்ரத் அபூ பக்ர் மூலமாக முஸ்லிமானர். அதற்காகப் பல துன்பங்களை அனுபவித்தார். அபீஸீனியா சென்று அகதியாக வசித்தார். பிறகு, எல்லா முஸ்லிம்களுடனும் மதீன சென்று பெருமாருடன் சேர்ந்துகொண்டார்.

மதீனவில், பத்ர் போர்க்களத்தில், அவரது தகப்பனர் அப்துல்லாஹ் பின் ஜர்ராஹ் என்பவர் அவருடன் எதிர்த்து இறுதியில் இறந்தார். உஹத் போரில் பெருமானர் கன்னத்தில் பதிந்திருந்த முகக்கவச வளையங்களைத் தமது பற்களால் இழுத்தார். அதில் அவர் தமது இரண்டு பற்களை இழந்தார். பொதுவாக எல்லாத் தற்காப்புப் போர்களிலும் அவர் பங்குபெற்றர்.

பெருமானருக்குப் பிறகு, முஸ்லிம் குடியரசுக்கு ஒரு கலீபாவைத் தேர்ந்தெடுக்கும் பிரச்சினை எழுந்தது. அப்பொழுது, அவரையும், ஹஸ்ரத் உமரையும் அதற்குத் தகுதி உள்ளோராக ஹஸ்ரத் அபூ பக்ர் மக்களுக்குக் கூறினர்.

முதல் கலீபா காலத்திலே ரோமப் படையெடுப்பைத் தடுக்க ஸிரியா சென்ற முஸ்லிம் சேனைக்கு அவர் தளபதியாக அனுப்பப்பட்டார். ரோமப் படைகள் இலட்சக்கணக்கில் இருந்தன. முஸ்லிம்களோ சில ஆயிரம்பேர். யர்முக் என்னுமிடத்தில் முஸ்லிம் சேனை போரிடாமல் மூன்றுமாதம் காத்துக்கொண்டிருந்தது. ஆனல், அதே சமயத்தில்

ரோமப் படைகள் அதிகரித்துக்கொண்டு வந்தன. அப்பொழுது இராக் நாட்டில் இருந்த ஹஸ்ரத் காலித் பின் வலீதை உடனே ஸிரியாவுக்குச் செல்லும்படி கலீபா அபூ பக்ர் கட்டளையிட்டார். காலித் வந்தவுடன், கலீபாவின் கட்டளைப்படி, ஹஸ்ரத் அபூ உபைதா அவரையே முஸ்லிம் படைகளின் தலைவராக்கினர். பிறகு, முழுமனதுடன் அவரோடு ஒத்துழைத்தார்.

ஹி. 13 (கி. பி. 636)ல் யர்மூக் என்னும் உலகப் பெரும் போரில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. இந்தப் போர் நடந்துகொண்டிருக்கையில் இரண்டாம் கலீபா உமர் மறுபடியும் இவரையே தளபதியாக நியமித்தார். பிறகு இவரது தலைமையில் ஸிரியா, பலஸ்தீன் நாடுகள் வெல்லப்பட்டன.

மரணம்:—ஹி. 18. ஹஸ்ரத் அபூ உபைதா முஸ்லிம் படைகளுடன் அந்த நாட்டில் இருக்கும்பொழுது பிளேக் நோயால் மரணமடைந்தார்.

**பண்புகள்:** ஹஸ்ரத் அபூ உபைதா களங்கமற்றவர். பொறுமை இல்லாதவர். தன்னடக்கம் உள்ளவர். இறை வணக்கத்தில் இணை இல்லாதவர். இறைவனுக்காக வாழ்ந்தவர். இறையச்சத்தால் கண்ணீர் சொரிவார். எப்பொழுதும் பெருமானரையே முன்மாதிரியாகக் கொண்டு வாழ்க்கை நடத்துவார். எல்லோரிடமும் மெல்லினமாகப் பேசுவார். எல்லோரையும் தமது சகோதரராக நடத்துவார். பிறர் நலனுக்காகத் தமது உரிமைகளை விட்டுவிடுவார்.

ஒருநாள் கலீபா உமர் இவரது கூடாரத்திற்குச் சென்றார். ஒரு வாள், ஒரு கேடயம், ஒட்டகத்தின் முதுகில் வைக்கும் அமாரித் தொட்டில், இம்மூன்று சாமான்களே அங்கு இருந்தன. அதைப்பார்த்து, "அபூ உபைதாவே! மிகவும் அவசியமான சாமான்கள்கூட உங்களிடம் இல்லையே?" என்று வியப்புடன் வினவினர். அதற்கு அபூ



உபைதா, "முஸ்லிம்களின் தலைவரே! இந்தச் சாமான்கள் எனது தேவைக்குப் போதுமானவை" என்று மறுமொழி கூறினர்.

எளிய உணவை உட்கொண்டு, எளிய உடை உடுத்துவார். அவரிடமே ரோம ராஜ்யத் தூதர்கள் வருவார்கள். ஆனல், முஸ்லிம் சேனதிபதி யார் எனக் கண்டுபிடிக்க முடியாமல் திகைப்படைந்து விசாரிப்பார்கள். முஸ்லிம் சிப்பாய்கள்: "அதோ எளிய உடையிலே, தரையில் உட்கார்ந்திருக்கிறரே, அவரே எங்கள் சேனதிபதி!" **என்று** சுட்டிக்காட்டுவார்கள்.

ஒருசமயம் ரோமர்கள் அவரை விருந்துக்கு அழைத்தார்கள். அப்பொழுது அவர், "எனது சிப்பாய்களை நிராகரித்துவிட்டு, எனக்குமட்டும் விருந்து செய்வித்தால் நான் வரமாட்டேன்" எனக் கூறிவிட்டார்.

மற்றொரு சமயம் ஸிரியா நாட்டிலே திமஷ்க் நகரை முஸ்லிம்கள் முற்றுகை செய்துகொண்டிருக்கையில், எதிரிகள் அவரை ஏமாற்றி, தங்களுக்கு அடைக்கலம் கொடுக்க வேண்டுமென்று அவரிடம் வாக்கைப் பெற்றுக்கொண்டார்கள். அபூ உபைதா வாக்களித்துவிட்டு, அவர்களுடன் நகரில் நுழைந்தார். ஆனல், அதே சமயம் எதிர்ப்பக்கத்திலிருந்து ஹஸ்ரத் காலித் வெற்றிபெற்றுக்கொண்டு நகரின் மத்தியில் நுழைந்து அவரைச் சந்தித்தார். தம்மை எதிரிகள் ஏமாற்றிவிட்டார்கள் எனத் தெரிந்துகொண்ட பிறகும் தமது வாக்கின்படியே நடந்தார். அதனல் முஸ்லிம்களுக்கு நஷ்டமும் ஏற்பட்டது. "முஸ்லிம்களில் ஒரு சாதாரண சிப்பாய் எதிரிகளுக்கு வாக்குறுதி செய்துவிட்டால், அதன்படியே நடப்பது எல்லா முஸ்லிம்களது கடமையாகும்" என்றர் அபூ உபைதா.

மத விஷயங்களில் தாராள மனப்பான்மை உள்ளவர். ஸிரியா நாட்டுக் கிறிஸ்தவர்கள் அவரது பண்பாடுகளைக்

கண்டு, இஸ்லாம் மதத்தைப் புகழ்ந்து, கிறிஸ்வர்களைவிட முஸ்லிம்களையே அதிகமாக நேசிக்க ஆரம்பித்தார்கள்.

அவர் ஸிரியாவில் இருக்கும்பொழுது, ஹிம்மஸ் (அமாஸியா) என்னும் நகரை முஸ்லிம்கள் காலிசெய்து வெளியேறும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அபூ உபைதா அந்த நகரக்கிறிஸ்தவர்களை அழைத்து,

"நாங்கள் இனிமேல் உங்களைப் பாதுகாக்க முடியாது. ஆகையால், நீங்கள் எங்களுக்கு இதுவரை கொடுத்த பாதுகாப்பு வரியான ஜிஸ்யாவைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள்" எனக் கூறியதோடு வரியை அவர்களிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார். அப்பொழுது, அந்தக் கிறிஸ்தவர்கள் கண்ணீர் வடித்துக்கொண்டு,

"முஸ்லிம்களான உங்களது நேர்மையான அரசியலையே நாங்கள் விரும்புகிறோம். இதற்குமுன், எங்கள் மதத்தார் எங்களைத் துன்பப்படுத்தி ஆட்சி செய்தார்கள். ரோம சக்ரவர்த்தி ஹர்கலின் சேனை எங்கள் நகரில் நுழைய விடாமல் நாங்கள் தடுப்போம்!" என்றார்கள். சிலகாலம் சென்று முஸ்லிம் சேனை மறுபடியும் வெற்றிக் கோலத்துடன் அங்கு வந்தபொழுது, அந்தக் கிறிஸ்தவர்கள் சந்தோஷ ஆரவாரஞ் செய்து, கோட்டைக் கதவுகளைத் திறந்து முஸ்லிம்களை வரவேற்றார்கள்.

ஆரம்பகால முஸ்லிம்கள் வெற்றிமேல் வெற்றி பெற்றதற்கு அவர்களது இறையச்சமும், நேர்மையான வாழ்க்கையுமே காரணம். இதற்கு எத்தனையோ உதாரணங்கள் இருக்கின்றன.

யர்மூக் போர் நடப்பதற்குச் சிலநாட்களுக்கு முன்னர் ஹர்கல் சக்ரவர்த்தி, முஸ்லிம்களால் விடுவிக்கப்பட்ட சில கிறிஸ்தவக் கைதிகளிடம், "ராணுவத் தளவாடங்களிலும், எண்ணிக்கையிலும், மிகமிகக் குறைந்த இந்த முஸ்லிம் சேனையானது ரோம ராஜ்யப் படைகளைத் தோற்கடிக்கும் வன்மை எங்கிருந்து பெற்றது?" என்று வியப்புடன் கேட்டார்.



அப்பொழுது, பழுத்த அனுபவமுள்ள கிழவர் ஒருவர் எழுந்து, "அரசே! முஸ்லிம்கள் நம்மை விட ஒழுக்கத்தில் மேலானவர்கள். இரவில் அவர்கள் இறை வணக்கம் செய்கின்றார்கள். பகலில் நோன்பு நோற்கின்றார்கள். உயர்ந்தோன் தாழ்ந்தோன் என்ற வேறுபாடு அவர்களுக்கிடையில் காணப்படுவதில்லை, ஆனால், நாம் மதுபானம் செய்கின்றோம். ஒழுங்கீனமான வாழ்க்கை நடத்துகின்றோம். நமது கீழோரை மேலோர் துன்புறுத்துகின்றார்கள். போர்க்களத்திலே, அவர்கள் அணிவகுத்து ஒருமனப்பட்டு, ஓர் இரும்புச் சுவர்போல் நின்று, இறைவனையே நம்பிப் போர்செய்து வெற்றிபெறுகின்றார்கள். ஆனால், நாமோ, பலவந்தத்திற்குப் பயந்தும், மனமில்லாமலும் போர்க்களத்திற்குச் செல்லுகின்றோம். இதன் விளைவு வேறு எவ்வாறாக இருக்கமுடியும்?" என்று கூறினர்.

ஹஸ்ரத் அபூ உபைதா போன்ற ஆரம்ப முஸ்லிம் பெருமக்களை நினைவு படுத்தியே, அல்லாமா இக்பால்,

"கடும் போருக்கிடையிலும் தொழுகை நேரம் வந்துவிட்டால், முஸ்லிம்கள் உடனே கிப்லாவை நோக்கி நின்று, நெற்றியை நிலத்தில் வைத்து (இறைவா!) உன்னைத் தொழுவார்கள்.

அச்சமயம் மன்னர் மஹ்முதும், (அவரது) அடிமை அயாஸும் ஒரே வரிசையில் தோளோடு தோள் சேர்ந்து நின்று தொழுவார்கள்.

அந்த நிலைமையிலே, அடியான், எஜமான், என்ற வேறுபாடு மறைந்து இருவரும் ஒன்றாயினர். அடியானும் எஜமானும், ஏழையும் சீமானும், அந்நேரத்தில் சமமாகவே காணப்பட்டார்கள்.

உனது திருச்சந்நிதானத்தில் தலைசாய்க்கும் நேரத்திலே, ஒவ்வொரு முஸ்லிமும் மற்ற முஸ்லிமை உடன் பிறந்தோராகவே கருதினர்" என்று இறைவனிடம் முறையிடும் ரீதியில் "ஷிக்வா–ஜவாபே ஷிக்வா" என்னும் தமது கவிதையில் கூறுகின்றார்.

# 6. ஹஸ்ரத் அம்ரு பின் ஆஸ் (ரலி)

அம்ரு பின் ஆஸ் (ரலி), காலித் பின் வலீத் (ரலி) இவ்விருவரும், பெருமானார் (ஸல்) மதீனாவுக்குச் சென்ற எட்டாம் ஆண்டில் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டவர்கள். இவ்விருவரும் மக்காவாசிகள். குரைஷ் குலத்தைச் சேர்ந்தவர்கள்.

அம்ரு பின் ஆஸ் முஸ்லிமான பிறகு அரபுநாட்டின் வடகிழக்கிலுள்ள, உமான் பிரதேசத்திற்குப் பெருமானாரவர்களால் அனுப்பப்பட்டார். அவர் அங்கு சென்று, இஸ்லாமியப் பிரசாரஞ் செய்து அங்குள்ள மக்களையும் அரசர்களையும் இஸ்லாத்தில் சேர்த்து விட்டுத் திரும்பினார். அதற்குள் மதினாவில் பெருமானாரின் இவ்வுலக வாழ்க்கை முடிவடைந்து, ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) கலீபாவானார்.

**பலஸ்தீன், ஸிரியா :** ஹி. 12 (கி. பி. 633)ல் ஹஸ்ரத் அபூ பக்ர் ஒரு சேனையுடன் அவரை பலஸ்தீன் நாட்டிற்கு அனுப்பினார். அங்கு சென்று யர்தன் (ஜார்டன்) நதிக்கு மேற்கிலுள்ள பாகத்தை வென்று, பிறகு, ஸிரியா நாட்டில், ஹஸ்ரத் அபூ உபைதா, ஹஸ்ரத் காலித் பின் வலீத் போன்ற தளபதிகளுடன் சரித்திரப் புகழ்பெற்ற யர்முக் போரிலும், இதர போர்களிலும் கலந்துகொண்டார். பிறகு, பைத்துல் முகத்தஸ் — எருஸலம் — நகரத்தைக் கைப்பற்றுவதிலும் முதன்மையாக இருந்தார்.

**எகிப்து :** இதற்குள் ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) காலமானார். பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) இரண்டாம் கலீபாவாக அமர்ந்தார். ஹி. 19 (கி. பி. 640)ல் அப்பொழுது நாற்பத்தைந்து வயதுள்ள ஹஸ்ரத் அம்ரு பின் ஆஸ், எகிப்து (மிஸ்ர்) நாட்டை வென்றார். ஏன்? அப்பொழுது அந்த நாடு ரோம ராஜ்யத்தில் இருந்தது. ரோம சக்ரவர்த்தி முஸ்லிம்களை அழிப்பதற்காக அந்த நாட்டைத் தமது கடற்படைக்கும், நிலப்படைக்கும் ரரனுவத்தளமாக உபயோகித்



தார். அக்காலத்தில் மத்தியதரைக் கடலிலும் அதைச் சுற்றியிருந்த நாடுகளிலும் ஆதிக்கம் பெற்றிருந்த ரோமர்களை வென்றதில், அம்ருவின் ராணுவத் திறமையின் உயர்வு வெளியாகின்றது.

எகிப்துநாட்டை வென்ற பிறகு, அங்கிருந்த கிறிஸ்தவப் பிரஜைகளுடனும், கிப்தி (காப்த்) ஜாதியாருடனும் மதபேதமின்றி அன்புடன் தொடர்புகொண்டு, உயர்ந்த நிர்வாக, நீதிமுறைகளை அமைத்தார். கெய்ரோ (காஹிரா) என்னும் நகரை நிர்மாணித்துஃபுஸ்தாத் (Fustat) என்று பெயரிட்டார். அன்றுமுதல் இன்றுவரை பதினான்கு நூற்றாண்டுகளாக அந்த நாடு முஸ்லிம்களின் ஆட்சியில் இருந்து வருகின்றது. மேலும், எகிப்து நாடு இப்பொழுது மத்தியகிழக்குப் பிரதேசத்தில் தலைமைத்துவம் பெற்றிருக்கின்றது.

ஹஸ்ரத் உமர் இறந்த பிறகு, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மூன்றாம் கலீபாவாக நியமனம் பெற்றார். அக்காலத்தில், அவர் அப்துல்லாஹ் பின் ஸஅத் என்பவரை எகிப்து நாட்டின் கவர்னராக நியமித்தார். எனவே, ஹஸ்ரத் அம்ரு பின் ஆஸ், அங்கிருந்து திரும்பிவந்து. அரசியல் விஷயங்களில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்தார்.

ஹஸ்ரத் உஸ்மான் இறந்து, ஹஸ்ரத் அலீ (ரலி) நான்காம் கலீபாவானார். அதற்குப் பிறகு, ஸிரியாவில் கவர்னராயிருந்த அமீர் முஆவியாவுக்கும் ஹஸ்ரத் அலீக்கும் எதிர்ப்பு ஏற்பட்டது.

**அமீர் முஆவியா :** இருவருக்குமிடையில் ஸிரியா, இராக் இவ்விரு நாட்டு எல்லைப்புறத்தில் நடந்த ஸிப்பின் (Siffin) போரில், அமீர் முஆவியாவின் கட்சியில் அம்ரு பின் ஆஸ், சேர்ந்து ஹஸ்ரத் அலீயை எதிர்த்தார். இரு கட்சியாரும் போர்நிறுத்தம் செய்து மத்தியஸ்தரை நியமனம் செய்தபொழுது, அமீர் முஆவியாவின் சார்பில் அம்ரு பின் ஆஸ் மத்தியஸ்தராகவும், ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி என்பவர்

ஹஸ்ரத் அலீயின் சார்பாக மத்தியஸ்தராகவும் நியமிக்கப் பட்டார்கள். அச்சமயம், அம்ரு பின் ஆஸ் ஒரு தந்திரம் செய்தார். அதாவது. ஹஸ்ரத் அலீயை நீக்கிவிட்டு அமீர் முஆவியாவை கலீபாவாக விளம்பரப்படுத்தினார். இதை ஹஸ்ரத் அலீ ஒப்புக்கொள்ளவில்லை.

**எகிப்து :** இதற்கிடையில், அமீர் முஆவியாவின் அனுமதி பெற்று ஹி. 38 (கி. பி. 658)ல் அம்ரு பின் ஆஸ் எகிப்தில் பிரவேசித்தார். அப்பொழுது அங்கு ஹஸ்ரத் அலீயின் சார்பாக கவர்னராக இருந்த முஹம்மத் பின் அபூபக்ர் என்பவரை அம்ரு பின் ஆஸ் தோற்கடித்துத் தாமே அந்த நாட்டு கவர்னரானார்.

**கொலை செய்ய முயற்சி:** அப்பொழுதிருந்த சூழ்நிலையில், மூன்று நயவஞ்சகர் இரகசியமாகத் தயாராகி, அக்காலத்தில் இஸ்லாமிய உலகில் பிளவை உண்டாக்கிக் கொண்டிருந்த ஹஸ்ரத் அலீ, அமீர் முஆவியா, அம்ரு பின் ஆஸ் ஆகிய மூவரையும், ஒரு குறிப்பிட்ட தேதியில் கொன்றுவிட முடிவு செய்தார்கள். அந்தத் திட்டப்படி ஹஸ்ரத் அலீயைக் கூபா நகரில் ஒருவன் கொலைசெய்துவிட்டான். (திமஷ்க்) டமஸ்கஸ் நகரில், அமீர் முஆவியாவை இரண்டாம் மனிதன் கொல்ல முயன்றான். ஆனால், அவர் காயப்பட்டுக் குணமடைந்து விட்டார்.

எகிப்தில், அம்ரு பின் ஆஸ் ஹி. 40-ம் ஆண்டு ரமலான் மாதம் பதினைந்தாம் தேதி (கி. பி. 661 ஜனவரி 22) தமது சார்பாக காலைத் தொழுகை நடத்த இன்னொருவரைப் பள்ளிவாயிலுக்கு அனுப்பியிருந்தார். ஆகையால், அந்த மனிதர் கொல்லப்பட்டார். அம்ரு பின் ஆஸ் தப்பிவிட்டார்.

**மரணம் :—** ஹி. 42 (கி. பி. 663)ல் தமது தொண்ணூறாம் வயதில், எகிப்து நாட்டின் கவர்னராக இருந்து ஹஸ்ரத் அம்ரு பின் ஆஸ் (ரலி) காலமானார்.

**சிறப்புக்கள் :—**அம்ரு பின் ஆஸை, "எகிப்தின் வெற்றியாளர்" என்று நாம் புகழ்கின்றோம். நூற்றுக் கணக்கான



போர்க்கப்பல்கள் மத்தியதரைக்கடலை அக்காலத்தில் ரோம ராஜ்யத்தின் ஏரியாக மாற்றியிருந்தன. லக்ஷக்கணக்கான போர்வீரர்கள் கடற்படையிலும், நிலப்படையிலும் இருந்தார்கள். ஆனால், முஸ்லிம்களின் போர்முறை புராதனமானது. போர்க்கருவிகளும், பணக் குவியல்களும் அவர்களிடம் கிடையாது. நாலாயிரம் முஸ்லிம்கள் சாதாரண உடையுடனும், வில்லுடனும், வாளுடனும், பட்டினியும், பசியுமாகப் போர்செய்து, எகிப்து நாட்டை வென்றார்கள். ஆனால், இறைநம்பிக்கையிலும், கட்டுப்பாட்டிலும், கீழ்ப்படிதலிலும், முஸ்லிம் வீரருக்கு ஒப்பாரும், மிக்காரும் அக்காலத்தில் இல்லை. ஹஸ்ரத் உமர் பலஸ்தீன் நாட்டிற்கு விஜயம் செய்தபொழுது எகிப்துநாட்டைக் கைப்பற்ற அனுமதி தந்தார். என்றாலும், அவர் மதீனா சென்ற பிறகு கவலைநிறைந்திருந்தார். தமது பிழையின் காரணமாக ஒரு முஸ்லிமாவது உயிர்துறந்துவிடக்கூடாதென்று அஞ்சினார். "இஸ்லாமியக் குடியரசின் எல்லையில் ஒரு மிருகம் கஷ்டப்பட்டாலும் அதற்காக ஆண்டவனிடம் நான் கணக்குக் கொடுக்கவேண்டியிருக்கும்" என்பார் ஹஸ்ரத் உமர்.

முற்காலத்திலே, மகாபெரிய அலக்சாந்தர் என்ற கிரேக்கத் தளபதி எகிப்து நாட்டை வென்று, அலக்சாந்திரியா (இஸ்கந்தரியா) என்று தமது பெயரால் எகிப்துக் கடற்கரையில் ஒரு நகரம் நிர்மாணித்தார். கிரேக்க ஆட்சிக்குப் பிறகு, இந்த நாடு ரோமர்களின் ஆட்சியில் சென்றது. மேலும், மூஸா நபி, யூஸுப் நபி, இப்ராஹீம் நபி போன்ற இறைதூதர்களுடன் தொடர்புகொண்டதும் இந்த எகிப்துநாடே. இத்தகைய பழம்பெருமை கொண்ட நாட்டை, கோட்டை மதில்களைத் தகர்க்கும் மன்ஜனிக் மெஷின்கள் இல்லாமலே, பலம்பொருந்திய பல கோட்டைகளை வென்ற பெருமை, தளபதி அம்ரு பின் ஆஸுக்கும் அவருடைய தோழர்களுக்கும் உரியதாகும்.

அப்பொழுது, எகிப்துநாட்டில் ரோம சக்ரவர்த்தியின் பிரதிநிதியாக இருந்த கைரஸ் (Cyrus) என்பவரால், முஸ்லிம்களிடம் அனுப்பப்பட்ட ஒரு தூதுகோஷ்டி அம்ரு பின்

ஆளிடம் வந்து முஸ்லிம்களுடைய வாழ்க்கையை நன்ருகப் பார்த்துவிட்டுச் சென்றது. அவர்கள் சென்று, தங்கள் ராஜப் பிரதிநிதியிடம்,

"ஒவ்வொருவரும் வாழ்வதைவிட இறப்பதையே விரும்புகின்ற ஓர் இனத்தாரை, புகழைவிடப் பணிவையே விரும்புகின்ற இனத்தாரைப் பார்த்துவிட்டு நாங்கள் திரும்பி வருகின்ருேம். (முஸ்லிம்களாகிய) அவர்களில் ஒருவருக்காயினும் இந்த உலக இச்சை கிடையாது. தரையின் மீதே அவர்கள் உட்காருகின்ருர்கள். உட்கார்ந்து தலை குனிந்து சாப்பிடுகின்ருர்கள். அவர்களது தலைவர் அம்ரு பின் ஆஸ் என்பவர் எல்லோரைப் போன்றே காணப்படு கின்ருர். பெரியோர், சிறியோர் என்னும் பாகுபாடு அவர் களிடம் கிடையாது. அடிமை யார்? எஜமான் யார்? என்று அறியமுடியவில்லை. தொழுகைநேரம் வந்துவிட்டால் ஒருவராயினும் தம்மை முன்னிலைப்படுத்தாமல் இருப்ப தில்லை. எல்லோரும் தங்கள் உடல் உறுப்புகளைக் கழுவிக் கொண்டு, வெகு பணிவுடன் இறைவணக்கம் செய்கின்ருர் கள்" என்று முஸ்லிம்களைப் புகழ்ந்து கூறினுர்கள்.

பிறகு, அதே ரோம சக்ரவர்த்தியின் அழைப்பிற்கு இணங்கி அவரிடம் சென்ற முஸ்லிம் தூதுகோஷ்டிக்கு ஒரு கருப்பு நீக்ரோ முஸ்லிம்—உபாதா பின் ஸாமித்—என் பவர் தலைவராக அனுப்பப்பட்டார். முஸ்லிம்களின் சகோ தரத்துவத்தையும், சமத்துவக் கொள்கையையும் கண்ணுரக் கண்டு அந்த கவர்னர் ஆச்சரியப்பட்டார். சிறு தொகை யினராக இருந்தபோதிலும், இத்தகைய உயர்ந்த பண்பாடு கள் உள்ள முஸ்லிம்களைத் தாம் வெல்லமுடியாதென்று அவர் முடிவுசெய்து, தமது கருத்தை ரோம சக்ரவர்த்தி ஹர்கல் (Heraclius) என்பவருக்கு அறிவித்தார்.

தளபதி அம்ரு பின் ஆஸின் போர்த்திறமை, விடா முயற்சியும், இறைநம்பிக்கையும் அவர் அலக்சாந்திரியா நகரை வென்றபொழுது வெளியாகின்றன. அப்பொழுது, அவரிடம் ஜுபைர் பின் அவ்வாம் என்பவரது துணைப் படை யுடன், பதினெண்ணுயிரம் முஸ்லிம்கள் இருந்தார்கள்.



ஆனுல், அலக்சாந்திரியா கோட்டையிலே, ஐம்பதாயிரம் போர்க்கோலம் பூண்ட, ரோம நிலப் படையும், கடலில் அக்காலத்தில் மத்தியதரைக் கடலில் புகழ்பெற்ற ரோமரது கடற்படையும் நின்றுகொண்டிருந்தன. உதவிப் படைகள் எப்பொழுதும் வந்துகொண்டேயிருந்தன.

முஸ்லிம்களிடம் என்ன இருந்தது? மருந்துக்கும் அவர் களிடம் ஒரு போர்க்கப்பல் கிடையாது. கோட்டை மதிலைத் தகர்க்கவோ, கோட்டைக்குள் கல் வீசவோ, முஸ்லிம்களிடம் பொறி(மெஷின்)கள் கிடையாது. மதீனு வெகுதூரத்தி லிருந்தது. அங்கிருந்து ராணுவ உதவி கிடைப்பதும் எளி தல்ல. ரோம ராஜ்யத்தின் செல்வமும், ராணுவ வன்மையும், மனித பலமும், போர்க்கருவிகளும், போர்க் கப்பல்களும் ரோமர்களிடம் அளவுகடந்து இருந்தன.

ஆனுல், முஸ்லிம்களிடம், கட்டுப்பாடு, கீழ்ப்படியும் குணம், சமத்துவம், சகோதரத்துவம், தியாகப் பண்பு, தளராத இறைநம்பிக்கை—இவைகளே இருந்தன. அக் காலத்திலே, ரோம ராஜ்யத்தின் தலைநகர் கான்ஸ்தான்த்தி நோபில். அதற்கடுத்தபடியாக, உலகிலே நன்கு அரண் அமைந்த இடம் அலக்சாந்திரியா. இந்த நாட்டை, இத் தகைய சங்கட நிலையில், இத்தகைய நெருக்கடியான சூழ் நிலையில் தளபதி அம்ரு பின் ஆஸ் வென்ருர். "வந்தேன்! பார்த்தேன்! வென்றேன்!" என்று அவர் பெருமிதத்துடன் கூறியிருந்தால் அது உண்மையே யாகும்.

அவரது அரிய அரசியல் நிர்வாகமும் அவரது புகழை விளக்குகின்றது. அந்த நாட்டுக் கிறிஸ்தவர்களுடைய மதத் திலும், பழக்க வழக்கங்களிலும் அவர் தலையிடவில்லை. ஒவ் வொரு முதியோர்மீதும் இரண்டு தீனர் வரி (பத்தனு) விதித்தார். நிலவரியானது சிறிய அளவில் தானியமாக வசூலிக்கப்பட்டது.

எகிப்து வெற்றியின் நற்செய்தி, மதீனுவுக்கு எட்டியது. கலீபா உமர் உடனே எல்லா முஸ்லிம்களையும் அழைத்து அதை அறிவித்தார். பிறகு, எல்லோரும் நின்று பள்ளி வாயிலில் தொழுது, இறைவனுக்கு நன்றி செலுத்தினுர்கள்.

# 7. உக்பா பின் நா:.பீ

## (UKBA BIN NAFI)

(ஹி. 10—63 கி. பி. 630—683)

இஸ்லாமிய வரலாற்றுத் தொடக்கக் காலத்திலே, ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ் (Sa'ad bin Abi Waqqas) என்னும் தளபதி இராக் நாட்டிலே பாரசீகப் பேரரசைத் தோற்கடித்தார். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (Khalid bin Waleed) என்னும் தளபதி ஸிரியா நாட்டிலே ரோம ராஜ்யப் பெருஞ்சேனையைத் தோற்கடித்தார். ஹஸ்ரத் அம்ரு பின் ஆஸ் என்னும் தளபதி ஆப்பிரிக்காவிலே எகிப்து நாட்டை வென்றார். எகிப்து நாட்டிலிருந்து மேற்கு நோக்கிச் சென்று, அத்லான்திக் மகா சமுத்திரத்தில் இறங்கி அதற்கப்பால், "நிலப்பாகம் இனி இல்லையே; ஒரே இறைவன் என்ற புனிதத் தூதைக் கொண்டுசெல்ல இனி இடமில்லையே!" என்று துக்கத்துடன் திரும்பியவரே உக்பா என்னும் வீரத் தளபதி.

நபி பெருமானாரின் வாழ்க்கையின் இறுதியில் அவர் பிறந்தார். எகிப்து நாட்டை வென்ற அம்ரு பின் ஆஸ் என்பவரது சகோதரியின் மைந்தர். அம்ரு பின் ஆஸ் எகிப்து நாட்டின் கவர்னராக ஆட்சிசெய்து இறந்தார். தமது மருமகனுக்குச் சிறந்த ராணுவப்பயிற்சி அளித்தார். அவர் ஹி. 43 (கி. பி. 663)ல் இறப்பதற்குமுன், உக்பாவை ஆப்பிரிக்காவிலுள்ள இஸ்லாமிய சேனைக்குத் தளபதியாக நியமித்தார். அச்சமயம், எகிப்துக்குத் தெற்கில் ஸூதான் (Sudan) பிரதேசத்திலே உக்பா இஸ்லாமியப் பிரச்சாரஞ் செய்துகொண்டிருந்தார்.

**கய்ரவான்:** உடனே, உக்பா பத்தாயிரம் குதிரைப் படையுடன் மேற்கு நோக்கிப் புறப்பட்டார். அக்காலத்திலே எகிப்திலிருந்து மேற்கே அத்லான்திக் மகாசமுத்திரம் வரையில் இப்பொழுது, மொராக்கோ, அல்ஜீரியா, தூனிஸ், லிபியா எனப்படும் நாடுகளில் பர்பர் (Berber) என்னும் ஓர் இனத்தார் வசித்தார்கள். அவர்கள்மீது ரோம ராஜ்யத்தின் ஆதிக்கம் இருந்தது. அவர்கள் ஐரோப்பாவிலிருந்து வந்து வடஆப்பிரிக்காவில் குடியேறியவர்கள். அவர்களில் பலர் கிறிஸ்தவர்களாகிவிட்டார்கள்.

உக்பாவின் முதன்மையான நோக்கம் ஒன்றே தெய்வம் என்னும் இஸ்லாமியப் பிரச்சாரமே. இதில், ரோம ராஜ்யத்தின் எதிர்ப்பையும், பர்பர்களின் எதிர்ப்பையும் அவர் எதிர்பார்த்தே சென்றார். ரோம சக்ரவர்த்தி இந்த பர்பர்களின் உதவியால் எகிப்துநாட்டை முஸ்லிம்களிடமிருந்து வெல்ல முயன்றார். வடஆப்பிரிக்காவை, குறிப்பாக, அதன் மேற்குப் பாகத்தை, அக்காலத்தில் இப்ரிக்கிய்யா (Ifrikia) என்று அழைத்தார்கள். இப்பொழுது மொராக்கோ என்று நாம் அழைக்கும் நாட்டை மக்ரிப் என்று அவர்கள் அக்காலத்தில் அழைத்தார்கள். பர்பர்கள் முஸ்லிம்களாகிவிட்டால் ரோமர்களுக்குத் தோல்வி ஏற்படும் என்பதை உக்பா உணர்ந்தார். உக்பா முன்னேறிச் சென்றார். பய்லாகீன் பிரதேசத்திலே கி. பி. 670ல் பல கோட்டைகளை வென்றார். இப்ரிகியா முழுமையும் அவரது முயற்சியால் வெல்லப்பட்டு எகிப்துநாட்டின் மாகாணமாகிவிட்டது. அவரது பிரசாரத்தால் பர்பர் இனத்தார் முஸ்லிமானார்கள். அதற்குப் பிறகு, அவர்கள் அவருக்கு ராணுவ உதவியும் செய்தார்கள்.

அந்த நாட்டில் மத்தியதரைக்கடலில் தென்கரைக்குச் சிறிதுதூரத்தில், கய்ரவான் என்னும் ராணுவத் தளத்தை உக்பா பின் நாபீ நிறுவினார். அதன் நடுப்பாகத்தில் ஸித்தி உக்பா என்னும் பள்ளிவாயிலைக் கட்டினார். இந்தப் புதிய நகரைத் தமது ராணுவத் தளமாகப் பயன்படுத்தினார். கி. பி. 678ல் அவரிடம் பத்தாயிரம் குதிரைப்படை இருந்தது. முன்னரே ஹஸ்ரத் உத்மான் காலத்தில் முஸ்லிமாகிவிட்ட பர்பர்களெல்லாம் அவரது இஸ்லாமியப் பிரச்சாரத்திலே முழுமனதுடன் அவருக்கு உதவிசெய்வார்கள்.

**நீக்கப்பட்டு, இரண்டாம் நியமனம்:—** இதற்கிடையில் கவர்னர் அம்ரு பின் ஆஸ் இறந்துவிடவே, அடுத்த கவர்ன

ராக மஸ்மா பின் மக்லத் அன்ஸாரி என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் ஹி 53 (635)ல் உக்பாவை நீக்கிவிட்டார். ஆனால், உக்பா அங்கிருந்து திமஷ்க் நகர்சென்று அப்பொழுது கலீபாவாக இருந்த அமீர் முஆவியாவிடம் முறையிட்டார். சிலகாலம் சென்று, ஹி. 62 (கி. பி. 682)ல் மறுபடியும் இப்ரிகியாவுக்கு அவர் அனுப்பப்பட்டார்.

அப்பொழுது, அவர் பெருமளவில் தயாரிப்புகள் செய்து புறப்பட்டார். கய்ரவானிலிருந்து புறப்பட்டு மேற்கே மொராக்கோ நோக்கிச் சென்றார். அவரை ஜாப், தாஹர்த் பிரதேசங்களில் பர்பர் இனத்தாரும், ரோமர்களும் எதிர்த்தார்கள். ஆனால், அவர்களை அவர் வென்று, அவர்களிடம் கப்பமும் பெற்றார். அங்கிருந்து வடமேற்கு ஆப்பிரிக்காவில் தஞ்சா (தஞ்சீர்-Tanjier) என்ற துறைமுகம்வரை சென்றார். இது ஐரோப்பாவில் ஸ்பெய்ன் நாட்டின் தெற்கிலுள்ள ஜிப்ரால்டருக்குத் தெற்கே இருக்கின்றது. இவ்விரு இடங்களுக்குமிடையில் ஜிப்ரால்டர் ஜலசந்தி இருக்கின்றது. அத்லாண்டிக் மகாசமுத்திரத்திலிருந்து மத்தியதரைக்கடலுக்கு இந்த ஜலசந்தி வழியாக நீர்ப்பாதை இருக்கின்றது. இந்தப் பிரதேசத்தை வென்றபிறகு, ஸ்பெயின் நாட்டின் வழியாக ஐரோப்பாவில் பிரவேசிக்க எண்ணினார். ஆனால் அவரது ராணுவ ஆலோசகர்கள் அவரைத் தடுத்துவிட்டார்கள். மேலும், வடமேற்கு ஆப்பிரிக்காவில் செய்ய வேண்டிய வேலை அதிகமாக இருப்பதாகவும், பர்பர் இனத்தார் அனைவரும் முஸ்லிம்கள் ஆகாதவரையில் ஐரோப்பாவில் பிரவேசம் செய்யும் எண்ணத்தைக் கைவிடவேண்டுமெனவும் அவர்கள் ஆலோசனை கூறினார்கள்.

**பர்பர்கள்மீது வெற்றி:** இந்த ஆலோசனையை ஏற்றமுள்ளதென்று உக்பா ஏற்றுக்கொண்டார். அத்லஸ் மலையைக் கடந்து மேற்கே சென்று பல வெற்றிகள் பெற்றார். அவரது ராணுவ வெற்றிகள் மட்டுமே அவருக்குப் புகழ் கொடுக்கவில்லை. அங்குள்ள பர்பர்கள் அனைவரும் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்தார்கள். இதையே அவர் பெரிய வெற்றியாக மதித்தார். ஏன்?



இவ்வாறு முன்னேறிக்கொண்டு மேற்கு நோக்கிச் சென்று ஆப்பிரிக்கா கண்டத்தின் மேற்குக் கரையை அடைந்தார். சமுத்திரக்கரையைப் பார்த்தார்! பெருஞ்சமுத்திரம்! அட்லாண்டிக் மகாசமுத்திரம்! உத்வேகத்தில் குதிரையை நடத்திக்கொண்டு கடலில் இறங்கினார். இனி நடக்க வழியில்லை என்று தெரிந்துகொண்டார். வானத்தை நோக்கினார். "இறைவனே! உன் புனித நாமத்தை நான் விளம்பரப்படுத்தத் தயாராக இருக்கின்றேன்! இனி நிலப்பரப்பு இருந்தால் அந்தப் பணியைச் செய்வேன்! ஆனால், என் கண்களுக்குமுன் சமுத்திரம்தானே காட்சியளிக்கின்றது! ஆகையால் திரும்பிவிடுகிறேன்!" என்றார். இவ்வாறு, எங்கும் வெற்றிபெற்று அட்லான்திக் மகாசமுத்திரக் கரையிலிருந்து கிழக்கே திரும்பினார்.

**பெரும்பிழை:** திரும்பும்பொழுது தளபதி உக்பா பெரும் பிழையொன்று செய்துவிட்டார். அவர் அந்த நாட்டில் பல வெற்றிகள் பெற்றார் என்பது உண்மையாயினும், அங்கு அவருக்கு எதிர்ப்புக்கள் பல இருந்ததை அவர் மறந்துவிட்டார். அதாவது, ஆங்காங்கு ரோமராஜ்யத்தின் ராணுவ பலம் இருந்தது. பர்பர் மக்கள் இஸ்லாத்தில் சேர்ந்தார்களாயினும், அவர்களது தலைவர்களில் ஓருசிலர் மறைமுகமாக உக்பாவை வெறுத்தார்கள். இத்தகைய எதிர்ப்பு குமுறிக்கொண்டிருக்கையில்தான், அவர் ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரையிலிருந்து கிழக்கு நோக்கித் திரும்பினார். தமது படைகளைப் பல பாகங்களாகப் பிரித்தார். உள்நாட்டுப் பாதுகாப்பிற்காக ஒன்றன்பின் ஒன்றாகப் பலமாகாணங்களுக்கு அவற்றை அனுப்பினார். அதாவது, வன்மையுள்ளதொரு பெரும்படையைச் சிறிய பகுதிகளாகப் பிரித்து வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பிவிட்டதோடு, தம்மிடம் சிறுபடையொன்றைமட்டும் வைத்திருந்தார். அப்பொழுதிருந்த சூழ்நிலையில் அவர் அவ்வாறு செய்திருக்கக்கூடாது.

**மரணம்:**—உக்பாவுடன் பல பர்பர்கள் இருந்தார்கள். ஆனால், அரபியர் சிலரே. அவர் அந்த பர்பர்களை நம்பிப்

புறப்பட்டார். அவர் கய்ரவானுக்கு வரும் வழியிலே, அதுவரை காவலில் வைக்கப்பட்டிருந்த குஸைலா என்னும் பர்பர் தலைவரொருவர் உக்பாவிடமிருந்து தப்பியோடி அவரைத் திடீரென்று தாக்கினர். ஸஹாரா பாலைவனத்திலே தஹூதா என்னுமிடத்தில் இந்த எதிர்ப்பு ஏற்பட்டது. ஹி. 63 (கி. பி. 683)ல் உக்பாவும் அவரது முன்னூறு தோழர்களும் கொல்லப்பட்டார்கள். அவர் இறந்த இடத்திலே இப்பொழுது ஸையிதீ உக்பா என்னும் கிராமம் இருக்கின்றது.

சிறப்புகள்:—உக்பா பின் நாஃபி போன்ற ஆரம்ப முஸ்லிம்களை நாம் போற்றக்கடவோம். பார்வைக்கு எட்டாத அருபியான அல்லாஹ்வை ஏற்றுக்கொள்ள மறுத்த மக்களை, அந்த ஆரம்ப முஸ்லிம்கள் தங்களது உடல், பொருள், ஆவியைத் தியாகஞ்செய்து, இறைவன் பக்கம் இழுத்தார்கள். சீரழிந்த உலகினைச் சிறப்படையச் செய்தார்கள். ஏகத்துவத்தை நிலைக்கச்செய்தார்கள். அல்லாஹ்வுக்காக உயிரையும் மதியாமல் போரிட்டார்கள். சிலபோது, நிலத்தில் நின்று சமர் செய்தார்கள். சிலபோது, நீரிலும் போர் புரிந்தார்கள். சிலபோது, ஐரோப்பாவிலே, மாதா கோயில்களில் நின்று "அல்லாஹு அக்பர்—அல்லாஹ் மேலோன்" என்னும் பாங்கு நாதம் எழுப்பினர்கள். சிலபோது, ஆப்பிரிக்கா கண்டத்தின் ஸஹாராவின் சுடுமணலில் நின்று அல்லாஹ்வின் பரிசுத்த நாமத்தை முழக்கினர்கள். பளுவான கைபர் கோட்டைக் கதவைப் பெயர்த்தெறிந்தார்கள். ரோம சக்ரவர்த்தியின் இஸ்தம்பூல் முதலான நகரங்களை வென்றார்கள். ஈரான் நாட்டிலே பார்ஸிகள் நெடுங்காலமாகத் தெய்வமென்று வணங்கிவந்த அக்கினிகுண்டத்தை அணையும்படி செய்தார்கள். ஆண்டவன் ஆட்சி—ஹுகூமதுல் இலாஹி—யை உலகில் நிறுவினர்கள். உண்மையான சகோதரத்துவத்தைச் செயல்முறையில் செயல்படுத்தினர்கள். காடுகளிலும் கடல்களிலும் சென்று ஏகத்துவத்தைப் பரப்பினர்கள். அத்லான்திக் மகா சமுத்திரத்திலும் குதிரைகளை ஓட்டிச் சென்றார்கள்.



தளபதி உக்பா பின் நாஃபீ வட ஆப்பிரிக்காவிலே இறைவனுடைய ஏகத்துவப் பிரச்சாரத்தைச் செய்துகொண்டு மேற்கு நோக்கி அத்லான்திக் மகாசமுத்திரம்வரை சென்றார். தாம் ஏறிச்சென்ற குதிரையுடன் கடலில் இறங்கினர். வானத்தை நோக்கி: இறைவா! என் கண்களுக்கு முன் பெருங்கடல் தானே காட்சியளிக்கின்றது! இதற்கப்பால் நிலப்பாகம் காணவில்லையே! இருந்தால், நான் அங்கும் சென்று உனது திருநாமத்தைப் பரப்புவேனே!" எனக் கூறிவிட்டுத் துக்கத்துடன் திரும்பினர்.

உலக ராணுவ சரித்திரத்திலே உக்பா பின் நாஃபீ என்பவருக்கு மேலான இடமுண்டு. உலகிலே பெரும்பாலையான ஸஹாராவிலே, பத்தாயிரம் வீரருடன் ஆயிரக்கணக்கான மைல்கள் முன்னேறி, அவர் அளவுகடந்த ஆபத்துக்களுக்கு இலக்காகிய சோகக் காதை நமக்கொரு நல்ல படிப்பினையாகின்றதல்லவா?

அவரது நோக்கங்கள் இரண்டே. ஒன்று, அந்த நாட்டு மக்கள் ஒரே தெய்வத்தை வணங்கி, உலக சகோதரத்துவத்தை நிறுவும் முஸ்லிம்களாக வேண்டும். இரண்டு, ரோமராஜ்யத்தின் வன்மை அழியவேண்டும். அல்லது, குறையவேண்டும். இவ்விரண்டு குறிக்கோள்களையும் அவர் அடைந்தார். அவரது பணியின் விளைவாக இன்று வட ஆப்பிரிக்கா முழுதும் முஸ்லிம்கள் நிறைந்த நாடாக விளங்குகின்றது.

ஐயாயிரம் மைல்கள் நீளமுள்ள அந்தக் கொடும் பாலைவனத்தைக் கடந்து, பத்தாயிரம் தோழர்களுடன் ஒரே ஆண்டில் ஆயிரக்கணக்கான சதுரமைல் பரப்புள்ள அவ்வளவு பெரிய நிலப்பாகத்தை வென்ற அவரது புகழே உண்மையான புகழ்.

# 8. முஹம்மத் பின் காஸிம்

இஸ்லாமிய சரித்திர, முதல் நூற்றாண்டிலே முஸ்லிம்கள் மேற்கில் அத்லான்திக் மகா சமுத்திரத்திலிருந்து, கிழக்கில் இந்தியாவின் எல்லைவரையிலும் ஆட்சி செய்தார்கள். அப்பொழுது உமய்யா மரபைச் சேர்ந்த கலீபாக்கள் ஸிரியாவிலே டமஸ்கஸ் (திமஷ்க்) நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தினர்கள். இஸ்லாமிய ராஜ்யத்தின் கிழக்குப் பகுதிக்கு ஹஜ்ஜாஜ் பின் யூஸுப் (Hajjaj bin Yusuf) என்பவர் ராஜப் பிரதிநிதியாக இருந்தார்.

முஸ்லிம் கலீபாவுக்கு இலங்கை மன்னர் அனுப்பிய அன்பளிப்புகள் எட்டுக் கப்பல்களில் இலங்கையிலிருந்து ஸிந்து நாட்டுக் கடற்கரை யோரமாக தேபல் (Debal) துறைமுகத்தின் அருகில் சென்று கொண்டிருந்தன. அந்த நாட்டு மக்களால் அவை கொள்ளையடிக்கப்பட்டன. கொள்ளைக் கூட்டத்தாரைத் தண்டித்து நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென்று ஹஜ்ஜாஜ் பின் யூஸுப் கோரினர். ஆனல், ஸிந்து நாட்டு மன்னர் அந்தக் கொள்ளைக்கூட்டத்தாரைத் தண்டிக்க மறுத்துவிட்டார். மேலும், முஸ்லிம ராஜ்யத்தில் பலூசிஸ்தான் மாகாணத்திலிருந்து வந்த அராஜகக் கூட்டத்தைச் சேர்ந்த சில முஸ்லிம்களுக்கும் ஸிந்து நாட்டு மன்னர் தமது நாட்டில் அடைக்கலம் கொடுத்திருந்தார். எனவே ஹஜ்ஜாஜ் என்னும் ராஜப் பிரதிநிதி தமது சகோதரரின் புத்திரரான, முஹம்மத் பின் காஸிம் என்பவரை ஸிந்து நாட்டிற்கு ஒரு படையுடன் அனுப்பினர்.

**ஸிந்து வெற்றி**:—ஹி. 93 (கி. பி. 712)ல் இந்தத் தளபதி ஸிந்து நாட்டிற்கு வந்து தேபல் நகரைக் கைப்பற்றினர். பிறகு, அந்நாட்டின் வடபாகத்திற்குச் சென்று இப்பொழுது ஸிந்து நாட்டில் இருக்கும் ஹைதராபாத் நகருக்குத் தெற்கே நீருன் எனனுமிடத்தையும் வென்றார்.

இதற்கிடையில், தாஹிர் (Dahir) என்னும் ஸிந்து நாட்டு மன்னர், பெருஞ்சேனையுடன் வந்து ராவர் என்னுமிடத்தில்,



முஸ்லிம்களை எதிர்த்தார். பெரும்போர் நடந்தது. போரில் அவர் இறந்தார். அந்த நகரைக் கைப்பற்றிய பிறகு, முஹம்மத் பின் காஸிம், ஹைதராபாதிற்கு வடக்கிலிருந்த பிராஹ்மனபாத் என்னும் நகரையும், பிறகு ஆலூர் (ஆரூர்) நகரையும் வென்றார். அங்கிருந்து வடக்கே சென்று முல்தான் நகரை வென்றார். அங்கிருந்து பஞ்சாப், கஷ்மீர் நாடுகளை வெல்லத் திட்டமிட்டார். அச் சமயத்திலே, "உடனே திரும்பிவிடவேண்டும்" என்று கலீபாவிடமிருந்து கட்டளை வந்தது. உடனே அவர் அரபியாவுக்குச் சென்று விட்டார்.

**பலன்கள்**:—இந்தியாவில் முதலாவது நுழைந்த முஸ்லிம் தளபதி முஹம்மத் பின் காஸிம் என்பவரே. இந்த முஸ்லிம் பிரவேசத்தின் பலனக, இந்தியருக்கும் முஸ்லிம்களுக்கும் நன்மை ஏற்பட்டது. இந்தியர் ஏக தெய்வக் கொள்கையையும், மானிட சகோதரத்துவத்தையும் முஸ்லிம்களிடம் கற்று, சாதி பேதங்களை நீக்க முயன்றார்கள். அதைப் போல முஸ்லிம்கள் இந்தியரிடமிருந்து மருத்துவம், கணிதம் வான சாஸ்திரம், இசை, சித்திரக் கலை, தத்துவக் கலை, முதலியவற்றைக் கற்று, அவற்றை விருத்திசெய்து, ஐரோப்பாவுக்குத் தந்துதவினர்கள்.

ஸிந்து நாட்டில் ஏற்பட்ட முஸ்லிம் ஆட்சியில் இந்திய மக்களுக்கு நிர்வாகத் துறையிலும், சமுதாயத் துறையிலும் நல்லிடம் கிடைத்தது. திருமணம், வாரிசுரிமை, போன்ற விஷயங்களில் ஏற்பட்ட விவாதங்கள் அனைத்திலும் ஹிந்துக்கள் தங்கள் பஞ்சாயத்துக்களில் முடிவுசெய்துகொள்ளும் உரிமைபெற்றார்கள்.

**தாராள அரசியல்**:—ஹிந்துக்களை எவ்வாறு நடத்த வேண்டுமென்று, அச்சமயம் கீழ் நாடுகளுக்கெல்லாம் ராஜப் பிரதிநிதியாக இருந்த ஹஜ்ஜாஜ் பின் யூஸுப் என்பவர் ஒரு சாசனம் எழுதியனுப்பினர். அதில்,

"அவர்கள் (ஹிந்துக்கள்) அடங்கி, கலீபாவுக்கு வரி கொடுக்க ஒப்புக்கொண்டுவிட்டபடியால், அவர்களிட

மிருந்து வேருென்றும் எதிர்பார்க்க வேண்டியதில்லை. அவர்கள் நமது பாதுகாவலின்கீழ் வந்துவிட்டார்கள். நாம் அவர்களது உயிர்களையும், சொத்தையும் அழிக்கக்கூடாது. அவர்களது கடவுளர்களை வணங்கும்படி அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. தனது மதத்தைப் பின்பற்றுவதில் ஹிந்துப் பிரஜைகளில் ஒருவரேனும் தடுக்கப்படலாகாது" எனக் கட்டளையிட்டார்.

முல்தான் நகரை வென்றபொழுது, முஹம்மத் பின் காஸிம்,

"கிறிஸ்தவர்களுடைய மாதா கோவில்களைப் போன்றும், யூதர்களுடைய கோவில்களைப்போன்றும், நெருப்பை வணங்கும் மஜூஸிகளின் அக்கினி குண்டங்களைப் போன்றும், ஹிந்துக்களுடைய கோவில்களும் பாதுகாக்கப்படும்" என்று விளம்பரப்படுத்தினுர்.

முஹம்மத் பின் காஸிம் ஒரு வாலிபர். ஆயினும், அவர் சிறந்த தளபதி. மேலான அரசியல் நிர்வாகி. எல்லா மதத்தாரிடமும் தாராள மனப்பான்மை உள்ளவர். தமது நிர்வாகத்தில் முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் மேலான பதவிகள் அளித்துத் திறம்பட ஆட்சி செய்து மக்களால் நேசிக்கப்பட்டார்.

---

# 9. தாரிக் பின் ஜியாத்

## (TARIQ BIN ZIYAD)

முதலாவதாக ஐரோப்பாவில் பிரவேசித்த முஸ்லிம் தளபதியும், ஸ்பெய்ன், போர்த்துகல் (அந்தலுஸ்) நாடுகளை வென்றவரும் தளபதி தாரிக் பின் ஜியாத் என்பவரே.

நபி பெருமானுருக்குப் பின்னர், நேர்வழி நடந்த நான்கு கலீபாக்கள் காலத்திற்குப் பிறகு, இஸ்லாமியக் குடியரசானது சாம்ராஜ்யமாக மாறிவிட்டது. அல்லாஹ்வின் ஆட்சி நடக்க



வேண்டிய இடத்திலே, உமய்யா குடும்பத்தாரால் ஏறத்தாழ ஒரு நூற்ருண்டுவரை பரம்பரையான அரசாட்சி நடத்தப்பட்டது. எனினும், அக்காலத்தில்தான் இஸ்லாமிய அரசியல் வெற்றிகள் பல கிடைத்தன. ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, கண்டங்களில் இஸ்லாமியக் கொடி சென்றது. அக்காலத்தில், பெரிய சாம்ராஜ்யமாக இருந்த பாரசீக ராஜ்யம் முழுவதையும் முஸ்லிம்கள் வென்ருர்கள். ரோம ராஜ்யத்தின் செழிப்பான பாகங்களை வென்று அதைப் பலவீனமாக்கிவிட்டார்கள். ஐரோப்பாவில் நுழைந்து எண்ணூறு ஆண்டுகள் ஆட்சிசெய்தார்கள்.

நிர்மானுஷ்யமான, அரபியப் பாலைவனமானது இஸ்லாம் மார்க்கத்தின் ஆசீர்வாதத்தால் அற்புதமான தளபதிகளையும், தத்துவ சாஸ்திரிகளையும், விஞ்ஞானிகளையும், அரசியல் நிபுணர்களையும், நிர்வாகிகளையும், உண்டாக்கியது. வீரம், உறுதியான மனப்பான்மை, தன்னடக்கம், தாராள நோக்கம், உயரிய குறிக்கோள், முதலிய அருங்குணங்களில் அந்த வீர மக்கள், அதிசயமான சிறப்புடையோராக இருந்தார்கள். நேர்வழி நடந்த நான்கு கலீபாக்கள் காலத்திலே, காலித் பின் வலீத், ஸஅத் பின் அபீ வக்காஸ், அபூ உபைதா, அம்ரு பின் ஆஸ் போன்ற நாயகத் தோழர்கள் வெற்றிவீரர்களாக விளங்கியதைப் போன்று, உமய்யாக்கள் காலத்திலே, இப்னு முஹல்லப், உக்பா பின் நாஃபீ, தாரிக் பின் ஜியாத், முஹம்மத் பின் காஸிம், மூஸா பின் நுஸைர் போன்ற தளபதிகள் ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா இந்த மூன்று கண்டங்களிலும் வெற்றிகண்டார்கள், கிழக்கில் சீன நாட்டின் எல்லை வரையிலும் சென்ருர்கள். மேற்கில் வட ஆப்பிரிக்காவில் அத்லான்திக் மகா சமுத்திரம் வரை முன்னேறினுர்கள். ஐரோப்பாவிலே, பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸ் வரையும் சென்ருர்கள். இந்தியாவில் ஸிந்து. பஞ்சாப் பிரதேசங்களை வென்ருர்கள். மத்திய தரைக்கடலை "முஸ்லிம் ஏரி" யாக மாற்றினுர்கள்.

**கலீபா வலீத்:** உமய்யா கலீபாக்களில், வலீத் என்பவர் காலத்தில் வெற்றிகள் பல கிடைத்தன. இதனுலும், அவரது

பொதுநல சேவைகளாலும், அவரது ஆட்சியை "உமய்யாக்களின் பொற்காலம்" என்று கூறப்படுகின்றது.

முஸ்லிம்கள் ஐரோப்பாவில் பிரவேசித்த வரலாற்றின் முதற் படலத்தில் தளபதி தாரிக் பின் ஜியாத் என்பவர் அற்புதமான பங்கெடுத்தார். அழியாப் புகழ் பெற்ருர். அவர் ஆரம்பித்த வெற்றிகளின் விளைவாக, இந்த அந்தலுஸ் நாட்டிலிருந்தும், முஸ்லிம்களிடமிருந்தும், கலைகளை விருத்திசெய்து நாகரீகத்தின் முன்னணியில் சென்ருர்கள்.

ஆப்பிரிக்காவிலிருந்து தளபதி தாரிக் கப்பலேறிச் செல்லும் பொழுது நபிபெருமானுர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இவரது கனவில் தோன்றினுர்கள். இறைவனுக்கு நன்றி செலுத்தினுர். ஊக்கம் பெற்ருர். இவர் ஐரோப்பியக் கரையில் இறங்கியவுடன் தாம் ஏறிச்சென்ற கப்பல்களை எரித்துவிட்டு இறைவனையே நம்பி, முன்னேறிய விந்தை வரலாறு நம்மைத் திடுக்கிடச் செய்கின்றது.

அப்பொழுது வலீத் என்பவர் கலீபாவாக இருந்தார். அவரது தலைநகர் ஸிரியா நாட்டிலுள்ள திமஷ்க் (டமஸ்கஸ்) நகரம். அவருக்கு ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் ராஜப் பிரதிநிதிகள் இருந்தார்கள். அக்காலத்தில் மூஸா பின் நுஸைர் என்பவர் வட ஆப்பிரிக்காவில் உமய்யாக்களின் இராஜப் பிரதிநிதியாக இருந்தார். ஐரோப்பாவில் ஸ்பெயின் நாட்டில் ராடரிக் என்னும் கிறிஸ்தவ மன்னர் ஆட்சி செய்துகொண்டிருந்தார்.

ஸ்பெயின் நாடு மிகமிகப் பின்னடைந்திருந்தது. அது அப்பொழுது கீழ ரோம சக்ரவர்த்தியின் பிரதிநிதியால் ஆளப்பட்டு வந்தது. அந்தப் பிரதிநிதியே ஸ்பெயின் அரசர். அந்த அரசருக்கும் அவரது சிற்றரசர் ஜூலியன் என்பவருக்கும் பகைமை இருந்தது. ஆப்பிரிக்காவின் வட கரையில் ஸ்பெயின் நாட்டிற்குத் தெற்கில் உள்ள (தஞ்சியர்-Tanjier) தஞ்சா என்னும் பாகத்தை ஜூலியன் ஆண்டு வந்தார், எனவே, தமக்கு உதவிசெய்படி ஜூலியன் முஸ்லிம்களை அழைத்தார்.



இதையன்றி, வாழ்க்கையின் பல துறைகளிலும் அந்த நாட்டு மக்கள் நசுக்கப்பட்டார்கள். தெற்கே, முஸ்லிம் நாடுகளில் நாகரீகமும் முன்னேற்றமும், தாராள மனப்பான்மையும், உள்நாட்டு அமைதியும் இருந்தன. ஆனுல், ஸ்பெயின் நாட்டுமக்கள் கொடுங்கோன்மையிலே துன்பப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அங்கு, பிரபுக்களும் மத குருமார்களும். சர்க்காருக்குத் தீர்வை செலுத்துவதில்லை. ஆனுல், மத்திய வகுப்பார் மீது தாங்க முடியாத தீர்வைகள் சுமத்தப்பட்டன. பாட்டாளிகளும், பண்ணையாட்களும், அடிமைகளும், சவுக்கடிபட்டு நிலங்களை உழுது பயிரிடும் நிலை ஏற்பட்டிருந்தது. ஆடுமாடுகளைவிடக் கேவலமாக நடத்தப்பட்டார்கள். இம்மாதிரியான மக்களுக்கு, இவ்வுலக வாழ்க்கையிலிருந்து மரணம் ஒன்றே விடுதலை அளித்தது. சிறுபான்மையராயிருந்த யூதர்கள் மீது பெரும்பான்மையினரான கிறிஸ்தவர்கள் தாங்கமுடியாத கொடுமை செய்தார்கள். துன்பப்பட்ட மக்கள் அங்கிருந்து தப்பியோடி, ஆப்பிரிக்காவிலே முஸ்லிம் அரசாங்கத்தில் சுகமாக வாழ்ந்தார்கள்.

ராடரிக் மன்னரின் விரோதியான ஜூலியன் என்பவர் முஸ்லிம்களிடம் முறையிட்டு, அவர்களது உதவியுடன் ஸ்பெயின் நாட்டில் பிரவேசித்தார். இந்தப் படையெடுப்பிலே தாரிக் பின் ஜியாத் என்னும் வாலிபர் தளபதியாக இருந்தார். "தாரிக்" என்ருல், "விடிவெள்ளி," என்று பொருள். அப்பெயருக்கேற்ற முறையில் அவரது வாழ்க்கையும் அமைந்திருந்தது. ஐரோப்பாக் கரையிலே தளபதி தாரிக் இறங்கிய இடம் "ஜபல் தாரிக்"—தாரிக் மலை-என்று இன்றும் அழைக்கப்படுகிறது. ஆங்கிலத்திலே ஜிப்ரால்டர் (Gibralter) என்கிருர்கள்.

அவர் ஐரோப்பா கடற்கரையில் இறங்கினுர். உடனே தாமும் தமது படைவீரரும் ஏறிவந்த கப்பல்களை எரித்துவிடும்படி கட்டளையிட்டார்! "நாடோ அந்நியர் நாடு! எங்கும் எதிர்ப்பைத்தான் எதிர்பார்க்க முடியும்! தோல்வியடைந்

தால் திரும்பித் தாய் நாடு செல்வது எப்படி?" என்று எல்லோரும் மனக்கலக்க மடைந்தார். உடனே, தாரிக் தம்முடனிருந்த முஸ்லிம் வீரர்களை நோக்கி,

"வீரர்களே! உங்கள் முன்புறம் கடும்பகைவர் நிறைந்திருக்கின்றார்கள்! உங்களுக்குப் பின்பக்கம் பெரிய ஆழமான கடல் இருக்கின்றது! அது பிரமாண்டமானது! இரக்கமற்றது! வீரமும் மன உறுதியுமே உங்களது ஆயுதங்கள். இல்லாவிட்டால் நீங்கள் அழிந்துவிடுவீர்கள். செல்வோம்! நாம் நடந்து செல்வோம்! முன்னேறிச் செல்வோம்! முன்வைத்த காலைப் பின்வைக்கமாட்டோம்! வெற்றியடைவோம் அல்லது இறப்போம்! தோல்வியுடன் தாய்நாடு திரும்ப மாட்டோம்!" என்று உணர்ச்சியுடன் தளபதி தாரிக் சொல்மாரி பொழிந்தார்.

**லக்கா போர் ஹி. 92.:—** தாரிக் அங்கிருந்து புறப்பட்டார். அவரது சேனையும் ராடரிக் மன்னர் சேனையும் சந்தித்தன. பெரும்போர் நடந்து இறுதியில், முஸ்லிம்களுக்கே வெற்றி கிடைத்தது. இந்தப் போரில் ஒரு லட்சம் ஸ்பெயின் போர்வீரரை, பன்னிரண்டாயிரம் முஸ்லிம்கள் தோற்கடித்தார்கள்! முதல் வெற்றியானது அடுத்தடுத்து முழு வெற்றியாகவே முடிந்தது.

முஸ்லிம் சேனையைப் பல பகுதிகளாகப் பிரித்து நாட்டின் பல பாகங்களுக்கு அனுப்பினால் வெற்றி கிடைக்கும் என்று தாரிகுக்கு ஜூலியன் பிரபு ஆலோசனை கூறினர். இது நல்ல திட்டமாகத் தோன்றியது. தளபதி தாரிக் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டார், பல படைகளைப் பல திசைகளுக்கு அனுப்பினர். பிறகு, தாரிக் ஒரு படையுடன் தலதோ (Toledo) நகருக்குச் சென்றார். அது அச்சமயம் அந்த நாட்டின் தலைநகராக இருந்தது. ஸ்பெயின் நாட்டின் இதர பகுதிகளும் பிறகு வெல்லப்பட்டன. ஒரு சேனையின் தளபதியான மஜீத் என்பவர் குர்துபா (Cordova) நகரைக் கைப்பற்றிய வரலாறு வெகு விந்தையானது. போரில்லாமல் இரத்தம் சிந்தாமல் அந்த நகரை அவர் கைப்பற்றினர்.



**தாரிகும் வாக்குறுதியும் :—** இஸ்லாமிய சரித்திரத்திலே தங்களது எதிரிகள் உடன்படிக்கைக்கு விரோதமாக நடந்துகொண்ட போதிலும், முஸ்லிம் தளபதிகள் வாக்குகளை மீறாமல் நடந்திருக்கின்றார்கள். இந்தப் பெரும் பண்பிற்குப் பெருமானாரவர்களே நமது வழிகாட்டியாக விளங்குகிறார்கள். காலித் பின் வலீத், அபூ உபைதா, ஸுல்தான் ஸலாஹுத்தீன் முதலியோர் அவ்வாறே செய்தார்கள். தளபதி தாரிக் அவ்வாறே செய்தார். அதனால்தான் அக்காலத்திலே, "ஒரு முஸ்லிமுடைய வார்த்தை பதிவு செய்யப்பட்ட உடன்பாட்டுப் பத்திரம்" என்று முஸ்லிம்களுடைய நேர்மையைப் பகைவர்களும், எதிரிகளும் போற்றிப் புகழ்ந்தார்கள்.

வெற்றிகொண்ட முஸ்லிம்கள் அந்த நாட்டு மக்களுடன் நேர்மையுடன் நடந்துகொண்டார்கள். வயோதிகர், கதியற்ற பெண்கள் முதலியோருக்கு உதவிசெய்யும் தயாவீரம் (Chivalry) என்னும் பண்பாடு முஸ்லிம்களிடமிருந்தே பிறந்தது. நாட்டு மக்களெல்லாம் முஸ்லிம்களைப் போற்றினார்கள். இந்தப் பண்பை முஸ்லிம்களே ஐரோப்பாக் கண்டத்தில் ஸ்பெய்ன் நாட்டிலும் ஆசியாக் கண்டத்தில் சிலுவைப் போர்களிலும் ஐரோப்பியருக்குக் கற்பித்தார்கள்.

**ஸுலைமான் நபி ஆகாரத்தட்டு :** தளபதி தாரிக் முன்னேறிச் செல்லும்பொழுது மாய்தா நகரில் அவருக்கு ஸுலைமான் நபியுடைய அற்புதமான ஆகாரத்தட்டு கிடைத்தது. அதன் ஓரங்களில் நவரத்தினங்கள் பதிக்கப்பட்டிருந்தன. அதன் கால்கள் முன்னூற்று அறுபது.

இவ்வாறு முஸ்லிம்கள் முன்னேறிச் செல்லும்பொழுது அந்த நாட்டிலே வெகு காலமாகத் துன்பக் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த அடிமைகளும், பண்ணையாட்களும், யூதர்களும், ஏழைகளும், ஒவ்வோர் இடத்திலும் முஸ்லிம்களை உள்ளன்புடன் வரவேற்றார்கள்.

**மூஸா பின் நுஸைர்:** இதற்கிடையில் வடஆப்பிரிக்காவில் ராஜப் பிரதிநிதியாயிருந்த மூஸா பின் நுஸைர் என்பவரும்

பத்தாயிரம் அரபிய வீரர்களுடன் ஸ்பெயின் நாட்டுக்கு வந்தார். தளபதி தாரிகுடன் சேர்ந்துசௌண்டு பல வெற்றிகள் பெற்ருர்.

**ஓர் திருப்பம்:** ஆனுல், இந்த வெற்றி வெள்ளம் திடீரென்று தடைப்பட்டது. அதாவது, அப்பொழுது இஸ்லாமிய கலீபாவின் தூதர் ஸிரியாவிலிருந்து அந்தலுஸ் நாட்டுக்கு வந்தார். இவ்விருவரையும் முன்னேறவிடாமல் தடுத்தார். டமஸ்கஸ் நகரிலிருந்து இவ்வாறு கலீபா கட்டளே பிறப்பித்து, அந்தத் தூதரை அனுப்பியிருந்தார். அச்சமயம், கலீபா இவ்விரு தளபதிகளேயும் தடுத்திரா விட்டால், அப்பொழுதிருந்த வெற்றி வெள்ள உணர்ச்சியில் முஸ்லிம்கள் ஐரோப்பாக் கண்டத்தை வென்றிருப்பார்கள். எட்டு நூற்ருண்டுகளுக்கு முன்னரே ஐரோப்பாவுக்கு நாகரீக ஒளியை அளித்திருப்பார்கள். ஆனுல், இறைவனுடைய சித்தம் வேருக இருந்தது போலும்!

**விளேவு:** அக்காலத்திலேயே, ஐரோப்பாக் கண்டம் இருண்ட கண்டமாக இருந்தது. அநாகரீகத்தில் இருந்தது. அப்பொழுது முஸ்லிம்களே ஐரோப்பியருக்கு நாகரீகம் கற்பித்தார்கள். வெகுகாலமாகக் கொடுங்கோன்மையால் நசுக்குண்டு வனுந்தரம் போன்றிருந்த ஸ்பெய்ன் நாடானது முஸ்லிம்கள் வந்தவுடன் ஓர் அற்புதப் பூங்காவனமாக மாறி விட்டது. முஸ்லிம்கள் தங்கள் பிரஜைகளே அனுதாபத்துடனும், நியாயமாகவும், இரக்கத்துடனும் ஆண்டுவந்தார்கள். அரபிய வனுந்தரங்களிலிருந்து வந்த—அரசியல் அனுபவம் ஒன்றுமே இல்லாத — அந்த அரபிய மக்கள் ஸ்பெய்ன் நாட்டிலே அந்நியருடன் இவ்வாறு நடந்து கொண்டது தான் ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகத் தோன்றுகின்றது!

**இஸ்லாமிய ஆட்சி:** அந்த நாட்டில் அரசியல் நிர்வாகத்திலும், விஞ்ஞானத்திலும், விவசாயத்திலும், முஸ்லிம்கள் முன்னேற்றத்தை உண்டாக்கினுர்கள். எல்லா மதங்களேச் சேர்ந்த மக்களுக்கும் பேச்சு, கருத்து, மதம், எழுத்து, இவற்றில் சுதந்திரம் இருந்தது. பகுத்தறிவைப் பயன்படுத்த



அந்தப் புதிய ஆட்சி உதவிசெய்தது. முஸ்லிம்கள் அந்த நாட்டில் பல பல்கலேக் கழகங்களே நிறுவினுர்கள். அக்கால ஐரோப்பியர் அங்கு வந்து கல்விகற்றுப் பயனடைந்தார்கள். மேலும், முஸ்லிம்கள் அங்கு விஞ்ஞானத்தை வளர்த்தார்கள். இயற்கையை ஆராய்ந்து, புதியனவற்றைக் கண்டு பிடித்தார்கள். இந்த ஆராய்ச்சியில் பல மதங்களேச் சேர்ந்த எல்லா மக்களும் ஒற்றுமையுடன் பாடுபட்டார்கள். காகிதம், வெடிமருந்து, மாலுமிக்குத் திசைகாட்டும் (காம்பஸ்) கருவி, முதலியனவற்றை முஸ்லிம்களே ஐரோப்பாவுக்குக் கொடுத்தார்கள். பெரிய நகரங்களில் குழாய் மூலமாகக் குடி தண்ணீர் வசதி செய்வித்தார்கள். கொலம்பஸ் என்பவர் அமெரிக்கா கண்டத்தைக் கண்டு பிடித்ததாகக் கூறப்படுகிறது. ஆனுல், அதற்கு ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னரே, வடஆப்பிரிக்காவிலும், ஸ்பெய்னிலும் இருந்த முஸ்லிம்கள் அமெரிக்காவுடன் வியாபாரம் செய்தார்கள்.

வாஸ்கோடகாமா என்னும் போர்த்துக்கேசியருக்குத் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குக் கடல்மார்க்கமாக வழிகாட்டியவர் ஒரு முஸ்லிம் மாலுமி என்பதையும், தென்கிழக்கு ஆசியா, சீனு, பஸிபிக் தீவுகள், முதலிய தூர கிழக்கு நாடுகளுக்கு முஸ்லிம் கப்பல்கள் சென்றுகொண்டிருந்தன என்பதையும் நாம் மறந்துவிடலாகாது.

தளபதி தாரிக் ஆரம்பித்த வேலேயின் விளேவாக, உலக சரித்திரத்திலும், நாகரிகத்திலும் ஓர் திருப்பம் — நல்ல மாற்றம் — ஏற்பட்டது. அந்தலுஸ் நாடு அழகமைந்த பூங்காவாக மாறியது.

"ஏ! அந்தலுஸ் பூங்காவனமே! உன் கிளேகளிலே முஸ்லிம்களாகிய நாங்கள் கூடுகட்டி வாழ்ந்த காலம் உன் நினேவில் இருக்கின்றதா?"—அல்லாமாமுஹம்மத் இக்பால்.

# 10. ஸுல்தான் ஸலாஹுத்தீன்

ஹி. 532—589. கி. பி. 1138—1193.

ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களின் வரலாற்றுடன் தொடர்புகொண்டவரும், பகைவராலும் புகழப்பட்டவருமே ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி.

அவர் அக்காலத்தில் ஐரோப்பியக் கிறிஸ்தவர்களால் நடத்தப்பட்ட மூன்றும் சிலுவை யுத்தத்தில் பங்குபெற்றவர். அக்காலத்தில் பக்தாத் நகரில் ஆட்சி செய்துகொண்டிருந்த அப்பாஸி கலீபாக்களின் ஆட்சியும், எகிப்து நாட்டில் பாத்திமீ அரசாங்கமும் பலவீனமாகிக்கொண்டிருந்தன. அந்தச் சங்கடநிலையில், ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள் சிலுவை யுத்தங்களை ஆரம்பித்துத் தென்மேற்கு ஆசியாவிலிருந்த முஸ்லிம் அரசாங்கங்களை மேலும் பலவீனமாக்கிவிட்டனர்.

பிறப்பு, இளமை:—இந்தச் சூழ்நிலையில், அவர் ஹி. 533 (கி. பி. 1138)ல் இராக் நாட்டின் வடபாகத்தில் திக்ரீத் கோட்டையில் பிறந்தார். ஸிரியா நாட்டிலுள்ள டமஸ்கஸ் நகரில் வளர்ந்தார். அவரது தகப்பனார் நஜ்முத்தீன் அய்யூப், டமஸ்கஸ் நகரில் கவர்னராக இருந்தார். ஷேர்கோஹ் என்பவர் அவரது சிறிய தகப்பனார். அக்காலத்திலே வட இராக், ஸிரியா நாடுகளில் ஆட்சிசெய்த நூருத்தீன் ஜங்கி, (Noorudeen Zangi) என்பவரிடம் இவ்விரு சகோதரர்களும் பணியாற்றினார்கள். அப்பொழுது ஐரோப்பாவிலிருந்து பலஸ்தீனுக்கு வந்த சிலுவைச் சேனையுடன் நூருத்தீன் போர்புரிந்தார்.

ஸுல்தான்:—அச்சமயம் எகிப்து நாட்டில் அராஜகம் ஏற்பட்டு, ஒரு கட்சியானது நூருத்தீன் ஜங்கியின் உதவியை நாடியது. அவர்களுக்கு உதவிசெய்ய நூருத்தீன் ஜங்கியும் சம்மதித்துத் தமது தளபதி ஷேர்கோஹ்வை அனுப்பினார்.



ஷேர்கோஹ் அங்கு சென்று அந்த நாட்டின் முதல்மந்திரியானார். தமது சிறிய தந்தையரான ஷேர்கோஹ்வுடன் ஸலாஹுத்தீன் சென்றார். போர்களில் வீரத்துடன் தமது திறமையைக் காட்டினார். சில ஆண்டுகளில் ஷேர்கோஹ் இறந்துவிடவே, ஸலாஹுத்தீன் எகிப்தில் முதல் மந்திரியானார். பிறகு, எகிப்திலிருந்த பாத்திமீ கலீபா ஆஸித் என்பவர் காலஞ்சென்றார். எனவே, ஸலாஹுத்தீனை எகிப்தில் தமது பிரதிநிதியாக "ஸுல்தான்" என்னும் பட்டத்துடன் நூருத்தீன் ஜங்கி நியமித்தார். அதற்குப் பிறகு, ஸுல்தான் நூருத்தீன் ஜங்கியும் இறந்துபோகவே, எகிப்தில் ஸலாஹுத்தீன் சுவாதீனமாக ஆட்சிசெய்ய ஆரம்பித்தார்.

எருஸலம் வெற்றி:—பிறகு, ஐரோப்பிய சிலுவைப் படைகளை முஸ்லிம் நாடுகளிலிருந்து துரத்திவிடவேண்டுமென்பதே அவரது குறிக்கோளாக அமைந்தது. அதற்கான சேனையைத் தயாரித்துக்கொண்டு, எகிப்திலிருந்து புறப்பட்டுப் பல போர்களில் சிலுவைப்படைகளை வென்றார். இறுதியாக, எருஸலம் நகரையும் வென்றார். அச்சமயம், அவர் பகைவரிடம் காட்டிய பரிவும், எதிரிகளின் பெண்கள் குழந்தைகள், கைதிகள் முதலியோரிடம் காட்டிய கருணையும் உலகப் பிரசித்திபெற்றுவிட்டன. அவரும் அவரைச் சேர்ந்தோரும் எருஸலம் நகரை வென்ற தினத்திலே எத்தனையோ ஆயிரம் கைதிகளை விடுதலைசெய்து, அவர்களுக்குப் பண உதவியும் செய்தார்கள்.

அதற்குமுன் ஒருசமயம் எருஸலம் நகரை கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களிடமிருந்து வென்றார்கள். அப்பொழுது, ஆயிரக்கணக்கான முஸ்லிம்களைக் கொன்றார்கள் என்றும், அன்று எருஸலம் நகரில் நீரோட்டத்தைப்போல் இரத்தம் ஓடியதாகவும் கிறிஸ்தவச் சரித்திராசிரியர்களே ஒப்புக்கொள்ளுகின்றார்கள்.

எருஸலம் ஸலாஹுத்தீனால் கைப்பற்றப்பட்டதை ஐரோப்பியக் கிறிஸ்தவர்களும், பாதிரிகளும், அரசர்களும்,

கேள்விப்பட்டார்கள். மறுபடியும், முஸ்லிம்களுக்கு விரோதமாகப் பிரச்சாரஞ் செய்தார்கள். ஐரோப்பாவிலிருந்து இலட்சக்கணக்கான மக்களைத் திரட்டிக்கொண்டு, பலஸ்தீன் நாட்டுக்குப் புறப்பட்டார்கள். இங்கிலாந்து அரசர் ரிச்சர்டு பிரான்ஸ் அரசர் பிலிப், ஜெர்மன் சக்ரவர்த்தி, ஆகிய மூன்று அரசர்களும் அவர்களில் முக்கியமானவர்கள். ஆனால், அவர்களது முயற்சி வீணாகிவிட்டது. அவர்களால் எருஸலம் நகரை வெல்லமுடியவில்லை. எனவே ஸுல்தான் ஸலாஹுத்தீனுடன் இங்கிலாந்து அரசர் ரிச்சர்டு உடன்படிக்கை செய்துகொண்டு இங்கிலாந்து திரும்பிவிட்டார்.

ஒருசமயம், ரிச்சர்டு அரசர் ஸுல்தான் ஸலாஹுத்தீனுடன் போர்புரியும்பொழுது அவரது குதிரை காயப்பட்டுவிட்டது. அவருடன் போர்புரிந்த ஸுல்தான் அவரைக் கொல்லாமல், அவருக்குத் தமது குதிரைகளில் நல்ல குதிரையொன்றைக் கொடுத்து அதில் ஏறித் தம்முடன் போர்புரியும்படி காத்திருந்தாராம்! இதுவன்றோ தயாவீரம். இத்தகைய பெருங்குணங்களே அவரை சரித்திரப் புகழ்பெற்றவராகச் செய்துவிட்டன. அதனால்தான், அவர் உலக சரித்திரத்திலும் அழியாப் புகழ் பெற்றுவிட்டார்.

மரணம்:—சில ஆண்டுகள் சென்றன. ஸுல்தான் திடீரென்று வியாதியடைந்தார். தமது ஐம்பத்தைந்தாம் வயதில் ஹி. 589 (கி. பி. 1193)ல் காலமானார்.

பண்புகள்:—தயாவீரம் (Chivalry) என்பது முஸ்லிம்களின் சிறப்பான பண்பாடு. தயாவீரம், துணிவு, ஆண்மை, மனந்தளராமை, இஸ்லாத்தின்மீது அன்பு முதலிய அருங்குணங்களே ஸுல்தான் ஸலாஹுத்தீனுடைய வாழ்க்கையை வளமாக்கின. இறைவனுடைய அருளைப் பெறுவதிலும் மக்களுக்குப் பணியாற்றுவதிலும் அவர் தமது காலத்தைத் கழித்தார். செல்வச் சம்பத்துக்கள் நிறைந்த வாழ்க்கையை விட்டு, ஒரு துறவியைப்போன்று வாழ்ந்தார். நபிபெருமானாரையும், முதல் நான்கு கலீபாக்களையும் பின்பற்றி எளிய வாழ்க்கை நடத்தினார். கூடாரமே அவரது அரண்மனை.



குதிரையின் முதுகே அவரது சிம்மாசனம். போர்வீரர்களே அவரது தோழர்கள். அவர்களே அவரது அருமைப் புதல்வர்கள். வாளாயுதத்தின் பளபளப்பே அவருக்குப் பெருமை.

எருஸலம் வெற்றியிலே இரண்டேகால் இலட்சம் தீனார்கள் கிறிஸ்தவக் கைதிகளிடமிருந்து விடுதலைப் பணமாக அவருக்குக் கிடைத்தன. ஆனால், அதை அவர் உடனே ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டார். எருஸலம் நகரிலிருந்து அவர் வெளியே வரும்பொழுது அதில் ஒரு காசும் அவரிடம் இல்லை. அவரிடம் உதவி கேட்கவந்த தேவையாளர் வெறுங்கையுடன் திரும்பமாட்டார்கள். இந்த இல்லறத் துறவியின் வாழ்க்கை வரலாறு இஸ்லாமிய உதயகாலத்திலிருந்த நாயகத் தோழர்களின் வாழ்க்கை வரலாறுகளை ஞாபகமூட்டுகின்றது.

ஸுல்தான் ஸலாஹுத்தீன் கல்வியை விரும்புவார். அவரும் கல்விமான். எனவே, கல்விமான்களை ஆதரித்தார். கல்விச்சாலைகள், மருத்துவ மன்றங்கள், பள்ளிவாயில்கள், சத்திரங்கள், சாவடிகள் நிர்மாணித்து, அவற்றின் பராமரிப்பிற்காக அறக்கொடைகளையும் கொடுத்தார். எருஸலம், கெய்ரோ முதலிய நகரங்களில் கல்லூரிகள் நிறுவினார். மருத்துவ சாலைகளும் நிர்மாணித்தார். ஐரோப்பிய நாடுகள் அநாகரீக நிலையிலே, இருண்ட சகாப்தத்திலே இருக்கும்பொழுது, ஸுல்தான் ஸலாஹுத்தீன் இத்தகைய மருத்துவச் சாலைகளை அமைத்துப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் தனிப் படுக்கைகளும், மருந்து அறைகளும் தனித் தனியாகக் கட்டினார். பைத்தியம் பிடித்தோருக்கும் சிகிச்சை செய்வித்தார்.

அரசியல் என்றால் இறைவனால் கொடுக்கப்பட்ட அடைக்கலம் என்று கருதுவார். இறைவனுக்கு அஞ்சி, மக்களுடைய நல்வாழ்க்கையின்—இறையச்ச வாழ்க்கையின்—மேற்பார்வையாளராகவே தம்மை நினைத்தார். ஸலாஹுத்தீன் என்றால்—(இஸ்லாம்) "மதத்தின் பெருமை"—என்று பொருள். அதற்கேற்றவாறு அவர் செயலாற்றினார்.

தோல்வியில் கலங்காத உள்ளமும், இன்னா செய்தாரையும் அவர் நாணும்படி நன்மைசெய்து அவர்களை வெல்லும்படியான உள்ளப் பண்பும், மதவிஷயங்களில் தாராள நோக்கும், எவ்வுயிரையும் தன்னுயிர்போன்று நினைத்தலும், வாக்குறுதியை மீறிய பகைவரிடமும் நாம் கொடுத்த வாக்குறுதியின்படி—அது நமக்கு நஷ்டம் விளைவித்தாலும்—நடந்துகொள்ளும் அவரது வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பண்புகளாகும்.

அவர் இறந்த பிறகு, அவர் விட்டுச் சென்றதெல்லாம் ஒரு போர்க்கவசமும், ஒரு குதிரையும், ஒரு பொற்காசும், முப்பத்தாறு வெள்ளிக்காசுகளுமே! ஸுல்தான் ஸலாஹுத்தீனை,

இடி இடித்து மின்னல் மின்னி
இருள் கவிந்து எங்கணும்
இடு இடுத்து உலக மெங்கும்
கிலிபிடித்த வேளையில்
கடல் கலங்கப் புயலடித்துத்
தத்தளிக்கும் கப்பலின்
திடமிகுந்து தெளிவு கொண்ட
திசையறிந்த மாலுமி.

எனக் கூறினல் மிகையாகாது. அவர் தூய உள்ளத்தவர். சீரிய நோக்கமுடையவர். நேர்நெறி நிற்பவர். தளரா ஊக்கமுள்ளவர். சலியாத சேவை செய்பவர். அன்பே அணிகலனுகக் கொண்டு, நானிலத்தின் நலனுக்காகப் பேரன்புடன் பெருந் தொண்டாற்றிய அவரைப்போன்ற உயர்மக்கள் உலக வரலாற்றில் கிடைப்பது அரிது! அரிது!! மிகவும் அரிது!!!

ஸுல்தான்

# 11. அலப் அர்ஸலான்

## ALP ARSALAN

ஹி. 455—466 கி. பி. 1063—1073.

கி. பி. பத்தாம் நூற்றுண்டிலே மத்திய ஆசியாவிலே, "மங்கோல்" "துர்க்" எனனும் இரண்டு இனத்தார் வசித்தார்கள். இவ்விரு இனத்தாரும் அடுத்த நூற்றுண்டில், தெற்கிலும் மேற்கிலும் குடியேறவும், கொள்ளையடிக்கவும், நாடு பிடிக்கவும் சென்றார்கள். பூர்வத்தில் இவ்விரு இனத்தாரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களே. மங்கோலியர் நாகரீகமடையாமல் இன்றுவரை மத்திய ஆசியாவின் கிழக்குப் பாகத்தில் வசிக்கின்றார்கள். ஆனல், அவர்களில் ஸல்ஜூக் பிரிவைச் சேர்ந்த துருக்கியர் முஸ்லிம் நாடுகளுக்கு வந்து இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டு, நாகரீக மடைந்தார்கள். மேலும், அவர்கள் இஸ்லாத்திற்காகத் தங்கள் உடல், பொருள், ஆவியைத் தியாகஞ் செய்தார்கள். அரபிய முஸ்லிம்கள் சமாதானக் கலைகளை விருத்தி செய்துகொண்டிருக்கையிலே, இந்தத் துருக்கியர் ராணுவத்தில் சேர்ந்து. இஸ்லாமிய ராஜ்யத்தைப் பெருக்கி, அதை அதிகரிக்கும் பணியில் ஈடுபட்டார்கள்.

கி.பி. பதினெனொன்றும் நூற்றுண்டின் பிற்பாதியிலே இந்த ஸல்ஜூக் துருக்கியர் உச்சநிலையடைந்தார்கள். பல துருக்கிய சிற்றரசர்கள் ஒரே தலைவரின் ஆணையில் நடந்து ஒற்றுமையுடன் இருந்தார்கள்.

அக்காலத்திலே, அப்பாஸி கலீபாக்கள் பலவீனராக இருந்தார்கள். எனவே, ஐரோப்பாவிலிருந்த கீழ ரோம ராஜ்யத்தைச் சேர்ந்த கிரேக்கர்கள், படிப்படியாக ஆசியத் துருக்கி முழுவதையும் வென்றுவிட்டார்கள். ஆகையால், ஸல்ஜூக் ஸுல்தான் துக்ரல் என்பவர் கி. பி. 1060 (ஹி 452ல்) கிரேக்கர்களை எதிர்த்துத் துரத்த ஆரம்பித்தார்.

துக்ரல் இறந்தார். அவருக்கு ஆண் வாரிஸ் கிடையாது. ஆகையால், அவரது சகோதரரின் மைந்தரான அலப் அர்ஸலான் என்பவர் ஸல்ஜூக் சிற்றரசுகளுக்குத் தலைவ ரானார். அலப் அர்ஸலான் என்றால் "வீர சிங்கம்" என்று பொருள். பக்தாதிலிருந்த அப்பாஸி கலீபா இவருக்கு "ஸுல்தான்" என்னும் பட்டமும் அளித்தார்.

அலப் அர்ஸலான் அறநெறியில் செல்பவர். நற்பண்பு கள் நிறைந்தவர். கருணையுள்ளவர். ஈகையுள்ளவர். அரசியல் நிர்வாகம் அறிந்தவர். பெரிய ராஜதந்திரி. ராணுவ வீரர். இறையச்சமுள்ளவர். ஏழைகளுக்கு உபகாரம் செய்வோர் வீரத்தில் இணையில்லாதவர். உதவி யற்றோருக்கு உதவி செய்வதில் தமது உயிரையும் கொடுக்கக் கூடியவர். இப் பெருங்குணத்தில் இவர் ஸுல்தான் ஸலாஹுத்தீனைப் போன்று விளங்கினார். அவருக்குத் துணையாக "நிஜாமுல் முல்க்" என்னும் பட்டம் பெற்ற காஜா ஹஸன் என்பவர் மந்திரியாக இருந்தார்.

அப்பொழுது, கீழ ரோமராஜ்யத்தில் ரோமனஸ் என்னும் சக்ரவர்த்தி இஸ்தம்பூல் நகரில் ஆட்சி செய் தார். அவரை முஸ்லிம்கள் "அர்மானுஸ்" என்று சொல்லு வார்கள். அவர் இஸ்லாத்தை அழித்துவிடத் திட்டமிட்டார். இஸ்லாமிய கலீபாவின் தலைநகரை அழித்து முஸ்லிம் நாடு களையெல்லாம் வெல்ல நினைத்தார். இரண்டு லட்சம் படை யுடன் புறப்பட்டார். இஸ்தம்பூலிலிருந்து இதற்குமுன் இத்தகைய பிரமாண்டமான சேனை எங்கும் புறப்பட்டதே இல்லை. எனவே, வெற்றிகிடைத்தல் உறுதி என்று ரோமனஸ் சக்ரவர்த்தி மனப்பால் குடித்துப் புறப்பட்டார்.

ரோமர்கள் முன்னேறி வருவதைக் கண்டார் அலப் அர்ஸலான். வெகு தந்திரத்துடன் பின்னேறிக்கொண்டே சென்றார். கஸ்பியன் கடலின் பக்கத்திலே மலாஸ் கர்த் (Malaz kard) என்னும் கோட்டை இருந்தது. அங்கு குறைந்த தொகையினரான முஸ்லிம்கள் எதிரியுடன் போரிட உத்தேசித்தார்கள்.



இஸ்லாமிய சரித்திரத்திலே முஸ்லிம்களுக்குப் பேராபத்துவரும் வேளையிலெல்லாம், அதிசயமான வீரர்கள் தோன்றியிருக்கிறார்கள். எனவே, கி. பி, 1071 (ஹி—463)ல் இஸ்லாம், அலப் அர்ஸலானை உண்டாக்கியது.

ரோமப் படையிலே பயங்கரமான பல்காரியரும், குரூர முள்ள நார்மன் ஜாதியாரும், மாஸிதோனியரும் இருந்தார் கள். ரோமனஸ் சக்ரவர்த்தி மலஸ் கர்த் கோட்டையை வென்றுவிட்டார் என்று அறிந்த அலப் அர்ஸலான் முப்ப தாயிரம், அதாவது, ரோம சேனையின் மூன்றிலொரு பங்கு சேனையுடன் அங்கு விரைந்தோடினார். அப்பொழுது ரோமரது சேனையிலிருந்து பலர் ஓடிப்போய்விட்டார்கள். மேலும், ரோம சேனை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பலவீனமடைந்திருந்தது.

இந்த நிலைமையில் அவரை வழிமறித்து நின்றார் அலப் அர்ஸலான். சில நல்ல நிபந்தனைகளைக் குறிப்பிட்டார். திரும்பிவிடும்படியும் ரோமானஸைக் கேட்டுக்கொண்டார். அலப் அர்ஸலானுடைய பெருந்தன்மையை அறியமுடியாத ரோம சக்ரவர்த்தி அவர் பயந்துவிட்டாரென்று நினைத்தார். தைரியங்கொண்டார்; கர்வங்கொண்டார். முஸ்லிம்களை இகழ்ந்தார்.

"இந்த மிலேச்சன் (அலப் அர்ஸலான்) சமாதானத்தை விரும்புவது உண்மையானால், அவன் உடனே இங்கிருந்து திரும்பிவிடவேண்டும். மேலும், ரயி (Rayy) நகரையும் அரண்மனையையும் அடமானமாக என்னிடம் வைக்க வேண்டும்!" என்று கர்ஜித்தார்.

ஸுல்தான் இதைக்கேட்டு ஆச்சரியப்பட்டார். வீணாக எத்தனையோ ஆயிரம் உயிர்கள் இழக்கநேரிடுவதையும் கவனி யாமல், ரோம சக்ரவர்த்தி இவ்வாறு முரட்டுத்தனமாகப் பேசுவதைக் கேட்டுத் துக்கப்பட்டார். இறுதியாகப் போரிட முடிவுசெய்து தம்முடன் இருந்த சிப்பாய்களை நோக்கி,

"வீரர்களே!" என்னுடன் நின்று போரிட மனமில்லா தோர் இங்கிருந்து போய்விடலாம்! அதை நான் குற்ற

மாகக் கொள்ளமாட்டேன்! ஆனால், நானே வெற்றிபெறுவேன். இல்லாவிட்டால் போரில் மடிந்துபோவேன்! நான் இறந்துவிட்டால் இந்த இடத்தில் என்னை நல்லடக்கம் செய்துவிடுங்கள்!'' என்றார். மரணத்திற்குத் தயாராவோரைப்போல், வெண்மையான ஆடைகளை உடுத்தினார்! வாசனை பூசினார்! ஒரு வாளையும், குண்டாந்தடியையும் எடுத்துக்கொண்டார்!

அங்கு, ரோமனஸ், ''ஒரே விநாடியில் முஸ்லிம்களை அழித்துவிடுவேன்'' என்று கர்வங்கொண்டு நின்றார். ''அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு'' என்பார்கள். அவரது அவசரத்தில் தமது குதிரைப்படை வந்து சேர்ந்துகொள்ளு முன்னரே தரைப்படையைமட்டும் செலுத்திக்கொண்டு முஸ்லிம்களை எதிர்க்க முன்னேறினார்.

ரோமர்களின் தரைப்படை, அலப் அர்ஸலானுடைய குதிரைப்படையுடன் மோதியது. துருக்கியர் குதிரைகளில் சவாரிசெய்து துள்ளித் துள்ளி ஓடினர்! பின்னேறினர்! ஆனால், வெகு கனமுள்ள ராணுவ உடையுள்ள ரோமரின் காலாட்படை களைப்படைந்துவிட்டது.

பகலெல்லாம் போர் நடந்தது. துருக்கியர் ஒரு பிறை வடிவத்தில் பின்னடைந்துகொண்டே எதிரிகளைத் துரத்திக் கொண்டு வெகுதூரம் சென்றுவிட்டார்கள்.

அன்று ரோமனஸ் ஒரு பெரும்பிழை செய்தார். தமது சேனையைப் பின்வாங்கும்படி கட்டளையிட்டார், ரோம சிப்பாய்களும் கட்டளைப்படி நடக்க ஆயத்தமானார்கள். அச்சமயம், பிறை வடிவத்தில் எதிரிகளைச் சூழ்ந்திருந்த துருக்கியர் உடனே பகைவரைச் சூழ்ந்துகொண்டு, அவர்கள்மீது அம்புமாரி பொழிந்தார்கள். முன்னரே களைப்படைந்திருந்த ரோமப் படைகள், சிறிதுநேரத்தில் தோல்வியடைந்தன. ரோம சக்ரவர்த்தியும் கைதியானார்.

கைதியை அலப் அர்ஸலானிடம் கொண்டுவந்து நிறுத்தினார்கள். மண்டிபோட்டு பூமியை முத்தமிடும்படி கட்டளையிடப்பட்டார். அவரும் அவ்வாறு செய்ய ஆயத்தமானார். ஆனால், ஸுல்தான் அலப் அர்ஸலானுடைய



ஒழுக்கத்தைப் பாருங்கள்! உடனே எழுந்தார்! ஓடினார்! ரோம சக்ரவர்த்தியைத் தூக்கினார்! மூன்றுதடவை அவருடைய கைகளைக் குலுக்கினார்! புன்புறுவலுடனும் அன்புப் பார்வையுடனும் அவரைப் பார்த்து, ''உமது உயிரும் பதவியும் பாதுகாக்கப்படும்!'' என்று உறுதி கூறினார்!

இதுமட்டுமா? ஒவ்வொரு தடவையும் தம்முடன் உட்காரவைத்து ராஜபோகங்களுடன் விருந்து செய்வித்து மரியாதை செய்தார்! எதிரியை மறைமுகமாகவேனும் இகழ்ந்து குறைவாகப் பேசமாட்டார். அவர்மீது அனுதாபப்படுவார். அவரைப் போர்க்களத்தில் தனியாக விட்டு ஓடிப்போனவர்களை இகழ்வார். நிந்திப்பார். எதிரியின் ராணுவத் திறமையின் குறைகளையும் அவருக்குப் புண்படாத முறையில் எடுத்துக் கூறுவார்.

இவ்வாறு சிலநாட்கள் சென்றன. பிறகு, சமாதான உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. தமது புத்திரிகளை ஸுல்தானுடைய புத்திரர்களுக்குத் திருமணம் செய்து கொடுக்க ரோமனஸ் ஒப்புக்கொண்டார். மேலும், முஸ்லிம் கைதிகளை விடுவித்துவிடவேண்டுமெனவும், பத்து லட்சம் பொற்காசுகள் நஷ்டஈடாகவும், முந்நூற்று அறுபதினாயிரம் பொற்காசுகள் ஆண்டுதோறும் கப்பம் கட்டவேண்டுமெனவும், நிபந்தனைகளுடன் அவரை மரியாதையுடன் அலப் அர்ஸலான் ஆலிங்கனம் செய்து அனுப்பினார்.

அலப் அர்ஸலான் இவ்வளவு மேலான ஒழுக்கத்துடன் நடந்து இஸ்லாமியப் பண்பாட்டைக் காட்டினார். ஆனால், ரோம சக்ரவர்த்தி என்ன செய்தார் தெரியுமா? ''உங்கள் பகைவரை நேசியுங்கள்'' என்று கற்பித்த ஈஸா நபியைப் பின்பற்றியவரிடம் ஸுல்தான்,

''ரோம சக்ரவர்த்தியே! நீர் வெற்றியடைந்திருந்தால் நீர் என்னை என்ன செய்திருப்பீர்?'' எனக் கேட்க, அதற்கு மறுமொழியாக, ரோமனஸ்,

''நான் வெற்றி பெற்றிருந்தால் உமக்குப் பல சவுக்கடி கொடுத்திருப்பேன்'' என்றார்.

ஸுல்தான்

# 12. ருக்னுத்தீன் பய்பர்ஸ்

## (RUKNUDDEEN BAIBARS)

(கி. பி. 1260—1277—ஹி. 658—676)

இந்திய சரித்திரத்திலே, அடிமை அரசர்கள் தில்லியில் அரசாட்சி செய்தார்கள். அதைப்போன்றே மம்லுக் எனப்படும் அடிமை அரசர்கள் எகிப்து நாட்டில் இரண்டரை நூற்றாண்டுகள்வரை ஆட்சிசெய்தார்கள்.

எகிப்தில் அடிமை அரச வம்சத்தின் ஸ்தாபகரே ருக்னுத்தீன் பய்பர்ஸ். இவர், ஹி. 620 (கி. பி. 1223)ல் ருஷ்யாவில் கிப்ச்சாக் பிரதேசத்தில் பிறந்தவர். குழந்தைப் பருவத்தில் அடிமையாக்கப்பட்டுத், தென்னாடுகளுக்கும் முஸ்லிம் நாடுகளுக்கும் கொண்டுவரப்பட்டு விற்கப்பட்டார். படிப்படியாக உயர்ந்து எகிப்து ஸுல்தான் ஸாலிஹ் என்பவரின் மெய்க்காப்பாளருக்குத் தளபதியாகப் பணியாற்றினார். ஹி. 647, (கி. பி. 1249)ல் ஸுல்தான் ஸாலிஹ் இறந்துபோனார். பிறகு தூரான்ஷாஹ் காலத்திலும் பணியாற்றினார். அதற்கடுத்த ஸுல்த்தான் குத்துஸ் காலத்தில், அய்ன்ஜாலூத் என்னுமிடத்தில் ஸிரியாவில் மங்கோலியரைத் தோற்கடித்தார். அதனால், அவரது புகழ் ஓங்கியது. அந்த ஸுல்தான் இறந்த பிறகு, சேனை இவரையே ஸுல்தானாகத் தேர்ந்தெடுத்தது. அவர். ஹி. 658. (கி. பி. 1260)ல் அந்த நாட்டின் ஸுல்தானான நிகழ்ச்சி ஒரு நாடகம் போன்றது.

கி.பி. 1248-ல் பலஸ்தீன் நாட்டை முஸ்லிம்களிடமிருந்து விடுவிக்கும் நோக்கத்துடன் பெரும் படையுடன் எகிப்து நாட்டில் ஐரோப்பியச் சிலுவைப்போர் வீரர்கள் (Crusaders) வந்திறங்கினார்கள். சுமார் ஒன்றரை லட்சம் போர் வீரர்கள் ஆயிரத்து எண்ணூறு கப்பல்களில் வந்தார்கள். இந்த மாபெரும் சேனைவெள்ளம் எகிப்து முஸ்லிம்களைத் தோற்கடித்துத் துரத்திவிட்டது. நீல நதிக்கரையிலிருந்து



தமியத்தா துறைமுகத்தைக் கைப்பற்றி, அங்கிருந்து கெய்ரோ என்னும் தலைநகருக்கு முன்னேறி, வழியில் மன்ஸூரா என்னும் நகரையும் அந்தச் சிலுவைப் படையினர் வென்றார்கள்.

இந்தத் துக்கமான செய்தியைக் கேள்விப்பட்டு தலைநகரில் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டது. அப்பொழுது எகிப்து நாட்டுப் படையிலே ஆயிரக்கணக்கான அடிமைகள் ராணுவத்தில் இருந்தார்கள். அவர்கள் திறமையுடன் பணியாற்றி வந்தார்கள். அத்தகைய வீரர்களே இப்பொழுது, எகிப்து நாட்டைக் காப்பாற்ற முன் வந்தார்கள். ஏன்? உலக சரித்திரத்திலே, நீர்வளமும் நிலவளமும், சிறப்பும் செல்வமும் உள்ள நாட்டு மக்கள் உலக இன்பங்களை அனுபவித்து ராணுவத்திறமையை இழந்து, பிறநாட்டு வீரமக்களுக்கு அடிமையான எத்தனையோ சரித்திர நிகழ்ச்சிகளை நாம் படித்திருக்கிறோம். இப்பொழுது எகிப்து நாட்டு மக்களால் தங்கள் நாட்டைப் பாதுகாக்கும் திறமையில்லாதிருந்தது. எனவே, நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்த அடிமைகளே ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் சென்றார்கள். முன்னேறிக்கொண்டிருந்த ஐரோப்பிய சேனையைச் சந்தித்தார்கள். அந்த ஐரோப்பிய பிரெஞ்சுச் சேனையின் முன்னணிக்கும் பின்னணிக்கும் தொடர்பில்லாமல், அது அவ்வளவு தூரத்தில் இருந்தது.

கெய்ரோவிலிருந்து புறப்பட்ட சேனையின் தலைவரே ருக்னுத்தீன் பய்பர்ஸ் என்பவர். அவரது தலைமையில் எகிப்திய சேனையானது ஐரோப்பியரை நன்றாகத் தோற்கடித்தது. ஐரோப்பிய சேனையின் தலைவரும் பிரெஞ்சு நாட்டு மன்னருமான ஒன்பதாம் லூயி என்பவர் கைதியாக்கப்பட்டார். பிறகு, அந்த அரசர் எகிப்து நாட்டுத் தலைநகருக்குக் கொண்டுபோகப்பட்டார்.

அப்பொழுது எகிப்து நாட்டின் ஸுல்தானாக இருந்தவர் தூரான்ஷா என்பவர். நாம் ஸுல்தான் ஸலாஹுத்தீன் என்னும் வீரரைப்பற்றி வாசித்திருக்கிறோம். அல்லவா?

அவரது பௌத்திரருடைய மகனே இந்த தூரான்ஷா என்பவர். இவரது பெருங் குணத்தைப் பாருங்கள்! ஒன்பதாம் லூயி வெற்றிபெற்றிருந்தால் இந்தத் தூரான்ஷாவையும் அவரது மந்திரி பிரதானிகளையும், தளபதிகளையும் வெட்டித்தள்ளி, எகிப்து நாட்டை அடிமையாக்கியிருப்பார். இரத்த வெள்ளம் ஆற்றைப்போல் ஓடியிருக்கும். இது நாம் கற்பனையாகச் சொல்வதல்ல. ஒரு காலத்தில் ஐரோப்பாவிலிருந்து மத ஆவேசத்தில் வந்த சிலுவை வீரர்கள் எருஸலம் நகரை வென்றபொழுது, அவர்கள் முஸ்லிம்களைக் கொலைசெய்து, அந்த நகரில் முஸ்லிம்களின் இரத்தம் ஆறாக ஓடியதென்று கிறிஸ்தவ சரித்திராசிரியர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். இதற்கு மாறாக, சில ஆண்டுகள் கழித்து, அதே நகரை ஸுல்தான் ஸலாஹுத்தீன் வென்றபொழுது எல்லாக் கிறிஸ்தவர்களையும் மன்னித்து வெளியே அனுப்பினார். இதையும் கிறிஸ்தவ சரித்திராசிரியர்கள் ஒப்புகொள்ளுகிறார்கள். "உங்கள் பகைவரை மன்னியுங்கள்" என்று கிறிஸ்துநாதர் உபதேசித்த புனிதமான இடத்திலே, அந்த மகானைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்ளும் கிறிஸ்தவ மன்னர்களும் பாதிரிமார்களும், அந்த மகானின் பெயரால் உலகில் எத்தனையோ தீங்கிழைத்திருக்கிறார்கள்.

பதினெட்டு ஆண்டுகளாக முஸ்லிம்களையும் நபி பெருமானாரையும் மக்கா நகரில் மட்டுமல்ல மதீனாவுக்கு வந்த பிறகும் அங்கு வந்து மக்காவாசிகள் அவர்களைப் பலவந்தமாகப் போருக்கு இழுத்தார்கள். இவ்வாறு, தொந்தரவு செய்து இஸ்லாமை அழிக்க முயன்ற காபிர்களை வென்றபொழுது, நபி பெருமானார் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் காட்டிய கருணையும், மன்னிப்பும் உலக சரித்திரத்தில் எங்கும், எபொழுதும், காண்பது அரிதாகும். அந்தக் கடும்பகைவரை மக்கா வெற்றியின்போது பெருமானார் — அன்றொரு நாள் எகிப்து நாட்டிலே யூஸுப் நபி (Yusuf) தமக்குத் தீங்கு செய்து, கொல்லமுயன்ற சகோதரர்களை மன்னித்துக் கூறியதைப் போன்று, "இன்று உங்கள்



மீது தண்டனையில்லை! போங்கள்!" என்றார்கள். இம்மாதிரியாக, முஸ்லிம் வெற்றியாளர் தங்கள் கடும் பகைவரையும் மன்னித்த உதாரணங்கள் இஸ்லாமிய சரித்திரத்திலே கணக்கில்லாமல் காணப்படுகின்றன.

ஆனால் பிரஞ்சு மன்னரை தூரான்ஷா மன்னித்து விட்டார். பிறகு, தூரான்ஷா இறந்துவிட்டார். அதற்குப் பிறகு குதுஸ் (Qutus) அரசரானார்.

**மங்கோலியர் :**—அப்பொழுது உலக சரித்திரத்திலே ஒரு புதிய நிகழ்ச்சி நடைபெற்றது. மனித இனமானது சிற்சில சமயங்களில் இடம் பெயர்ந்து ஒரு நாட்டிருந்து மற்றொரு நாட்டுக்கும், ஒரு கண்டத்திலிருந்து அடுத்த கண்டத்திற்கும் இலட்சக்கணக்கில் சென்றிருக்கிறது இவ்வாறு ஆரியர், திராவிடர், மங்கோலியர், துருக்கியர் முதலியோர் இடம் பெயர்ந்து வெகுதொலைவிலுள்ள நாடுகளுக்குச் சென்று குடியேறிப் போர்புரிந்து, வெற்றியோ தோல்வியோ அடைந்த வரலாறுகள் உலக ஏடுகளில் காணப்படுகின்றன.

அக்காலத்திலே மங்கோலியர் என்னும் இனத்தார் மத்திய ஆசியாவிலிருந்து புறப்பட்டு தெற்கிலும், தென் மேற்கிலும், மேற்கிலுமுள்ள நாடுகளுக்குச் சென்றார்கள். அவர்களால் இஸ்லாமிய நாடுகளுக்கும், ராஜ்யங்களுக்கும், நாகரீகத்திற்கும், உயிருக்கும் அளவுகடந்த நஷ்டம் ஏற்பட்டது. இரக்கமற்ற இந்த அரக்கர்கள், இந்தியா, அப்கானிஸ்தான், பலூசிஸ்தான், ஈரான், இராக், ஸிரியா முதலிய நாடுகளுக்கு வந்தார்கள். இந்த மனித வெள்ளமானது—மிலேச்சத்தன்மை நிறைந்த இந்தக் கூட்டமானது—எகிப்து நாட்டையும் நோக்கி வந்தது. அப்பொழுதிருந்த நிலையில் அவர்களைத் தடுப்பதும், அவர்களைத் தோற்கடிப்பதும் அசாத்தியமாக இருந்தது. அவர்களிடம் தோல்வியடைந்து அகப்பட்டுக்கொண்டால், நாடிழந்து, நகரிழந்து, வீடிழந்து, சொத்தையுமிழந்து இறுதியாக உயிரையும் இழக்க நேரிடும். மங்கோல் வெள்ளம் வருகிறதென்றால், அக்காலத்தில் எல்லோரும் ஓட்டம் பிடிப்பார்கள்.

**அய்ன் ஜாலூத் போர்.** **ஹி. 658 (கி. பி. 1260).** அந்த நிலையில், எகிப்து நாட்டைக் காப்பாற்றும் பணியிலே, மங்கோல் இனத்தார் எகிப்து நாட்டுக்கு வருமுன்னரே அவர்களை பலஸ்தீன் நாட்டிலேயே தடுத்து விடும்படி எகிப்திலிருந்து சென்ற சேனைக்குத் தலைமை தாங்கியவர் யார்? அந்தச் சூழ்நிலையிலே, செய்ய முடியாத வேலையை அவ்வளவு துணிவுடன் செய்யும் வீரத்தோடு புறப்பட்டவர் யார்? மங்கோலியரை எதிர்ப்பதால் மரணம் ஒன்றுதான் கிடைக்கும் என்று எல்லோரும் திட்டமாக அறிந்திருக்கையில் இத்தகைய பைத்தியம் யாருக்குப் பிடித்தது? அந்த சேனைத் தலைவர்—துணிவுள்ள வீரர்—உயிரையும் மதிக்காத மாணிக்கமே, ருக்னுத்தீன் பய்பர்ஸ் என்பவர்.

அவர், கி. பி. 1260-ல், அய்ன் ஜாலுத் என்னு மிடத்தில், உடலையும், உயிரையும் மதிக்காமல் தலைமைதாங்கிப் போரிட்டார். விளைவு? தங்களது ராணுவ சரித்திரத்திலே, முதல் முதலாகத் "தோல்வி" என்பதை அந்த மங்கோலியர் கண்டார்கள்.

**ஸுல்தான் :—** இந்த வெற்றிக்குப் பிறகு, ருக்னுத்தீன், கெய்ரோ நகருக்குத் திரும்பிவருங்காலையில், அப்பொழுது எகிப்து நாட்டின் அரசியல் தலைவராயிருந்த குதுஸ் இறந்து போனார். எனவே, போர்க்களத்திலிருந்து வெற்றிக்கோலத்துடன் திரும்பி வந்த—வெல்லமுடியாத மங்கோலியரையும் வென்ற—அந்தச் சூழ்நிலையில் சகல விதத்திலும் திறமையானராகவும், எகிப்து நாட்டைக் காப்பாற்றுவோராகவும் காணப்பட்ட—ருக்னுத்தீன் பய்பர்ஸை எல்லா மந்திரிபிரதானிகளும் ஒருமனதுடன் ஹி. 658 (கி பி. 1250)ல் ஸுல்தானாக நியமித்தார்கள். இவ்வாறு, அதியாச்சரியமான நிகழ்ச்சிகளின் அடிப்படையில் எகிப்து நாட்டின் ஸுல்தான் ஆனார். இந்த வீராதிவீரர் ருக்னுத்தீன் பய்பர்ஸ்.

**பஞ்சம் :—** இவரது ஆட்சியின் ஓராண்டு—முதல்—ஆண்டு— உருண்டது. தெய்வாதீனமாக, திடீரென்று எகிப்து நாட்டிலே ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டது. யூஸுப்



அலைஹிஸ்ஸலாமுடைய வரலாற்றைப் படித்தோருக்கு, அக்காலத்தில் அந்த நாட்டிலும், பலஸ்தீன், ஸிரியா நாடுகளிலும் பஞ்சம் உண்டான செய்தி நன்றாக நினைவிருக்கலாம். ருக்னுத்தீன் பய்பர்ஸ் இந்தப் பஞ்சத்தின் கொடுமையிலிருந்து தமது பிரஜைகளை எவ்வாறு காப்பாற்றினார்? வெளிநாடுகளிலிருந்து, தானியங்களை வரவழைத்தார். கஞ்சித் தொட்டிகளும், அன்னசாலைகளும் கட்டி, மக்களுக்கு இலவச உணவுகொடுத்து உதவிசெய்தார். இக்காலத்திலே ரயில், கப்பல், ஆகாயவிமானம், பாராச்சூட், ஹெலிகாப்டர் மூலமாக வெகு விரைவில் பஞ்சத்தாலும், வெள்ளத்தாலும் புயலாலும் கஷ்டப்படும் மக்களுக்கு உடனடியாக உதவி செய்யப்படுகிறது. ஆகாய விமானத்தின் மூலம் உணவுப் பொட்டலங்களை மேலேயிருந்து போடுகிறார்கள். ஆனால், அக்காலத்திலோ இம்மாதிரியான வசதிகள் கிடையாது. பஞ்சகாலத்திலும், புயலும், மழையும், பெரு வெள்ளமும் வந்து, மக்கள் வீடுகளை இழந்து தவிக்கும் பொழுதும், உடனடியாக உதவி செய்யவில்லையென்றால், இலட்சக்கணக்கான மக்கள் இறந்துவிடுவார்களல்லவா?

**அப்பாஸி கலீபாவின் ஆதிக்கம் :—** வெளிநாடுகளிலிருந்து வந்த மங்கோலியரின் தலைவரான ஹலாகூ என்பவரை பய்பர்ஸ் தோற்கடித்தார். நாட்டைக் கைப்பற்றினார், பிறகு பஞ்சத்தின் கொடுமையிலிருந்து மக்களைக் காப்பாற்றினார் இது அவரது ராணுவ நிர்வாகத் திறமையும் அரசியல் நிர்வாகச் சிறப்புமாகும்.

ஆனால், இஸ்லாமிய விஷயங்களிலும் ஸுல்தான் ருக்னுத்தீன் பய்பர்ஸ் கவனம் செலுத்தினார். எகிப்து நாட்டிலே அப்பாஸி கலீபாக்களின் ஆத்மீக அதிகாரத்தை நிறுவினார். இரண்டு ஆண்டுகளுக்குமுன் பக்தாத் நகரில் மங்கோலியரால் அழிக்கப்பட்ட இஸ்லாமிய கிலாபத்தைப் புதுப்பித்து, அப்பாஸி குடும்பத்தைச் சேர்ந்த அஹ்மத் (அபுல் காஸிம்) முஸ்தன்ஸிர் பில்லாஹ் என்பவரை ஹி 659 ரஜப் மாதம் 13-ல (கி.பி, 1261 மே மாதம்) கெய்ரோவில்

கலீபாவாக நியமித்தார். இதன் விளைவாக அந்தக் கலீபா வின் சந்ததியார் பல நூற்றாண்டுகளாக எகிப்து நாட்டில் கலீபாக்களாக இருந்தார்கள்.

ஹஷ்ஷாஷிகள் :—அக்காலத்திலே, இஸ்லாமிய நாடுகளில் ஒரு குழு இரகசியமாக வேலைசெய்து கொண்டிருந்தது முதலில் அது எகிப்து நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு பிறகு பல முஸ்லிம் நாடுகளில் பரவியது. ஹஸன் பின் ஸபாஹ் (Hasan Bin Sabah) என்பவரே அதைத் தோற்றுவித்தவர் அவர் கஸ்பியன் கடலின் பக்கத்திலே, காகஸஸ் மலையடிவாரத்திலே, சாதாரணமான மக்கள் செல்லமுடியாத ஒரு மலை உச்சியிலே ஓர் அழகான கோட்டையும் அதில் ஓர் அரண்மனையும் கட்டி, அதில் சுந்தரவதனமும், வசீகரமும் உள்ள அழகிகள், மதுபானங்கள், வாசனைகள், இன்பவாழ்க்கையின் வசதிகள் முதலியன தயாரித்துத் தமது இரகசியக் குழுவில் சேர்ந்த வாலிபர்களை மயக்க மருந்து கொடுத்து அங்கு தூக்கிக்கொண்டுபோய் சில நாட்கள் வைப்பார். அங்கு அந்த வாலிபர்கள் அழகிகளுடன் இன்ப வாழ்க்கை நடத்துவார்கள். ஒருநாள் திடீரென்று அவர்களுக்கு மயக்க மருந்து கொடுத்து அவர்களை வெளியே தூக்கிக்கொண்டு வந்துவிடுவார்கள். மயக்கம் தெளிந்து எழுந்த வாலிபன் அந்த இன்பமான இடத்திற்கு மறுபடியும் போக விரும்புவான். அச்சமயம், ஹஸன் பின் ஸபாஹ் "வாலிபனே! அல்லாஹ்வும் இல்லை, ரஸூலும் இல்லை! அதெல்லாம் கற்பனை! நானே பெரியவன்! நானே அதிகாரி! நானே படைப்பவன்! நானே அழிப்பவன்! நானே சுவர்க்கத்தையும் நரகத்தையும் உண்டாக்க வல்லவன்! நீ இன்றுவரை இருந்தது என்னுடைய சுவர்க்கத்தில் என்பதை மறந்துவிடாதே! நான் விரும்பினால், மறுபடியும் உன்னை அந்தச் சுவர்க்கத்திற்கு அனுப்பமுடியும்! தெரிகிறதா?" என்று கேட்பார்.

வாலிபன் சிற்றின்ப ஆசையால் மறுபடியும் அந்த சுவர்க்கத்திற்குப் போகத் துடிதுடிப்பான். அப்பொழுது, மறுபடியும், ஹஸன் பின் ஸபாஹ் சொல்லுவார்: வாலிபனே! நான் சொல்வதைக் கவனமாகக் கேள்! நான்தான் எல்லாம் செய்ய வல்லவன்! நீ எனக்குக் கீழ்ப் படிந்து நடந்தால், நான் உன்னை மறுபடியும் சுவர்க்கத்திற்கு அனுப்புவேன்! நான் சொல்வதை நன்றாகக் கவனித்துக்கேள்! இம்மாதிரி சுவர்க்கம் இறந்தபிறகே கிடைக்குமென்று சில மதப்பைத்தியர்கள் உன்னை ஏமாற்றுவார்கள். ஆனால், நானே, இப்பொழுது உன் கண்முன்னால் அந்தச் சுவர்க்கத்தைக் காட்டி விட்டேன். "இங்கே சுவர்க்கம்!" என்று சொல்வாயாக! இனி, உனக்கு நிரந்தரமாக இந்த இன்ப வாழ்வு, இந்த சுவர்க்க வாழ்க்கை, கிடைக்கவேண்டுமானால், அது யார் கையில் இருக்கிறது தெரியுமா? என் கையில்! என் கையில்! இதை நன்றாக மனதில் பதிய வைத்துக்கொள். எனவே, அந்தச் சுவர்க்கத்தை நான் உனக்கு அளிக்க வேண்டுமானால், நான் இடும் கட்டளைப்படி நடக்கவேண்டும். குருட்டுத்தனமாக என்னைப் பின்பற்றவேண்டும். நான் ஒருவரைக் கொல்லச்சொன்னாலும் கொல்லவேண்டும். அப்படிச் செய்வாயா?" என்று கேட்பார்.

வாலிபன் எதைச் செய்யவும் தயாராவான். இத்தகைய வாலிபர்களை அந்தப் பாதகனான ஹஸன் பின் ஸபாஹ் அனுப்பி, முஸ்லிம் ஸுல்தான்களையும், ஞானிகளையும், அறிஞர்களையும், வீரத்தளபதிகளையும், மந்திரிகளையும் கொலை செய்துவிடுவார்.

இந்தக் கொலைக்கூட்டம், இந்த நாசவேலை செய்யும் குழு, இஸ்லாமிய நாடுகளில் அக்காலத்தில் பெருந்தீங்கிழைத்தது. இவர்கள் ஸுல்தான் ஸலாஹுத்தீன் போன்ற இஸ்லாமியச் செல்வர்களையும் கொல்ல முயன்றார்கள் என்றால், இவர்கள் செய்த அநியாயச் செயல்களுக்கு அளவுண்டா? இந்தக் குழு பல ஆண்டுகளாக இத்தகைய பல கொலைகளைச்செய்து உலகினிலே பாவங்களைப் பரப்பிக் கொண்டிருந்தது. இத்தகைய இரகசிய சகோதரத்துவக் குழுவை அழிப்பதில் ஈடுபட்டு, ஸுல்தான் ருக்னுத்தீன் பய்பர்ஸ் பெருமுயற்சிசெய்து, அதில் வெற்றியும் கண்டார், இந்த அநியாயக்காரரின் தலைமை மன்றம் ஈரான் நாட்டின்

வடபாகத்தில் காகஸஸ் மலைப்பாங்கில், ஒரு மலையின் உச்சியில் இருந்தது. அதை அழிக்க எவராலும் முடியவில்லை. ஆனால், பக்தாதை அழித்த பிறகு, மங்கோலியர் அங்கு சென்று அதை அழித்துவிட்டார்கள். இவ்வாறு, ஒரு பெரிய இரகசியச் சகோதரத்துவம், அராஜகக்குழு, அநியாயக் கூட்டம், நாஸ்திக மன்றம் உலகிலிருந்து மறைந்தது.

**துரிதமான அஞ்சல்:**—இஸ்லாமிய சரித்திர ஆரம்பத்திலிருந்து, ஹஸ்ரத் உமர், அமீர் முஆவியா போன்ற அரசாங்கத் தலைவர்கள் தபால் வசதிகளை ஏற்படுத்தினார்கள். குதிரைகள் மூலமாகவும், புருக்கள் மூலமாகவும் தபால்கள் அனுப்பப்பட்டுவந்தன. மன்ஸூரா நகருக்கு ஸுல்தான் ருக்னுத்தீன் பய்பர்ஸ் போகுமுன், அங்கு முஸ்லிம்கள் தோல்வியடைந்த செய்தி, அவருக்கு புருக்கள் மூலமாகவே தெரிந்தது. தமது தலைநகர் கெய்ரோவிலிருந்து ஏறத்தாழ அறுநூறு மைல் தூரமுள்ள டமஸ்கஸ் நகருக்கு நான்கே நாளையில் குதிரைகள் மூலமாகத் தபால் செல்லும்படி ஏற்பாடுசெய்தார். மேலும், குதிரைமேல் இருந்து வளைந்த (ஹாக்கிபோன்ற) குச்சிகளால் தரையின்மீதுள்ள பந்தை அடித்து விளையாடும் "போலோ" (Polo) என்னும் விளையாட்டில் ஒரே வாரத்தில் கெய்ரோ, திஷ்மக் என்னும் தூரமான இரண்டு நகரங்களிலும் கலந்துகொள்வார் எனவும் கூறப்படுகிறது.

**பொதுநலப் பணிகள்:**—அவர் பற்பல பொதுநலப் பணிகளிலும் ஈடுபட்டார். பல பள்ளிவாயில்கள் கட்டி மக்கள் இறைவணக்கம் செய்யும்படி உதவினார். பல பாடசாலைகள் கட்டி மக்களுக்கு அறிவுப் பெருக்குண்டாகும்படி செய்தார். பல கால்வாய்கள் தோண்டினார். பற்பல பாலங்களும், அணைக்கட்டுகளும், நீர்த்தேக்கங்களும் கட்டினார். அதனால், விளைபொருள்கள் அதிகரித்தன. மக்களின் செல்வநிலை உயர்ந்தது. பல கோட்டைகள் கட்டி நாட்டைப் பாதுகாத்தார். சேனையைப் பலப்படுத்தினார். புதிய கப்பல்கள் கட்டிக் கடற்படைக்கு வன்மையுண்டாக்கினார்.



இத்தகைய பொதுநலப் பணிகள் பல ஆற்றிய ருக்னுத்தீன் பய்பர்ஸ் எகிப்து நாட்டில் மட்டுமல்ல, உலக சரித்திரத்திலேயே ஒரு மேலான இடத்தைப் பெற்றுக்கொண்டார். இந்தியாவிலே, விக்கிரமாதித்தர், அசோகர், அக்பர் முதலியோரைப்பற்றிப் பல விசித்திரமான கதைகள் சொல்லப்படுவதைப்போன்று எகிப்து நாட்டிலும் ஸுல்தான் ருக்னுத்தீன் பய்பர்ஸைப்பற்றிய பல ஆச்சரியமான கதைகள் உண்டு.

இந்திய சரித்திரத்தில் முகல் சாம்ராஜ்யத்தை நிறுவிய ஜஹீருத்தின் பாபர் என்பவர் கங்கை, யமுனை, நதிகளை நீந்திக் கடந்துவிடுவார் என்று நாம் படித்திருக்கிறோம். ஆனால், ஸுல்தான் ருக்னுத்தீனைப்பற்றிய வரலாறு இதைவிட அதிசயமாக இருக்கிறது. அதாவது, இரும்புக்கவசம் அணிந்துகொண்டே, எகிப்தின் பெரிய நீலநதியைக் நீந்திக் கடந்துவிடுவாராம்!

மக்காவில் கஃபாவின்மீது ஹஜ் காலத்தில் ஆண்டுதோறும் போர்த்தும் போர்வை—மஹமல்—இப்பொழுது எகிப்திலிருந்து வருகின்றது. அந்த வழக்கத்தை ஆரம்பித்தவர் ருக்னுத்தீன் பய்பர்ஸ்.

ஸ்பெய்ன் நாட்டுக் கிறிஸ்தவ அரசாங்கத்துடனும், கீழ ரோம ராஜ்யத்துடனும், துருக்கியில் ஸல்ஜூக் ஸுல்தான்களுடனும், எமன் நாட்டுடனும் சமாதான உடன்படிக்கைகள் செய்தார். தெற்கில் நூபியா (ஸூதான்) நாட்டை வென்றார். மேற்கில், பர்பர்களை வசப்படுத்தினார். போர்த் திறமையிலும், நிர்வாகத்திலும், ராஜதந்திரத்திலும், துணிவிலும், சமயோஜிதமான திட்டம்தீட்டி அதில் வெற்றி பெறுவதிலும் அவருக்கு நிகர் சிலரேயாவர்.

ஸுல்தான் ஸலாஹுத்தீன் காலத்திலே தபால் இலாகா தென்மேற்கு ஆசியாவிலும் எகிப்திலும் விருத்தியடைந்திருந்தது. அதை பய்பர்ஸ் மேலும் விருத்திசெய்து, மூன்று நாட்களில் டமஸ்கஸ் நகரிலிருந்து கெய்ரோவுக்குக் கடிதம் வரும்படி ஏற்பாடு செய்திருந்தார். அவரது ராணுவ இயக்க

மும் மின்னல் வேகத்தில் இருக்கும். அவர் கெய்ரோவில் இருக்கிறார் என்று ஸிரியா நாட்டார் நினைத்துக்கொண்டிருப்பார்கள். தமது துரிதமான குதிரைப்படையிலே வாயுவேகத்துடன் பூதத்தைப்போல் வந்து அவர்கள் முன்பாக நிற்பார்! ஒருசமயம் நாற்பது சிப்பாய்களுடன் சென்று ஹிஸ்னுல் அக்ராத் என்னும் கோட்டையைக் கைப்பற்றினார்!

எகிப்து நாட்டின் வெற்றிவேந்தர்களில் ஒருவரான இவர், ஹி. 676 (கி. பி. 1277)ல் மரணமடைந்தார். இவர் நிறுவிய மம்லுக் அரசாங்கம் இரண்டரை நூற்றாண்டு எகிப்துநாட்டில் நீடித்தது.

---

## வெற்றி வீரர்

# 13. இரண்டாம் முஹம்மத்

(ஹி. 855-886 — கி. பி. 1451-81)

துருக்கி நாட்டிலே இன்று குடியரசு முறையில் ஆட்சி நடத்தப்படுகிறது. ஆனால், பல நூற்றாண்டுகளாக அந்த நாட்டில் ஸுல்தான்கள் ஆட்சியே நடந்துவந்தது. கி. பி. 1923-ல் முஸ்தபா கமால் பாஷா, "அதாதுர்க்" என்பவர் அங்கு குடியரசை நிறுவினார்.

கி பி. பதிமூன்றாம் நூற்றாண்டின் இறுதியிலே உஸ்மான் என்பவர் துருக்கி சாம்ராஜ்யத்தைத்தொடங்கினார். பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்ப முதல் துருக்கி ஸுல்தான்கள் 'கலீபா' என்னும் பதவியுடன் இஸ்லாமிய உலகில் சிறப்புடன் விளங்கினார்கள். சுமார் நூற்றைம்பது ஆண்டுகள் அந்த ஸுல்தான்கள் ஒருவர்பின் ஒருவராக ஆட்சிசெய்து, தங்கள் ராஜ்யத்தை ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் நிறுவினார்கள். அவ்வாறு வெல்லப்பட்ட நாடுகள் அதற்குமுன் கீழ ரோம ராஜ்யத்தைச் சேர்ந்தவை. கீழ ரோம் ராஜ்யத்தின் தலைநகர் கான்ஸ்தான்த்திநோபில் (Constantinople) அல்லது



குஸ்துன்த்துன்யா எனப்படும். அந்த நகரும் அதைச் சுற்றியுள்ள சிறு பாகமுமே இறுதியில் கீழ ரோம ராஜ்யமாகப் பெயரளவில் இருந்தது.

அந்நகரை வென்று அதற்கு இஸ்லாம்பூல்—இஸ்தம்பூல்— இஸ்லாத்தின் நகர் — என்று பெயரிட்டவரே இரண்டாம் முஹம்மத் என்னும் துருக்கி ஸுல்தான். அவர் கி. பி. 1451 —(ஹி. 855)-ல் பட்டத்திற்கு வந்தார். துருக்கி ஸுல்தான்களுக்கும் ரோம சக்ரவர்த்திகளுக்கும் பல நூற்றாண்டுகளாகப் பகைமை இருந்தது. அப்பொழுது இஸ்தம்பூலில் ஆட்சி செய்து வந்த பதினொன்றாம் கான்ஸ்த்தன்தைன் (Constantine XI) என்பவர், துருக்கிஸுல்தானுக்கு விரோதமாக ஒரு போலி ஸுல்தானை உண்டாக்கி, துருக்கியை வென்றுவிடத் திட்டமிட்டார். அதைக் கேள்விப்பட்ட இரண்டாம் முஹம்மத் என்பவர் ரோம ராஜ்யத்தின் தலைநகரையே வென்றுவிடும் எதிர்த்திட்டமிட்டார். அப்பொழுது அவரது ஆட்சியின் மூன்றாம் ஆண்டு.

ஸுல்தான் முஹம்மத் வீரமுள்ளவர். ராணுவத் திறமையுள்ளவர். கட்டுப்பாட்டுடன் தமது போர் வீரர்களை நடத்தும் வன்மையுள்ளவர். கர்வ மில்லாதவர். இறையச்சமுள்ளவர். இஸ்லாமிய சட்ட திட்டங்களின்படி நடப்பவர். நபி பெருமானாரின் வாழ்க்கை வழியைப் பின்பற்றுபவர். படையெடுப்பின் தயாரிப்பில் குறையொன்றுமில்லாமல் செய்து முடிப்பவர். போரில் பழங்கால முறைகளை அகற்றி விட்டு, வெற்றியளிக்கும் புதிய முறைகளை அனுசரிப்பவர். விஞ்ஞானத்தை வெறுக்காதவர். தியாகஞ் செய்யும் குணமுடையவர். தமது தயாரிப்புகளை ஒருவரும் அறியாமலிருக்கும் முறையில் செய்பவர். எதிரியின்மீது திடீர் தாக்குதல்கள் முதலியவற்றை வெகு இரகசியத்துடன் செய்பவர்.

"உங்களுடைய அடுத்த ராணுவத் திட்டமென்ன?" என்று ஒருவர் இஸ்தம்பூல் வெற்றிக்குப் பிறகு கேட்ட பொழுது. "என் தலை மயிரில் ஒன்று அந்த ரகசியத்தைத் தெரிந்துவிடுமானால், அதைப் பிடுங்கி வீசிவிடுவேன்!" என்று மறுமொழி கூறினார் அந்த வெற்றி வீரர்.

**இஸ்தம்பூல் வெற்றி (ஹி. 857 — கி. பி. 1453)** இஸ்தம்பூலை வெல்லப் புறப்பட்டார் பாஸ்பரஸ் (Bosphorus) ஜலசந்தியின் ஆசியாக் கரையிலே முன்னர் ஸுல்தான் பாயஜீத் (Bayazid) என்பவர் ஒரு கோட்டை கட்டியிருந்தார். அதற்கு எதிராக, ஐரோப்பாக் கரையிலே ஒரு பலமான கோட்டையை இரண்டாம் முஹம்மத் கட்டினார். பிறகு, இஸ்தம்பூல் முற்றுகைக்கான தளவாடங்களைத் தயாரித்தார். ஹங்கேரி நாட்டு இஞ்சினீர்—பொறிவல்லுநர் - ஒருவரின் உதவியால் பல பீரங்கிகள் செய்தார். ஒவ்வொரு பீரங்கியையும் அறுபது ஜோடி மாடுகள் இழுத்தன. அதானு நகரிலிருந்து நில மார்க்கமாக தொண்ணூறாயிரம் துருப்புகளுடன் புறப்பட்டார். கடல் மார்க்கமாகப் பல போர்க் கப்பல்களை அனுப்பினார்.

துருக்கியர் வருவதை ரோம சக்ரவர்த்தி அறிந்தார். உடனே வெனீஸ் போன்ற கிறிஸ்தவ அரசாங்கங்களிடமிருந்து உதவி கோரினார். பல போர்க் கப்பல்களை அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார். இஸ்தம்பூலுக்குக் கடல் மார்க்கமாக வரும், பாதையான தர்ரெ தானியால் — தார்தனல்ஸ் (Dardanelles) ஜலசந்தியைக் கடந்து துருக்கிக் கப்பல்கள் வரமுடியாதபடி கடலில் பெருஞ்சங்கிலிகளைக் கட்டித் தடுத்துவிட்டார்

துருக்கிக் கடற்படை செய்த முதல் எதிர்ப்பில் தோல்வியுற்றது. எனவே, ஸுல்தான் ஒரு தந்திரம் செய்தார். இரவின் இருளிலே, தரை மார்க்கமாகக் கலிபோலி (Galipoli) என்னும் சிறு தீபகற்பத்தின் அகலமில்லாத ஒரு பாகத்தைக் கடந்து கப்பல்களைக் கொண்டுபோய், இஸ்தம்பூல் நகரின் கோட்டைக்குப் பக்கத்திலுள்ள கடலில் இறக்கிவிடத் திட்டமிட்டார்! ஒரு பாதை தயாரிக்கப்பட்டது. அதன் மீது பலகைகள் போடப்பட்டன! பலகையின்மீது கொழுப்பு தடவப்பட்டது. ஒரே இரவிலே — இருண்ட இரவிலே — ஒன்று இரண்டல்ல — எண்பது கப்பல்கள் இரகசியமாக இழுத்துக் கொண்டு போகப்பட்டன!



ரோமர்கள் காலத்தா (Galata) கோட்டையில் இருந்தார்கள். ஆனால், துருக்கியர் அந்த வழியாகச் செல்லவில்லை. துருக்கிக் கப்பல்கள், பூதங்களைப்போல இஸ்தம்பூல் கடலில் நின்றன. அவற்றின் அருகில், சிறிது தூரத்திலே பீரங்கிகளுடன் அணிவகுத்து துருக்கிக் காலாட்படை நின்றது. ஜினோவா கடற்படையும் வெனீஸ் கடற்படையும் வெகு தூரத்தில் இருந்ததால், அவை துருக்கியரைத் தாக்கமுடியாமலிருந்தன. கடந்த இரவிலே ஸுல்தான் பாளையமிறங்கியிருந்த இடத்திலே, முஸ்லிம்கள் அனைவரும் இறைவனிடம், வேண்டுதல் செய்துகொண்டும், வணக்கம் செய்துகொண்டுமிருந்தார்கள்.

கி. பி. 1453, மே மாதம், 29-ந் தேதி ஒன்றரை லட்சம் போர்வீரர்களுடன் ஸுல்தான் அந்த நகரை எதிர்த்தார். ஆனால், கோட்டை பெரிய கற்களால் பலமாகக் கட்டப்பட்டிருந்தது. கோபுரங்களும் கொத்தளங்களும் இருந்தன. 50 அடி உயரமுள்ள சுவர்கள்! 192 கோபுரங்கள்! பெரிய அகழ். எனவே. ஸுல்தான் வெடி மருந்தையும், புதிய பீரங்கிகளையும் உபயோகித்தார். 600 டன் கனமுள்ள கல்லை ஒரு மைல் தொலைவில் எறியக்கூடிய பொறிகளையும் தயாரித்தார்.

**பெருமானாரின் முன்னறிக்கை:**—ரோம ராஜ்யத்தின் இந்தத் தலைநகரம் முஸ்லிம்களால் வெல்லப்படுமென்று நபி பெருமானார் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் முன்னறிக்கை செய்திருந்தார்கள். அமீர் முஆவியா (ரலி) காலம்முதல், முஸ்லிம்கள் பலதடவை இதை வெல்ல முயன்றார்கள்.

"என்னுடைய உம்மத்தில் (முஸ்லிம்களில்) எந்த முதற் சேனை, கய்ஸருடைய நகரைத் தாக்குகிறதோ அதை ஆண்டவன் ஆசிர்வதிப்பான்" என்பதும், "நீங்கள் நிச்சயமாய் குஸ்துன்யாவை வெல்வீர்கள். அதை வெல்லும் சேனையும் மேலானதே. அந்தச்சேனையின் தலைவரும் மேலானவரே" என்பதும் பெருமானார் திருமொழிகளாகும்.

எனவே, பெரிய பெரிய ஸஹாபாக்கள் தொடக்கத்திலிருந்து இந்தப் படையெடுப்புகளில் கலந்துகொள்ள முயன்றார்கள். ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி என்னும் நாயகத்தோழர் ஒரு படையெடுப்பில் கலந்துகொண்டு, இஸ்தம்பூல் நகரின் அருகில் நடந்த போரில் மரணமடைந்தார். அவருடைய அடக்க ஸ்தலம் இஸ்தம்பூல் நகரின் அருகில் இன்றுவரை இருக்கின்றது.

**இஸ்தம்பூல் வெற்றி:**—மறுநாட்காலையில்கோட்டைமதில் தாக்கப்பட்டது. ரோமர்கள் வெகு வீராவேசத்துடனும், மன உறுதியுடனும் போர்புரிந்தனர்.

ஸுல்தான் போர் முரசு கொட்டினார்! முஸ்லிம் சிப்பாய்கள் பெருங்கடலின் பேரலைகளைப்போல் வரிசை வரிசையாக நின்றார்கள்! நடந்தார்கள்! முன்னேறினார்கள்! அகழைக் கடந்தார்கள். கோட்டை மதில்மீது ஏற முயன்றார்கள். பீரங்கிகள் வேலைசெய்தன. இஸ்தம்பூல் கோட்டைச் சுவரில் பிளவுகள் உண்டாயின. முன் சென்றோரின் பிணக்குவியல் மீது பின்சென்றோர் நடந்து சென்றார்கள். ஆனால், உள்ளேயிருந்த ரோமர்கள், இவர்களை நுழையவிடாமல் தடுத்தார்கள். மீண்டும், மீண்டும், முஸ்லிம்கள் முன்னேறித் தாக்குவார்கள். எதிரிகள் தடுப்பார்கள். முஸ்லிம்கள் பின்னடைவார்கள். மறுபடியும் முன்னேறுவார்கள். இவ்வாறு பகலெல்லாம் கடும்போர் நடந்துகொண்டேயிருந்தது. இறுதியில், ரோமர்கள் மனந்தளர்ந்தார்கள்.

ரோம சக்ரவர்த்தி பதினொன்றாம் கான்ஸ்தன்தைனும் அவரது சேனாதிபதியான கியுஸ்தினானி என்பவரும் ஓரிடத்தில் நின்று, கட்டளைகள் அனுப்பிக்கொண்டு, போரை நடத்திக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது, திடீரென்று அந்தச் சேனாதிபதி கொல்லப்பட்டார். எனவே, சக்ரவர்த்தியும் சேனையும் மனந்தளர்ந்துவிட்டார்கள். இதைக்கண்ட துருக்கி சேனாதிபதி உடனே தமது சேனையை நடத்திக்கொண்டு முன்னேறினார். முஸ்லிம்கள் முன்னேறி எதிர்த்தார்கள். ரோம சக்ரவர்த்தியைக் கொன்றார்கள்.



உடனே, காவல் இல்லாத, கோட்டைக் கதவின் வழியாக "அல்லாஹு அக்பர்" என்று வான்முட்டும் முழக்கம் செய்துகொண்டு முஸ்லிம்கள் நகருக்குள் நுழைந்தார்கள்.

ஸுல்தான் முஹம்மத், தமது படையுடன் நுழைந்தார். ஆனால், "வெற்றி அளித்தது இறைவனே!" என்று புகழ்ந்தார். இறைவனுக்கு நன்றி செலுத்தினார். குதிரையிலிருந்து இறங்கி, இறைவனைப் புகழ்ந்துகொண்டு, நடந்து சென்றார். ஸோபியா என்னும் மாதாகோவிலுக்கு (Church of St. Sophia) வந்து அங்கு தொழுதார். அன்றுமுதல் அது முஸ்லிம்களின் வணக்க ஸ்தலமாக மாறியது.

"தோல்வியடைந்த ரோமரையெல்லாம் மன்னித்துவிட்டேன்" என்று விளம்பரம் செய்தார். "மத விஷயத்தில் பலவந்தம் கிடையாது" எனவும் தெரிவித்தார். கிறிஸ்தவ மதப் பாதிரியாரை அழைத்து, அவருக்கு மரியாதை செய்து பொன்னாடை போர்த்தி அனுப்பினார்.

நபிபெருமானாரவர்கள் மக்காவை வென்ற தினத்திலே—உலக சரித்திரத்திலேயே இரத்தம் சிந்தாமல் வெற்றி கிடைத்த தினத்திலே-எல்லாப் பகைவரையும் மன்னித்தார்களல்லவா? பெருமானாரின் ஜீவியத்தைப் பின்பற்றி நடந்த ஸுல்தான் இரண்டாம் முஹம்மத் தமது எதிரிகளை மன்னித்ததோடு, அவர்களுடைய மதத்தை அவர்களுடைய முறைப்படி பின்பற்றலாம் எனவும், நபிபெருமானார் நஜ்ரான் கிறிஸ்தவர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கையில் செய்ததைப்போலவே, மத விஷயங்களில் தாராள நோக்கத்துடன் நடந்துகொண்டார். என்னே அவர் பெருமை!

தோல்வியடைந்த ரோமர்களுடன் ஸுல்தான் வெகு கருணையுடனும், நேசத்துடனும், மத விஷயங்களில் தாராள நோக்குடனும் நடந்துகொண்டார். முஸ்லிம்கள் வருகிறார்கள் என்னும் பீதியில் நகரிலிருந்த பாதிரிமார்களும் இதர மக்களும் ஓடிப்போனார்கள். ஆனால், ஸுல்தான் அன்புடன் நடந்துகொள்ளுகிறார் என்று தெரிந்தவுடன் திரும்பி வந்

தார்கள். பாதிரிமார்களும் தலைமைப் பாதிரியும் வந்தார்கள். அவர்களுடைய மதத்தில் முஸ்லிம் அரசாங்கம் தலையிடா தென்று ஸுல்தான் வாக்குறுதி செய்தார்.

நபி பெருமானார் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது முன்னறிக்கையின் பிரகாரம் முஸ்லிம்கள் தொடர்ச்சியாக எண்ணூறு ஆண்டுகள் செய்த முயற்சியின் பலனாகக் கிடைத்த அந்த மகத்தான வெற்றியானது இஸ்லாமிய உலகெங்கும் வெகு குதூகலமாகக் கொண்டாடப்பட்டது. பாதுஷாக்களும், அமீர்களும், வலிமார்களும், நாயிப்களும், ஆலிம்களும், கவிஞர்களும், துருக்கி ஸுல்தான் இரண்டாம் முஹம்மதுக்கு ஆசி கூறினார்கள்.

முதலாவது, ஆசியாவில் புரூஸா (Brusa) நகரும், பிறகு, ஐரோப்பாவில் அட்ரியாநோபில் (Adrianople) நகரும் துருக்கியரின் தலைநகரங்களாக இருந்தன. இந்த வெற்றிக்குப் பிறகு, இந்த இஸ்தம்பூல் நகரை ஸுல்தான் தமது தலைநகராக்கினார். ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலியல்லாஹு அன்ஹு) உடைய அடக்கஸ்தலத்தின் அருகில் ஒரு ஜாமிஃ மஸ்ஜித் நிர்மாணித்தார். அந்த மஸ்ஜிதில் உஸ்மானிய ஸுல்தான்களின் முடிசூட்டு வைபவம் அக்கால முதல் நடக்க ஆரம்பித்தது. அப்பொழுது ஸுல்தான் முஹம்மத் உடைய வயது இருபத்தாறே.

இஸ்தம்பூலை வென்றதால், அவருக்கு "வெற்றி வீரர்"— "ஜெயசீலர்" என்றும் பட்டம் வந்தது. அத்த வெற்றி ஒன்றே அவரை உலக சரித்திரத்திலே முக்கியமான மாவீரர்களில், சரித்திரத்தில் திருப்பம் உண்டாக்கக்கூடிய ஒப்பற்ற பெரியோர்களது வரிசையில், ஒருவராக முன்னணியில் வைக்கின்றது.

இதையன்றி, அவருக்கு மேலும் பல வெற்றிகள் கிடைத்தன ஸர்பியாவையும், பாஸ்னியாவையும் தோற்கடித்தார். தர்பஸன் என்னும் கிரேக்கச் சிற்றரசையும், கர்ராமான் என்னும் துருக்கி சிற்றரசையும், தோற்கடித்து அந்தப் பிரதேசங்களைத் தமது ராஜ்யத்தில் சேர்த்துக் கொண்டார்.



கிரீமியாவின் பாதுகாவலரானார். வெனீஸ், ஜினோவா என்னும் இரண்டு இத்தாலியக் குடியரசுகளைச் சேர்ந்தவையும், துருக்கி கடற்கரையோரத்தில் இருந்தவையுமான பல தீவுகளை வென்றார். இத்தாலியை வென்று, கிறிஸ்தவ மதத்தின் தலைவரான போப் குருவின் இருப்பிடமாயிருந்த ரோமாபுரியை வென்று, அதைத் தமது தலைநகராக்கிவிட வேண்டுமென்று திட்டமிட்டு, ஒரு சேனையை அனுப்பினார். ஆனால், அதற்குள் அவர் இறந்து விட்டார்.

---

# 14. கமால் அதா துர்க்

## KAMAL ATA TURK

இருபதாம் நூற்றாண்டின் காற்பங்கு முடியுமுன் ஒரு விந்தை! ஓர் ஏழைக்குடும்பத்தில் பிறந்த முஸ்லிமைக்கண்டு கி. பி. 1923-ம் ஆண்டிலே அக்கால ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் அஞ்சின! அந்த ஏழை முஸ்லிம் கோரியபடியே செயலாற்றுவோம் என்றும் தலைகுனிந்தன! இங்கிலாந்து பிரான்ஸ், இத்தாலி, கிரீஸ், ஆகிய ஏகாதிபத்தியங்களையே அவர் தலைகுனியும்படி செய்தார். அவர் பெயர் முஸ்தபா கமால். "துருக்கியரின் தந்தை" என்னும் பொருள் உள்ள "அதா துர்க்" என்னும் பட்டமளித்தார்கள்.

வெகுகாலமாக துருக்கி சாம்ராஜ்யம் ஸுல்தான்களின் ஆட்சியில் இருந்தது. ருஷ்யா, பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி, கிரீஸ், பல்காரியா, ருமானியா, ஸர்வியா முதலிய ஐரோப்பிய அரசாங்கங்கள் தங்களுக்குள் பலமுறை, பலவிதமான இரகசிய உடன்படிக்கைகள் செய்துகொண்டு, துருக்கி சாம்ராஜ்யத்தை அழித்துத் தங்களுக்குள் பங்குபோடும் திட்டங்கள் தீட்டின. "ஐரோப்பாவின் நோயாளி" என்று துருக்கிக்கு நாமகரணமும் சூட்டின. எப்படியாயினும், இந்த ஆசிய மக்களை, முஸ்லிம்களை, வெள்ளையர் அல்லாதாரை, ஐரோப்பாவிலிருந்து துரத்திவிட முடிவு செய்தார்

கள். இந்தப் பகைமை தொடர்ந்தது. பல நூற்றாண்டுகளாக இந்த முயற்சி செய்யப்பட்டது. ஒருவரை ஒருவர் "கழுதையே", "நாயே" என்று திட்டுகிறார்களல்லவா! அதைப்போன்று, ஐரோப்பியர், "துருக்கனே" என்று திட்டுவார்கள். அவர்களுடைய இலக்கியங்களிலே, துருக்கியரைப்பற்றியும், துருக்கியரின் மதமான இஸ்லாத்தைப்பற்றியும், இஸ்லாத்தின் போதகரான நபி பெருமானாரைப்பற்றியும் இழிவாகவும் பொய்யாகவும் எழுதப்பட்டுவந்தது. இங்கிலாந்திலே பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்த முதல்மந்திரி கிலாட்ஸ்டன் என்பவர், "துருக்கியனே! ஐரோப்பாவைவிட்டு மூட்டை முடிச்சுகளுடன் வெளியே போ!" என்னும் பிரச்சாரத்தை ஆங்கிலப் பார்லிமெண்டின் தேர்தல் காலத்தில் ஆரம்பித்தார்.

1914-ம் ஆண்டில் ஆரம்பித்து 1919-ல் முடிவடைந்த முதல் உலகப்போரிலே, துருக்கி தோல்வியடைந்தது. இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி முதலான நேசதேசப் படைகள், துருக்கியின் தலைநகரான இஸ்தம்பூல் நகரைக் கைப்பற்றி, துருக்கி ஸுல்தானை ஒரு பொம்மை ராஜாவைப் போல் வைத்துக்கொண்டு, தங்கள் விருப்பப்படி அரசியல் நாடகம் நடத்தினார்கள். ஒருகாலத்தில், ஆப்பிரிக்கா கண்டத்தின் ஏறத்தாழ வடபாகம் முழுவதையும், ஐரோப்பாவில் இப்பொழுதுள்ள ருஷியாவின் தென்பாகமும், ருமானியா, ஹங்கேரி, சர்வியா, பல்காரியா, அல்பானியா, கிரீஸ்— அதாவது மத்திய ஐரோப்பாவில் ஆஸ்திரியா நாட்டின் தலைநகரான வியன்னா வரையில் உள்ள நாடுகளையும், ஆசியாவின் தென்மேற்குப் பாகத்தையும் ஆண்டுவந்த துருக்கி சாம்ராஜ்யம் ஐரோப்பிய வல்லரசுகளால் பங்குபோடப்பட்டுவிட்டது. "முஸ்லிம் ஏரி" என்று கூறப்பட்ட மத்தியதரைக் கடலை "இத்தாலிய ஏரி" என்று அழைக்கப்பட்டது. கிரேக்கப்படைகள் ஆசியத் துருக்கியில் நுழைந்து அட்டகாசம் செய்ய ஆரம்பித்தன. இஸ்லாமியப் பற்றுள்ளோரும், தமது தாய்நாட்டை நேசித்தோருமான துருக்கியர் இஸ்தம்பூலிலிருந்த ஐரோப்பிய ராணுவத்தால் கைதியாக்கப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள்.



நெருக்கடியான இந்த நிலையில் நாட்டுப்பற்றுள்ள சில துருக்கியரைத் தம்முடன் சேர்த்துக்கொண்டு, தமது நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டவரே முஸ்தபா கமால். அவரையும் தூக்கிலிட ஐரோப்பியர் திட்டமிட்டார்கள். ஆனால், அவர் இஸ்தம்பூலிலிருந்து தப்பி, ஆசியத் துருக்கியிலுள்ள அங்காரா நகருக்கு வந்தார். அங்கு தம்மைப் போன்ற தியாகிகளைத் திரட்டினார். ஒரு தேசியப் படையை உருவாக்கினார். இரகசியமாக மேற்கு நோக்கிச் சென்று இஸ்மிர் (ஸ்மர்னா) நகரிலே கிரேக்கரைத் தோற்கடித்துத் துரத்தி, அங்கிருந்து வெற்றிக்கோலம்பூண்டு இஸ்தம்பூலை நோக்கி வந்தார். அச்சமயம், இஸ்தம்பூலிலிருந்த ஐரோப்பிய வல்லரசுப் படைகள் அச்சங்கொண்டு, அவர் கோரிய நிபந்தனைகளை 1922 அக்டோபரில் மகாநாட்டில் ஏற்றுக்கொண்டு இஸ்தம்பூல் நகரைக் காலிசெய்து தங்கள் நாடுகளுக்குப் புறப்பட்டன.

முஸ்தபா கமால் பாஷா 1920 மார்ச்சு மாதம் சின்னாசியாவில் (அங்கோரா) நகரில் தேசியத் தலைவர்கள் அடங்கிய ஒரு மக்கள் பிரதிநிதிசபை (பார்லிமெண்ட்) நிறுவினார். அதற்கு அவரே ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கும் இதர மகாநாடுகளிலும் அவர் பேசும்பொழுது,

"சுயமரியாதையை இழந்துவிட்ட இனம் உலகினில் வாழ உரிமையற்றது......தியாகங்கள் செய்து நாட்டைப் பாதுகாக்காத இனமானது ஒரு கேவலமான இனமாகும்...... சுதந்திரத்திற்காகப் போரிடுவது நமது கடமையாகும்...... நமது நோக்கம் நாம் அடிமைகளாக வாழக்கூடாது என்பதே......இறைவன் நமக்கு உதவி செய்வான்...துருக்கியர் பெரும்பாலாராக உள்ள பிரதேசம் துருக்கியரால் ஆளப்பட வேண்டும். இதை எங்கள் எதிரிகள் ஒப்புக்கொண்டால் இந்த நிமிஷமே எங்கள் வாளை உறையில் போடத் தயார்.........இன்னும் சில ஆண்டுகளில் எல்லா முஸ்லிம் நாட்டாரும் சுவாதீனமடைந்து ஒரே முஸ்லிம் இனமாகத் தோன்றி, இஸ்லாத்தின் புகழை நிலைநாட்டுவார்கள் என்பது எனது நம்பிக்கை. இத்தகைய அழகானதொரு காட்சி இன்று என் எதிரில் தோற்றமளிக்கின்றது......" எனக்கூறுவார்.

இதற்கிடையில், ஐரோப்பிய வல்லரசுகளின் அடிமையாயிருந்த ஸுல்தானுடைய அரசாங்கம், முஸ்தபா கமால் பாஷாவுக்குத் தூக்குத் தண்டனை விதித்தது.

எங்கும் எதிரிகள்! துருக்கி அரசாங்கமே எதிரி! கிரேக்கரும் அர்மீனியரும் தேசீயத் துருக்கியரை எதிர்த்தார்கள். பிரான்ஸ் எதிர்த்தது. அதற்கப்பால் சமரதான உடன்படிக்கை செய்துகொண்டது. இங்கிலாந்தும் எதிர்த்தது. ஆனால், போல்ஷ்விக் கொள்கையுள்ள ருஷ்யா, தேசீயத் துருக்கியை அங்கீகரித்து நேசத்துடன் நடந்துகொண்டது. இவ்வாறாக எல்லா ஆபத்துக்களிலிருந்தும் தேசீயத் துருக்கிக்கு விடுதலை கிடைத்தது.

**ஆட்சிமுறை:**—முஸ்தபா கமால் பாஷா ஜனநாயக ஆட்சிமுறையை விரும்புவோர்.

"கருத்துச் சுதந்திரமும், பேச்சுச் சுதந்திரமும் அளிக்கின்ற நம் இஸ்லாம் மார்க்கச் சட்டப்படி, நாம் நமது மக்களின் பிரியப்படியே நிர்வாகத்தை நடத்தவேண்டும். ஆகையால், நமது மக்களே நமது நாட்டின் கதியையும் விதியையும் தீர்மானித்துக்கொள்ளும்படி விட்டுவிட்டோம்" எனக் கூறி, தாம் சர்வாதிகாரியாக இருக்க மறுத்துவிட்டார். துருக்கிக் குடியரசை, "மக்களது ஆட்சி, மக்களுக்காக ஆட்சி, மக்களால் நடத்தப்படும் ஆட்சி" என்று கூறலாம்.

**சீர்திருத்தங்கள்:**—முஸ்தபா கமாலின் தலைமையில் நிறுவிய தேசீயத்துருக்கிய அரசாங்கமானது, மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தைக் குறைத்து, ஸ்தல சுய ஆட்சி முறையை அதிகரித்தது. கல்வி, ரயில்வே, தந்திதபால், விவசாயம் முதலிய துறைகளில் அரசாங்கம் அளவுகடந்த கவனத்தைச் செலுத்தியது. யுத்த தளவாடங்கள் நவீனமுறையில் தயாரிக்கப்பட்டன. இளைஞருக்கு ஆகாயவிமானம் ஓட்டும் பயிற்சி அளிக்கப்பட்டது. இவ்வாறு பயிற்சி கொடுக்கப்பட்ட சேனையானது தன்னைவிடத் தளவாடங்களிலும் எண்ணிக்கையிலும் மிகைத்திருந்த கிரேக்க சேனையைத் தோற்கடித்தது. "துருக்கித் தளபதிகள் ராணுவத் திறமையில் ஐரோப்பியப் படைத்தலைவர்களைவிட அணுவளவும் குறைந்தோரல்லர்" என்று ஆங்கிலத் தளபதி டவுன்ஸ்ஹென்ட் (Generel Townshend) என்பவர் சான்று கூறுகின்றார்.



பல நூற்றாண்டுகளாக துருக்கி சாம்ராஜ்யத்தில் யுத்தமில்லாமலிருந்த காலமே கிடையாது. ஆகையால், முஸ்தபா நிர்மாண வேலையில் இறங்கினார். "இருபத்தைந்து ஆண்டுகள் நம் நாடு போரில் தலையிடாமல் இருந்தால், நாம் நிர்மாண வேலையில், நாகரீக முன்னேற்றத்தில், பண்பாட்டில், கலைகளில், எவருக்கும் பின்னடைந்தோர் அல்லோம் என்பதை உலகிற்குக் காட்டுவோம்" என்று முஸ்தபா கமால் பாஷா சவால் விடுத்துக்கூறுவார்.

முதலாம் உலக மகா யுத்தத்திற்குப் பிறகு துருக்கிக்கும் துருக்கியருக்கும் புத்துயிர் கொடுத்தவர் அதா துர்க். ஸுல்தானுடைய ஆட்சியை நீக்கி துருக்கியைக் குடியரசாக்கியவர் அதா துர்க். அந்த அரசாங்கத்தை மதச்சார்பற்ற அரசாங்கமாக்கியவர் அதா துர்க். துருக்கி மொழியை லத்தீன் எழுத்தில் எழுதும்படி உத்திரவிட்டவர் அதா துர்க். அந்தக் குடியரசின் முதல் ஜனாதிபதி அதா துர்க். மேல்நாட்டாரின் ஆயுதங்களால் மேல்நாட்டாரைத் தோற்கடித்தவர் அதா துர்க். தமது நாட்டின் நிலையை உன்னதமாக்கியவர் அதா துர்க். தற்கால விஞ்ஞானக் கல்வியைத் துருக்கியருக்கு அளித்தவர் அதா துர்க். "தூங்கும் மக்களைத் தட்டி எழுப்புவது வெகுகஷ்டமான வேலைதான். ஆனால், நமது தூக்கத்திலிருந்து நாம் எழுந்து, விழிப்பிலே இருக்கத் தீர்மானித்துக்கொண்டோம்" என்று அவர் கூறினார்.

கமால் அதா துர்க் போன்ற அஞ்சா நெஞ்சர் உலக சரிதையில் எப்பொழுதாவது தோன்றுகின்றார்கள். அவரது அஞ்சா நெஞ்சையும், அபூர்வப் பண்புகளையும் தமது இனத்தாருக்காகவும், கீழ்நாட்டு விடுதலைக்காகவும் பயன்படுத்தினார். அதனால்தான் முஸ்லிம்களும், சுவாதீனமிழந்த ஆசியா, ஆப்பிரிக்கா, கண்டங்களைச் சேர்ந்த மக்களும்

அவரைப புகழந்து பின்பற்றுகிறார்கள். இந்த மகாமேதை அன்று அன்காராவில் கிளப்பிவிட்ட சுதந்திரப் புயலானது இன்று உலகெலாம் வீசுகிறது. இந்தோனேஷியா, மலேசியா, வியட்நாம், பர்மா, இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், லப்னான், யர்தன், குவய்த் ஸஊதி, அரபியா, எமன், இராக், ஸிரியா, எகிப்து, ஸூதான், லிபியா, தூனிஸ், மொரோக்கோ, அல்ஜீரியா, காமரூன், மத்திய ஆப்ரிகா, சாத், தஹோமி, கினியா, ஐவரி கோஸ்ட், மாலி, மாரிடானியா, நைஜர், நைஜீரியா, செனிகல் ஸிர்ரா லியோன், ஸோமாலி, தாங்கநீகா, ஸன்ஸிபர், தோகோ, முதலிய நாடுகள் அரும்பாடுபட்டு அந்நிய ஆதிக்கத்தின் பிடாப் பிடியிலிருந்து இப்பொழுது விடுதலை பெற்றுத் திகழ்கின்றன.

பல நூற்றாண்டுகளாக. அவமதிக்கப்பட்டுத் தீங்கிழைக்கப்பட்ட, குற்றமற்ற துருக்கியர், மேல்நாட்டாரின் வாக்குறுதிகளை நம்பி மோசம்போன இந்த மேன்மையான மக்கள், தங்கள் நாட்டின் புராதன மேன்மையை இழந்து தங்கள் வாழ்வுக்கும் நாகரீகத்திற்கும் நாசகாலம் வந்து விட்டதோ வென்று அஞ்சிக்கொண்டிருந்த காலத்தில் தங்களுக்கிடையில் புத்துயிரை அளிக்க வந்த இவ் வீரச் சிங்கத்தைப் பின்பற்றி ஏன் நடக்கமாட்டார்கள்?

கி. பி. 1880-ல் பிறந்த கமால் அதா துர்க், சிறப்புடன் ஆட்சி செய்து 1938, நவம்பர் மாதம் சிறப்புடன் இறந்தார். அவரது மரணம் துருக்கிக்கு மட்டுமல்ல, முஸ்லிம் உலகத்திற்கும், அகில உலகத்திற்கும் நஷ்டமென்றே கூறலாம். அவரது வாழ்க்கை வரலாறு பொதுவாகக் கீழ் நாட்டாருக்கும், சிறப்பாக முஸ்லிம்களுக்கும் விடுதலைப்பாதையிலே சிறந்ததொரு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

# 15. முடிவுரை

குர்ஆனையும் பெருமானாரின் வாழ்க்கை முறையையும் முஸ்லிம்கள் பின்பற்றி நடந்தபொழுது அவர்களுக்கு வெற்றி கிடைத்தது. ஆனால், அதை மறந்தபொழுது அவர்களுக்குத் தோல்வி கிடைத்தது.

முதலாவது, பெருமானார் (ஸல்) காலத்திலே, மக்காவாசிகள் மதீனாவுக்கு வந்து முஸ்லிம்களை அழிப்பதற்காகப் பல தடவை முயன்றார்கள். அதில் உஹுத் என்னுமிடத்தில் அவர்கள் முஸ்லிம்களுக்கு நஷ்டமுண்டாக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இதற்குக் காரணம் முஸ்லிம்களே. ஏன்? உஹுத் போர் ஆரம்பமாகுமுன், உஹுத் மலையின் பின்புறமிருந்து, எதிரிகள் பின்பக்கமாக வந்து திடீர் தாக்குதல் செய்யக்கூடுமென்று கருதி, அங்குள்ள கணவாயில் முஸ்லிம்களை நிறுத்தி, "வெற்றி கிடைத்தாலும் தோல்வி கிடைத்தாலும் நீங்கள் இந்த இடத்தைவிட்டு நகர்ந்து செல்லக்கூடாது!" என்று பெருமானார் கட்டளையிட்டிருந்தார்கள். ஆனால், அன்று நடந்த போரில் மக்காவாசிகள் தோல்வியடைந்து பின்னேறியவுடன், போர்க்களத்தில் சிறைப்பொருள் சேகரிக்கும் ஆசையில், அந்தக் கணவாயில் காவலுக்கு நின்ற முஸ்லிம்கள் — நபி பெருமானாரின் கட்டளையை மறந்து — நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து வந்து விட்டார்கள். அச்சமயம், எதிரிப் படைத் தலைவர்களில் ஒருவரான காலித் பின் வலீத் என்பவர் அதே கணவாயின் வழியாக ஒரு படையுடன் வந்து முஸ்லிம்களைப் பின்புறமிருந்து தாக்கிப் பெரிய நஷ்டம் விளைவித்தார்.

இரண்டாவது, முஸ்லிம்கள் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் தென்மேற்குப் பகுதியை வென்று, வடக்கில் பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸ் நகரை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில், இதே சிறைப் பொருள் ஆசையும், தலைவரைக் கீழ்ப்படியாமையும்,

ஒற்றுமையின்மையும், சார்லஸ் மார்டல் என்பவரது நாகரீக மற்ற கூட்டத்தாரால் - தூர்ஸ் (Tours) என்னுமிடத்தில், முஸ்லிம்களுக்குக் கிடைக்கவேண்டிய வெற்றியானது தோல்வியாக மாறியது.

ரோம ராஜ்யத் தலைநகரான இஸ்தம்பூலிலும் முஸ்லிம் களுக்கு மஸ்லமா என்ற தளபதியின் தலைமையில் தோல்வி ஏற்பட்டது. பிரான்ஸிலும் இஸ்தம்பூலிலும் முஸ்லிம்கள் ஒற்றுமையுடனும், சிறைப் பொருள்கள்மீது பேராசை இல்லாமலும் நடந்துகொண்டிருந்தால் இன்று சரித்திரம் வேறு விதமாக மாறியிருக்கலாம்.

குர்ஆன் வேதம் புனித வேதம். அதன் உதவியால் அலக்சாந்தரின் சாம்ராஜ்யத்திலும் பெரிதான, ரோம ராஜ்யத்திலும் விஸ்தீரணமான, உலகை வெகு சுருக்கமான கால அளவில் முஸ்லிம்கள் வென்றார்கள். பீனீஷியர் ஆசியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு வியாபாரிகளாக வந்தார்கள். யூதர்கள் அகதிகளாகவும் போர்க்கைதிகளாகவும் வந்தார்கள். ஆனால், முஸ்லிம்கள் குர்ஆனை வழிகாட்டியாகக்கொண்டு உலக மக்களுக்கு ஒளி கொண்டுவந்து ஐரோப்பாவுக்குக் கொடுத்தார்கள். கிழக்கு நாடுகளுக்கு அறிவுச்சுடர் கொடுத்ததைப் போன்றே, இருள் சூழ்ந்த ஐரோப்பாவுக்கு தத்துவக்கலை, மருத்துவம், வான சாஸ்திரம் முதலியவற்றைக் கற்பித்தார்கள். தற்கால நாகரீகத்தின் இராஜபாட்டையைக் காண்பித்தார்கள். மனித வாழ்க்கையின் இன்பத்திலும் துன்பத்திலும், செல்வத்திலும் வறுமையிலும், வாலிபத்திலும் வயோதிகத்திலும், நலத்திலும் நோயிலும், உறுதுணையாக, இருண்ட இரவில் வானிலிருந்து பிறக்கும் இடிமின்னல்போன்று ஒளி வீசி குர்ஆன் வசனங்கள் வாழ்க்கைக்கு உயர்வு கொடுத்தன.

**கலைகள்:** இந்தப் புனித வேதத்தின் உதவியால், இலக்கியம், கவிதை, அறிவியல், பொருளியல், மருத்துவம், தத்துவம், தர்க்கம், அறவியல் முதலிய பல துறைகளிலும்



நூற்றுக்கணக்கான முஸ்லிம் எழுத்தாளர்கள் தோன்றினார்கள். தென் ஐரோப்பியக் கிறிஸ்தவர்களுக்கு கவிதைத் துறையில் முஸ்லிம் கவிஞர்கள் முன்மாதிரியாக இருந்தார்கள்.

சீனு சென்றாயினும் கல்வியையும் அறிவையும் தேடும்படி பெருமானார் கற்பித்ததைப் பின்பற்றி இலக்கியத்திலும் விஞ்ஞானத்திலும் முஸ்லிம்கள் முன்னேறினார்கள். ஐரோப்பா இருட்டிலும் அநாகரீகத்திலும் இருந்த அக்காலத்திலே, முஸ்லிம்கள் முன்னேற்றப்பாதையின் முதற்படியில் இருந்தார்கள். பக்தாத், கார்டோவா, (கர்தபா) கிரனடா (கர்னத்தா) ஸாலர்னோ, டமஸ்கஸ், மலாகா, முதலிய பல்கலைக் கழகங்களிலிருந்து அறிவுச்சுடர் உதித்தது. அங்குள்ள ஆசிரியர்கள் தத்துவக்கலையையும், செயல் முறை விஞ்ஞானத்தையும் உலகிற்குக் கற்பித்தார்கள்.

ஐரோப்பியருக்குப் பகுத்தறிவு என்னும் பொக்கிஷம் முஸ்லிம்களால் கொடுக்கப்பட்டது. இப்னு பாஜா, இப்னு ருஷ்த் என்ற முஸ்லிம் மேதைகளது நூல்களின் மூலமாக ஐரோப்பாவில் பகுத்தறிவு பரவியது. சுய அறிவுடன் ஆராய்தல் கிறிஸ்தவ ஐரோப்பாவில் பெரும்பாவமாகக் கருதப்பட்டு கிறிஸ்தவ மதத் தலைவரான போப் பாதிரியாரால் தடுக்கப்பட்டது.

இஸ்தம்பூலிலும், பிரான்ஸ் நாட்டிலும் முஸ்லிம்கள் இரண்டு தோல்விகளைக் கண்டிராவிட்டால், இந்த அறிவுப் பெருக்கும், கலைகளும், விஞ்ஞானமும், பகுத்தறிவும் அக்கால ஐரோப்பாவிலே பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நுழைந்திருக்கும். ஏன், இன்று உலகமே வேறுவிதமாக இருந்திருக்கும். எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னரே ஐரோப்பாவில் கலைகளின் மறுமலர்ச்சியும் நாகரீகமும் அறிவுச் சுதந்திரமும் உண்டாகியிருக்கும். ஐரோப்பாவில் கத்தோலிக்கருக்கும் பிராதஸ்தாந்துகளுக்குமிடையில் போர்கள் ஏற்பட்டு இலட்சக்கணக்கான கொலைகள் நடந்தது தடுக்கப்

பட்டிருக்கும். ஐரோப்பிய மதவெறியர் அமெரிக்கா சென்று அஸ்தக் (Aztecs) இனத்தாரையும், இன்கா (Incas) இனத்தாரையும் மதத்தின் பெயரால் வெட்டித் தள்ளியது நின்றிருக்கும். முப்பதாண்டு மதப்போர் ஐரோப்பாவில் நடந்திராது. எண்ணூறு ஆண்டுகள் முஸ்லிம்களால் நாகரீகம் பெற்ற ஸ்பெய்ன் நாடானது இன்று நாகரீக வறுந்தரமாக மாறியிராது.

அறிவுத்துறையிலும் பகுத்தறிவிலும் விடுதலை பெறும்படி ஐரோப்பாவுக்குப் பாடம் கற்பித்தது இஸ்லாமே. முஸ்லிம்கள் உண்மையாக குர்ஆனைப் பின்பற்றிய காலத்தில் அறிவையும் நாகரீகத்தையும் பாதுகாத்து, அபிவிருத்தி ஏற்படும்படி செய்து, மக்கள் தங்களது பகுத்தறிவைப் பயன்படுத்தி ஆராய்ச்சி செய்யும்படி தூண்டினார்கள். ஆனால், இஸ்லாமியர், குர்ஆனை மறந்து பிறமுறைகளைக் கையாண்டவுடன் அவர்களது முன்னேற்றம் தடைப்பட்டது.

முஸ்லிம்களின் வீழ்ச்சிக்கு இன்னொரு முக்கியமான காரணம் உண்டு. முஸ்லிம்களால் பூங்காவனமாக்கப்பட்ட ஸ்பெய்ன் நாட்டை ஐரோப்பாவின் கிறிஸ்தவப் பற்றும், பித்தும், மதவெறியும் வறுந்தரமாக்கிவிட்டது. அதனால் முஸ்லிம்களுக்கே மகாபெரிய நஷ்டம் உண்டாயிற்று பிறகு, ஆப்பிரிக்காவிலே ஹிஜ்ரி ஐந்தாம் (கி. பி. பன்னிரண்டாம்) நூற்றுண்டிலிருந்து ஐநூறு ஆண்டுகள்வரை மத வெறியர்களாலும். அராஜகத்தாலும் முன்னேற்றம் தடைபட்டது. மத்திய ஆசியாவிலே, தைமூர் அரச வம்சத்திற்குப் பிறகும், அதைப்போன்று ஈரான் நாட்டிலும், நாகரீகத்திற்குச் சாவுமணி அடிக்கப்பட்டது.

மேற்கில், துருக்கி சாம்ராஜ்யமான ஐரோப்பியருடன் எப்பொழுதும் தற்காப்புப் போர்கள் செய்துகொண்டிருக்கும்படியாக நிர்ப்பந்திக்கபட்டது. இந்தச் சூழ்நிலையில் நாகரீகமும் பணபாடும் வளரமுடியாத நிலைமை ஏற்பட்டது. அவ்வாறு இருந்தும், அத்தனை நூற்றுண்டுகளாக அழியாமல் இருந்தது துருக்கியரின் தனிப்பெருமையும் தனிச் சிறப்புமாகும். அத்தகைய நிலை வேறெந்த நாட்டிற்கும் ஏற்பட்டிருந்தால் அது இருந்த இடம் தெரியாமல் மறைந்திருக்கும்.



கி. பி. 1258 ல் இஸ்லாமிய அரசியலுக்கும், நாகரீகத்திற்கும் தலைநகரமாயிருந்த பக்தாதை மங்கோலியர் அழித்தார்கள். அரிய நூல்களெல்லாம் அவர்களால் தீக்கிரையாக்கப்பட்டன. தஜ்லா நதியில் வீசப்பட்டன. ஐந்து நூற்றுண்டுகளாக முஸ்லிம்கள் சேகரித்த இலக்கிய, விஞ்ஞானக் களஞ்சியங்கள் அனைத்தும், உலகிற்குப் பயன் படாமல் மறைந்தன. அரண்மனைகள், பள்ளிவாயில்கள், சமாதிகள் எல்லாம், தீக்கிறையாக்கப்பட்டோ, இடித்துத் தள்ளப்பட்டோ அழிந்தன. கலாசாலைகளில் ஆசிரியர்கள் கொலை செய்யப்பட்டார்கள். மூன்று நாட்களாக பக்தாத் நகரில் மங்கோலியர் தொடர்ந்து இந்தக் கொலையில் ஈடுபட்டார்கள். பக்தாதில் மட்டுமல்ல, இஸ்லாமிய நாடுகளிலெல்லாம் நாசவேலையில் மங்கோலியர் ஈடுபட்டார்கள். இத்தகைய நஷ்டம் உலகில் வேறெந்த நாட்டாருக்கும் இனத்தாருக்கும் ஏற்படவில்லை. அவ்வாறிருந்தும், இஸ்லாமும் முஸ்லிம்களும் இன்று தலைதூக்கி நிற்பது ஓர் அற்புதமாகத் தோன்றுகின்ற தல்லவா?

இந்த மங்கோலியத் தாதாரிகள் மத்திய ஆசியாவிலிருந்து வந்து கி. பி. பதினமூன்றும் நூற்றுண்டிலே இஸ்லாமிய ராஜ்யங்களையும் கலைகளையும் அழித்தார்கள். ஆனல், பிறகு, அவர்களே முஸ்லிம்களாகி விட்டார்கள். அப்பாஸி கலீபாக்களின் சாம்ராஜ்யமும் அதன் தலைநகரான பக்தாதும் அழிந்தவுடன் இஸ்லாம் அழிந்து விட்டதா? இல்லை. இஸ்லாத்தை அழிக்க வருகின்றவர்களே அதன் பாதுகாவலர்களாகி விட்டார்கள்.

"உலக வரலாற்றிலே இஸ்லாமிய எழுச்சியானது அதியாச்சரியமான நிகழ்ச்சியாகும். முன்னர் தாழ்ந்த நிலையில்

Q7 W x
N59-2



இருந்த ஒரு நாட்டிலிருந்தும் ஓர் இனத்தாரிடமிருந்தும் தோன்றிய இஸ்லாமானது ஒரு நூற்றுண்டிற்குள் ஒரு பாதி உலகில் பரவியது, மாபெரிய சாம்ராஜ்யங்களைச் சிதறடித்தது. பழங்கால மதங்களைத் தோற்கடித்தது. மக்களின் ஆத்மாவை மாற்றியமைத்து ஒரு புத்துலகை—இஸ்லாமிய உலகை—நிர்மாணித்தது'' ஸ்டோடார்ட்.

இன்று மலேயா, இந்தோனேஸியா, இராக், ஈரான், அப்கானிஸ்தான், அரேபியா, ஸிரியா, துருக்கி, எகிப்து, ஸூதான், திருப்போலி, அல்ஜீரியா, தூனிஸ், மொராக்கோ போன்ற நாடுகளில் மறுமலர்ச்சியின் குறிகள் காணப்படுகின்றன. ஆனால், அரசியல் மறுமர்ச்சி மட்டும் போதாது ஆத்மீக மறுமலர்ச்சி வேண்டும். ஸையித் ஜமாலுத்தீன் அப்கானீ, முஹம்மத் அப்துஹ், அல்லாமா இக்பால், முதலிய பேரறிஞர்கள், '' குர்ஆனைப் பின்பற்றுங்கள்.'' ''முஹம்மத் (ஸல்) நபியைப் பின்பற்றுங்கள்.'' என்கிறார்கள். 'முஹம்மத் (ஸல்) நபியவர்களை விசுவாசத்துடன் பின் பற்றினல், இந்த உலகம் ஒரு பொருளா? லவ்ஹும் கலமும் - அதாவது இறைவனுடைய சக்தியனைத்தும் அவனது பிரதிநிதியான மனிதனுக்கே கொடுக்கப்படும்'' என்று அல்லாமா இக்பால் கூறுகிறார்.

இன்னல்லாஹ லா யுகய்யரு மா பி கவ்மி ஹத்தா யுகய்யிரு மா பி அன்புஸிஹிம்—தங்களைத் தாங்களே மாற்றிக்கொள்ளாத வரையில் அல்லாஹ் மெய்யாகவே ஓர் இனத்தாரை மாற்றமாட்டான்.

—குர்ஆன்

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 110919
EGMORE

## ஆசிரியர் : ஸையித் இப்ராஹீம் எம். ஏ., எல். டி.

| எண் | நூல் | ரூ. பை. |
|---|---|---|
| 1 | முஹம்மத் (ஸல்) பரிசுப் பதிப்பு | 3–00 |
| | ,, மலிவுப் பதிப்பு | 2–00 |
| 2 | ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) | 1–50 |
| 3 | ,, உமர் ,, | 1–50 |
| 4 | ,, உஸ்மான் ,, | 1–50 |
| 5 | ,, அலீ ,, | 1–50 |
| 6 | ,, காலித் பின் வலீத் ,, | 1–50 |
| 7 | ,, ஸல்மான் பார்ஸி ,, | 0–75 |
| 8 | ,, பிலால் ,, | 0–75 |
| 9 | ஸுல்தான் ஸலாஹுத்தின் | 1–00 |
| 10 | தளபதி தாரிக் பின் ஜியாத் | 0–75 |
| 11 | உத்தமர் உமர் பின் அப்துல் அஜீஸ் | 0–75 |
| 12 | ராபியா பஸ்ரீ (ரஹ்) | 0–75 |
| 13 | இமாம் அபூ ஹனீபா ,, | 0–75 |
| 14 | இமாம் கஸ்ஸாலீ ,, | 1–00 |
| 15 | மன்ஸூர் ஹல்லாஜ் ,, | 1–00 |
| 16 | இக்பாலின் முறையீடும், மறுமொழியும் | 0–75 |
| 17 | இஸ்லாம் காட்டிய அரசியல் | 1–00 |
| 18 | உலகம் போற்றும் உத்தம நபி | 1–00 |
| 19 | இஸ்லாமியக் கதை விருந்து | 0–75 |
| 20 | முஸ்லிம் கதைக் கொத்து | 0–50 |
| 21 | அண்ணல் நபி | 0–50 |
| 22 | இஸ்லாமிய வீரப் பெருமக்கள் | 1–00 |
| 23 | குர் ஆன் மணி மொழிகள் | 1–00 |
| 24 | நபிநாயகம் நல்லுரைகள் | 0–75 |
| 25 | வளர்மதி நீதிக்கதைகள் | 0–50 |
| 26 | பாத்திமா நாயகி | 1–00 |
| 27 | இஸ்லாமும் அதன் உட்பிரிவுகளும் | 1–00 |
| 28 | ஜிஹாத் | 0–50 |
| 29 | ஸஹாபாக்கள் (நாயகத் தோழர்கள்) சிறப்பு | 0–50 |
| 30 | கதீஜா பிராட்டியார் | 1–00 |
| 31 | அரபுநாட்டுக் கதைகள் | 0–75 |
| 32 | பாரசீகக் கதைகள் | 0–75 |
| 33 | பாலர் கதைகள் | 0–50 |
| 34 | நகைச்சுவைக் கதைகள் | 1–00 |
| 35 | இந்தியக் கதைகள் | 1–00 |
| 36 | சிறுவர் அறிவுரைகள் | 0–25 |
| 37 | அலீ இப்னு ஸீனா | 0–75 |
| 38 | இப்னு கல்தூன் | 0–75 |
| 39 | பாலர் அறிவுரைகள் | 0–25 |
| 40 | ஆயிஷா (ரலி) | 1–75 |
| 41 | அப்துல் காதிர் ஜீலானீ | 1–50 |
| 42 | நாற்பெருங் கலிபாக்கள் | 2–00 |
| 43 | உமய்யாக்கள் | 2–00 |
| 44 | தியாகம் (ஜுனைத் பக்தாதீ) | 0–60 |
| 45 | இறைதூதர் | 0–35 |
| 46 | வளர்மதி சிறு கதைகள் | 0–30 |
| 47 | ,, ஒழுக்கக் கதைகள் | 0–40 |
| 48 | இறைநேசர் (அவ்லியா) முதற்பகுதி | 0–40 |
| 49 | ,, இரண்டாம் பகுதி | 0–40 |
| 50 | இஸ்லாம் வினா-விடை I | 0–40 |
| 51 | ,, வினா-விடை II | 0–40 |
| 52 | பெருமானார் பொன்மொழிகள் | 2–00 |
| 53 | அப்பாஸிகள் I | 2–00 |
| 54 | அப்பாஸிகள் II | 2–75 |
| 55 | உவைஸ் கரனீ | 0–75 |
| 56 | அபூதர் கப்பாரீ | 0–75 |

**வளர்மதி பதிப்பகம், தென்னூர், திருச்சிராப்பள்ளி-1.**